தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஓகஸ்ட் 2005



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முன், பின் அட்டை ஓவியங்கள்: ஓவியர் மகா




"நாங்கள் ஒட்டுப்படைகளை பாதுகாக்கவில்லை" - சந்திரிகா - செய்தி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உள்ளே...

எரிமலை



04 தமிழர் உரிமைப்போரிற்கு எதிரான ஒட்டுப்படைப் போர்



08 மஹாநாம தேரர் மாண்மியம்





20 கனவு மெய்ப்படும்



12 நேர்காணல்: ஓவியர் மகா

### கட்டுரைகள்

நாதன் ........ 04

மு.பொ ........ 08

தாவீத் ........ 20

### நினைவலைகள்

வேரற்கேணியன் ........ 22

### உண்மைப்பதிவு

மணலாறு விஜயன் ........ 46

### அணையாததீபம்

வீரவேங்கை அருணந்தி ........ 31

### சிறுகதைகள்

கருமணி ........ 29

மல்லீஸ்வரி ........ 32

சித்திரா சுதாகரன் ........ 36

ந.கிருஷ்ணசிங்கம் ........ 40

தாமரைச்செல்வி ........ 42

சாந்தன் ........ 49

### நேர்காணல்

ஓவியர் மகா ........ 12

### கவிதைகள்

எ.ஜோய் கவிதைகள் ........ 18

மெலிஞ்சி முத்தன் ........ 27

ந.ஹேமராஜ் கவிதைகள் ........ 34

திருமலைச்சந்திரன் ........ 35

### தொகுப்பு

நினைவுக்குறிப்பு ........ 50

மீள்பார்வை ........ 51

நிகழ்வும் பதிவும் ........ 52

பதிவுகள் ........ 54



www.tamileelamarchive.com



## சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங் காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீள நடைபோட எமது விடுதலை இயக்கம் தயாராக இல்லை.

சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக்கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது. இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது பற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

2004ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து.....



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

# தலைவாசல்

## சர்வதேச சமூகத்திற்கு ஈழத்தமிழர் விடுக்கும் அறைகூவல்

சிங்கள அரசியல் தலைவர்களை இனிமேலும் நம்புவதற்கு தயாரில்லை என்ற நிலையில் ஈழத்தமிழர்கள் சர்வதேச சமூகத்திடம் நியாயம் கேட்டு நிற்கின்றனர். ஏமாறியது போதும் இனிவரும் காலத்தில் நாம் புத்தியாய் நடப்போம். என்ற நிலையில் நாம் இருக்கின்றோம். இலங்கை சுதந்திரம் பெற்ற நாட்தொட்டு தமது பெரும்பான்மை பலத்தின் காரணமாக எண்ணிக்கையில் குறைந்த தமிழர்களை சிங்கள இனத்தவர்கள் நசுக்கிவருகின்றனர். இதைக் குறிக்கும் விதத்தில் தம்மை 'மகாஜாதி' என்றும் ஈழத்தமிழர்களை 'சுலு யாதி' என்றும் குறிப்பிடுகின்றனர். ஜாதிக ஹெல உறுமய கட்சி தலைவரான பௌத்த பிக்கு அத்துறுலியே றத்தான தேரர் மிக அண்மையில் "இந்த நாடு முழுவதும் சிங்கள ஜாதிக்குச் சொந்தம். சிறுபான்மை இனங்களுக்கு சிறுபான்மை உரிமைகள் மாத்திரம் வழங்கப்படும்" என்று கூறியுள்ளார்.

பேசித்தீருங்கள் என்று கூறி எம்மை பேச்சுவார்த்தை மேசையில் இருத்திய மேற்கு நாடுகள் இப்போது ஏன் பேசாமல் இருக்கின்றன. சுனாமி நிவாரணப் பணிக்காக உருவாக்கப்பட்ட பொதுகட்டமைப்பு ஒப்பந்தம் இப்போது ஜனாதிபதியும் உச்சநீதி மன்றமும் கூட்டாக நடத்திய சதியால் செயல் இழந்துவிட்டது. தேசிய நன்மைக்காக சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதி எவ்வித நடவடிக்கையும், ஒப்பந்த உறவையும் மேற்கொள்ளலாம் என்று சிறீலங்கா அரசியல் சாசனம் கூறுகிறது. ஆனால் உச்சநீதிமன்றம் இதைக் கருத்தில் எடுக்காமல் பொதுகட்டமைப்பு ஒப்பந்தம் அரசியல் சாசனத்துக்கு முரணானது என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. நான் ஒப்பந்தத்தில் ஒப்பம் இடுகிறேன். நீ அதை செயல் இழக்கச்செய்துவிடு என்று ஜனாதிபதியும் உச்ச நீதியரசர் சரத் என் சில்வாவும் கூட்டாக சதி செய்கிறார்கள். ஈழத்தமிழர்களை ஏமாளியாக்கினால்ப் போதும் என்பதுதான் சதிகாரர்களின் நிலைப்பாடு.

ஜூலை 27. 2005ம் நாள் ஈழத்தமிழர் வரலாற்றில் மிகமுக்கியமான தினமாகும். 1977ம் ஆண்டில் பிரிந்துபோகும் உரிமையையும், தனிநாட்டுக் கோரிக்கையையும் வலியுறுத்தும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். எமது விடுதலைப்போர் இத்தீர்மானத்தின் தொடர்ச்சியாக நடக்கின்றது. மேற்கூறிய ஜூலை 27ம் நாளில் நாம் வவுனியா மண்ணில் நின்று மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளோம். தமிழீழத்தின் எல்லாப்பகுதியிலிருந்தும் வருகை தந்திருந்த இரண்டாயிரம் வரையிலான பேராளர்கள் வவுனியா மாநாட்டில் கலந்துகொண்டனர். முஸ்லீம் சமூகத்தின் விழிப்புமிக்க இளைய தலைமுறை தலைவர்களும் வருகை தந்ததோடு மேடைப் பேச்சுக்களிலும் முக்கிய பங்கேற்றனர்.

பிரிட்டிசாரிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு கற்றுக்கொடுத்த பொன் .அருணாசலத்தை 1920 இல் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றினார்கள். அவர் மனமுடைந்த நிலையில் சிங்களத்தலைவர்களை நம்பமுடியாது என்று கூறியதோடு ஈழத்தமிழர்களுக்கென்று 'தமிழகம்' என்ற தனிநாடு வேண்டும் என்று மேடை ஏறிச் சொன்னார். காலங்காலமாக ஏமாற்றப்படுவது எமது வரலாறாகி விட்டது. 1920 தொட்டு 2005வரை எத்தனை ஏமாற்றங்களை சந்தித்து விட்டோம். உலக விவகாரங்களை நெறிப்படுத்தும் மேற்கு நாடுகளை நாம் ஒன்றை மாத்திரம் கேட்கிறோம். உங்கள் உதவி இல்லாமல் ஒன்றுமே நடவாது என்று இறுமாந்து இராதீர்கள். நசுக்கப்படும் எம் போன்ற சுயநிர்ணய உரிமைக்குரிய இனங்களுக்கு உதவ முன்வாருங்கள். நாம் வரலாற்றை இயக்கிக்கொண்டிருக்கிறோம். வட்டுக்கோட்டைத் தீர்மானம், வவுனியாத் தீர்மானம் என்பன எமது முதலாம், இரண்டாம் தீர்மானங்கள். எமது மூன்றாவது தீர்மானம் நிட்சயம் சுதந்திரப் பிரகடனமாகத்தான் இருக்கும்.





கலை

பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திநான்காம் ஆண்டு

ஒகஸ்ட்

2005

திருவள்ளுவர் ஆண்டு 2036

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

பிரான்ஸ்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தமிழர் உரிமைப் போரிற்கு எதிரான ஒட்டுப்படைப் போர்

இவ்வுடன்பாடு கைச்சாத்திடப்பட்டு 30 நாட்களுக்குள்
தமிழ் ஒட்டுப்படைகளின் ஆயுதங்கள் களையப்படல் வேண்டும்.

-2002ம்ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு சரம்: 1.8

சிறீலங்கா அரசு ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து இடம்பெறும்
கொலைகளைத் தடுத்து நிறுத்துவதை உறுதிப்படுத்திடல் வேண்டும்.

-அமெரிக்க, ஜப்பானிய, ஐரோப்பிய நோர்வே
அரசுகளின் கூட்டறிக்கை. 19 யூலை 2005

நீண்ட காலமாகவே தமிழர் உரிமைப் போரிற்கு எதிரான சிங்கள அரசினதும், டில்லி உளவுத்துறையான றோவினதும் (RAW) போர்வியூகத்தின் ஓரம்சமாக ஒட்டுப்படை நடவடிக்கைகள் (paramilitary) அமுலப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த ஒட்டுப்படைகளை மரபுரீதியான விபரிப்பில் அடங்குமொரு வெறும் துணைப்படையாகக் கருத முடியாது. சிவிலியன்களைக் கொண்ட அல்லது சிவிலியன் கட்டுப்பாட்டில் பயிற்றுவிக்கப்பட்டதொரு அமைப்பாக இலங்கை போரரங்கில் அவை அமையவில்லை.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாறாக உளவுத்துறைகளினதும், நாசகார நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் சிறப்பு நடவடிக்கை அமைப்புக்களினதும் கட்டுப்பாட்டில் இவை இயங்குகின்றன. தமிழ்த் தேசிய எழுச்சியினை நசுக்கும் ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இவை இயக்குவிக்கப்படுகின்றன. தமிழர்களின் தேசிய தலைமைச் சக்தியான புலிகளையும், தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் கல்வியாளர்கள் - சிந்தனையாளர்கள் - ஊடகவியலாளர்கள் மற்றும் மக்கள் செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்து இந்த ஒட்டுப்படைகள் இயக்கப்படுகின்றன.

இன்று தமிழர்களுக்கு எதிரான இந்த ஒட்டுப்படை நடவடிக்கைகளுக்காக ஈபிடிபி, புளொட் மோகன் குழு, மாணிக்கதாசன் குழு, ராசீக்குழு போன்ற பல்வேறு பெயர்களில் ஒட்டுப்படைகள் சிங்களப் புலனாய்வுப்பிரிவின் கீழ் செயற்பட்டு வருகின்றன. கருணா குழு என்கின்ற பெயரில் புதிய ஒட்டுப்படை செயற்பாடுகள் அறிவிக்கப்படுகின்றன.

சிறீலங்கா மீதான சர்வதேச மனித உரிமைகள் அறிக்கைகளில் இந்த ஒட்டுப் படைகளால் புரியப்பட்ட கொலைகளும், மனிதவதைகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் காப்பு நிறுவனம் என்பனவற்றின் அறிக்கைகளிலும், ஐ.நா மனித உரிமைகள் ஆவணங்களிலும், ஐரோப்பிய கண்காணிப்புக்குழு ஆவணங்களிலும் இந்த ஒட்டுப்படைகளின் நடவடிக்கைகள் பற்றிய விரிவான பதிவுகள் உள்ளன.

000

சர்வதேச அளவில் இத்தகைய ஒட்டுப் படை நடவடிக்கைகள் ஒரு முக்கிய போர் உத்தியாகவேயுள்ளன. கொலம்பியாவில் உள்ள ஏயூசி எனும் ஒட்டுப்படை FARC அமைப்பிற்கு எதிரான ஒட்டுப்படையாக உருவாக்கப்பட்டு படுகொலைகளுக்கும், நாசகார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஆபிரிக்காவில் பல இடங்களில் வல்லரசுகளும், உள்நாட்டு உளவு மற்றும் இராணுவ அமைப்புக்களும் இத்தகைய ஒட்டுப்படைகளை போரின் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன. 'மாறிவரும் போரின் முகம்' எனும் இராணுவ ஆய்வுரையை எழுதிய 'மார்க் லொயிட்' எனும் ஆய்வாளர் மலேயாவிலும், கென்யாவிலும் ஒட்டுப்படைகளைப் பாவித்து எவ்வாறு போர்கள் வெல்லப்பட்டன என விபரிக்கின்றார். தகவல்களைத் தரும் உளவாளிகளைக் கொண்ட ஒட்டுப்படைகள் படிப்படியாக மக்களின் மனோநிலையை பாதித்து போரிற்கான மக்களின் ஆதரவைத் தகர்த்து தமது எசமானர்களிற்கு வெற்றிக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதாக அவர் வாதிடுகின்றார். இரண்டாம் உலகப் போர் காலங்களில் ஹிட்லர் இத்தகைய ஒட்டுப் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. நோர்வேயை ஹிட்லரின் படைகளிற்குக் கிடைத்த துரோகப்படையினர் quisiling எனப்பட்டனர். இதுவே பிற்பாடு துரோகம் புரியும் ஒட்டுப்படைகளிற்கான ஆங்கில பொதுப்பெயராக நிலவியது. பிரான்சின் விச்சி ஆட்சியாளர்கள் வரலாற்றில் ஹிட்டலரின் ஒட்டுப்படையாகவே விபரிக்கப்படுகின்றனர்.

போராடும் மக்கள் திரளின் மத்தியில் கிலேசத்தை, குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அந்தப் போராடும் மக்கள் மத்தியிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட துரோகிகள், கிரிமினல்களைக் கொண்டு இத்தகைய குணாம்சமுள்ள ஒட்டுப்படைகள் கட்டப்படுகின்றன. இலங்கைப் போர் அரங்கிலும் இதுவே நிகழ்கின்றது.

000

2002ம் ஆண்டு புலிகளும் சிறீலங்கா அரசும் செய்து கொண்ட உடன்பாட்டின் 1.8ம் பிரிவின் கீழ் சிங்கள அரசு இந்த ஒட்டுப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து வடக்குக்கிழக்கினை விட்டு அப்புறப்படுத்திடல் வேண்டும் என சம்மதிக்கப்பட்டிருந்தது. இது ஒருவகையில் சிங்கள தரப்பினர் தமிழர்களுக்கு எதிரான போரில் ஒட்டுப் படைகளை தாங்கள் பாவிக்கின்றோம் என்பதை ஒப்புக் கொண்டமையின் வெளிப்பாடாகக் கருதப்பட்டது.

சிங்களப் படைகள் இந்த உடன்பாட்டினை அமுல்படுத்தவில்லை. மாறாக, இந்த ஒட்டுப்படைகளினை மீள ஒழுங்கு படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும் ஏற்புடைய விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஈபிடிபி, புளொட் போன்ற ஒட்டுப்படைகள் தொடர்ந்தும் சிங்கள ஆயுதப்படைகளின் காவலுடன் யாழ்ப்பாணம் உட்பட தமிழர் தாயகத்தின் பலபகுதிகளிலும் தங்கவைக்கப்பட்டிருந்தன. தேர்தல்களில் இந்த ஒட்டுப்படைகள் அரசியல் கட்சிகள் என்கின்ற முகமூடியுடன் இறக்கிவிடப்பட்டன. ஒன்றுபட்ட தமிழர் குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகுகையில் அதற்கு எதிரான சதிமுயற்சியினிற்காக இந்தக்குழுக்கள் உளவு நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பிய தேர்தல்க் கண்காணிப்புக்குழு தனது அறிக்கையொன்றில் ஈபிடிபியை ஒரு ஒட்டுப்படையென பகிரங்கமாகவே விபரித்தது.

இருதரப்புக்குமான போர்நிறுத்த உடன்பாடும், பேச்சுக்களும் இடம்பெற்ற வேளையில் சிங்கள மற்றும் அன்னிய உளவு நிறுவனங்களின் நாசகார முயற்சிகள் தொடர்ந்தன. தமிழர்களிற்கு எதிரான எதிர்காலப் போரிற்கான நடவடிக்கைகளை இந்த நாசகார நிறுவனங்கள் முன்னெடுத்தன. புலிகள் அமைப்பின் தென் தமிழீழப் பலத்தினை உடைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக கருணா என்கின்ற துரோகி விலைக்கு வாங்கப்பட்டதன் பின்னணியில் பலவித நகர்வுகள் இடம்பெற்றன. இந்த நாசகார அமைப்புக்கள் தமது முயற்சியில் சிறிதளவிலான வெற்றிகளையும் சமாதான காலத்தில் பெற்று வந்தது. கருணாவுடனான சந்திப்புக்களுக்கும் திட்டமிடல்களுக்கும் ஒட்டுப்படைகளான ஈபிடிபி மற்றும் புளொட் பாவிக்கப்பட்டன என பின்னைய தகவல்கள் விபரம் தருகின்றன. மறுபுறம், இந்தியாவிலிருந்து ஈஎன்டிஎல்எவ் எனும் பெயரில் தங்கியிருந்த றோவின் ஒட்டுப்படையினர் சிறீலங்காவிற்கு அழைத்து வரப்பட்டனர். இந்த ஒட்டுப்படைகளுடனான மோதலில் ஒரு பிரதான ஈஎன்டிஎல்எவ் ஒட்டுப்படையாளன் கொல்லப்பட்டமை இங்கு கவனத்திற்குரியதாயுள்ளது.

மீளப் போர் மூளும் போது இந்த ஒட்டுப்படைகள் கணிசமானதொரு தாக்கம் செலுத்தும் என்கின்ற நம்பிக்கை சிறீலங்கா மற்றும் அதன் நேச உளவுத்துறையினருக்கு இருந்தது. படைத்துறை ஆய்வாளரும் முன்னாள் விமானப்படைத் தளபதியுமான ஹரி குணதிலக இந்த எதிர்பார்ப்பை பகிரங்கமாகவே தெரிவிக்கின்றார். இந்த ஒட்டுப்படைகளின் நடவடிக்கைகளைப் புலிகள் முறியடித்தால் நிச்சயம் அது சிறீலங்காவினை தோல்விக்குள் தள்ளும் என அவர் அச்சப்படுவது இந்த ஒட்டுப்படை நடவடிக்கைகள் மீதான நம்பிக்கையை வெளிக்காட்டுகின்றது.

000

புலிகள் இயக்கம் இந்த ஒட்டுப்படை நடவடிக்கைகளை ஆரம்பம் முதலே தெளிவாக எதிர்த்து வருகின்றது. இந்தியாவின் ஒட்டுப்படை நோக்கினை கணித்துக் கொண்ட புலிகள் அதிலிருந்து தமிழர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**ஒட்டுப்படைகளின் ஒரு முக்கிய பணியாக தமிழீழ விடுதலைப் போரினை ஆதரித்து நிற்கும் புலத்தமிழர்களை குழப்பும் நடவடிக்கைகள் அமைகின்றன. பல்லாயிரம் மக்களின் தீவிர பங்கு பற்றுதல்களுடன் செயற்படும் புலத்தமிழர்களின் தமிழீழ ஆதரவுச் செயற்பாடு களை குழப்பகரமான செய்திப்பரப்பல்கள், களங்கப்படுத்தல்கள் மூலம் சேதமுறச்செய்யலாம் என்கின்ற வடிவத்தின் கீழ் இந்த முயற்சிகள் இடம்பெறுகின்றன. இணையத்தளங்களில் மிகமட்டமாகவும், நிறைந்த பொய்யுரைகளுடனும் எழுதப்படும் விபரிப்புக்கள், நாசகார சக்தி களின் ஆதரவுடனான வானொலி செய்தி விநியோகங்கள் என இந்த முயற்சிகள் ஒட்டுப் படை நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், ஒரு உண்மையான மக்கள் போராட்டம் இந்த எதிரிச் செயற்பாடுகளால் சேதமுறாது என்பதை வரலாறு பல்வேறு சந்தர்ப் பங்களில் நிரூபித்துள்ளது.**

களின் உரிமைப் போரினைக் காத்துக் கொள்ளும் விதத்தில் நடவடிக்கைகளை ஆரம்பத்தில் எடுத்தனர். இந்தியா அனைத்தையும் தீர்மானிக்கட்டும் என் கின்ற குறுகிய வட்டார சிந்தனையுடன் தமிழர் போரினைக் காட்டிக் கொடுக்க முற்பட்ட குழுக்கள் புலிகளினால் ஆயு தம் களையப்பட்டு போரங்கினை விட்டு அகற்றப்பட்டது. தமிழீழத்தை ஆப்கான் போன்று பல்வேறு குழுக்களின் ஆயுத விளையாட்டுக் களமாக்கும் முயற்சியும் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இந்தியாவின் நேரிடையான இரா ணுவ நடவடிக்கைகள் தோற்கடிக்கப்பட்ட மைக்குப் புலிகள் முந்திக் கொண்டு மேற் கொண்ட ஒட்டுப்படை முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் உதவின. இந் தியா வெளியேறியதன் பின்னர் கொழும்பு உளவுத்துறையினர் இந்த ஒட்டுப்படை உத்திகளை கையாளத்தொடங்கினர். சத்துருக்கொண்டான் படுகொலை உட் படப் பல படுகொலைகளில் சிங்களப் படைகளுடன் இந்த ஒட்டுப்படைகள் பகிரங்கமாகவே இறங்கிச் செயற்பட்டன.

புலிகள் இந்த ஒட்டுப்படைகளிற்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளை காலத்திற்குக் காலம் மேற்கொண்டே வரு கின்றனர். ஒட்டுப்படைகளின் மூல முகம் தமிழ் முகமாகவே முன்வைக்கப்பட்ட மையால் புலிகளின் நடவடிக்கைகளுக்கு மாற்றுக் கருத்துக்களைக் கொண்டோரை அழிக்கும் நடவடிக்கையாக சிங்கள பரப் புரை அமைப்புக்கள் விளக்கம் வாசிக் கலாயின. புலிகளை சனநாயக விரோதி களாக விபரிக்கும் பரப்புரைக்கு இது உதவியது. எனினும், புலிகள் இந்த ஒட் டுப்படை ஆபத்துக்களை கவனத்தில் எடுத்தே வந்துள்ளன.

கருணாவின் துரோகமும், அதற்குப் பின்னைய நிலைமைகளும் ஒட்டுப்படை நடவடிக்கைகளின் பெரும் ஆபத்தை வெளிக்காட்டிய போது புலிகள் வலுவான இராணுவ மற்றும் தொடர்பாடல் முயற்சி கள் மூலம் நிலவரத்தை தமது கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்தனர். எனினும் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட பல விலைமிகு உயிர்கள் இதற்காக இழக்கப் பட்டுவிட்டன.

0000

இன்று சிறீலங்காவின் ஒட்டுப்படை பற்றிய விவாதம் சர்வதேச இணக்க முயற்சி ஆதரவாளர்களையும் பாதிக்கும் விடயமாகிவிட்டது. புலிகள் இயக்கம் சிங் கள அமைப்பின் ஒட்டுப்படை நடவடிக் கைகளை தீர்க்கமாக முடிவுக்குக் கொண்டு வரும் விதத்திலான முடிவுகளை மேற் கொண்டுள்ளமையால் அது போர்நிறுத்த உடன்பாட்டினை முடிவுக்குக் கொண்டு வரும் என்கின்ற அச்சம் எழுந்துள்ளது. தமது போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை தாமே சுயமாக மேற் கொள்ளப் போவதாக புலிகள் இயக்கம் அறிவித்தமையானது சிங்களப்படைகளு டனான நேரிடையான முரண்பாட்டிற்குப் புலிகள் தயாராகவுள்ளனர் என்கின்ற செய்தியை தெரிவித்துவிட்டது.

ஒட்டுப்படைகள் மூலம் போர்நிறுத்த காலத்தில் சதி மற்றும் நாசகார நடவடிக் கைகளை மேற்கொண்டு வந்த சிறீலங் காவால் இனி இதனைத் தொடரமுடியாது என்பதைப் புலிகள் அறிவித்துவிட்டனர். இத னால் ஒட்டுப்படை விடயத்திற்கு முடிவு காணவேண்டிய நிர்ப்பந்தம் போர்நிறுத்த ஆதரவுத்தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த யூலை 19ம் திகதி அறிக்கை விடுத்துள்ள இணக்க முயற்சிக்கான இணைத்தலைமைகளான அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், நோர்வே மற்றும் ஜப்பான் என்பன சிறீலங்கா இந்த ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் எனக் கோரியுள்ளன.

இந்த அறிவிப்பு புலிகள் முன்வைத்த குற்றச்சாட்டை உலக சமூகம் ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடாக அமைந்தமை யால் சிங்கள தரப்பு தனது மறுப்பை வெளியிட்டது. தமது படைகள் இத்தகைய நாசகார ஒட்டுப்படைகளினை பாதுகாக் கவில்லை என்கின்ற பொய்யுரையை சந்தி ரிகா குமாரதுங்க வெளியிட்டார். எனினும், சிறீலங்காவின் ஒட்டுப்படை நடவடிக்கைகள் பற்றிய ஆதாரங்கள் நிறையவே வெளியிடப் பட்டுவிட்டன.

00

இந்த ஒட்டுப்படைகளின் ஒரு முக்கிய பணியாக தமிழீழ விடுதலைப் போரினை ஆதரித்து நிற்கும் புலத்தமிழர்களை குழப் பும் நடவடிக்கைகள் அமைகின்றன. பல் லாயிரம் மக்களின் தீவிர பங்குபற்றுதல் களுடன் செயற்படும் புலத்தமிழர்களின் தமிழீழ ஆதரவுச் செயற்பாடுகளை குழப்ப கரமான செய்திப்பரப்பல்கள், களங்கப்படுத் தல்கள் மூலம் சேதமுறச்செய்யலாம் என் கின்ற வடிவத்தின் கீழ் இந்த முயற்சிகள் இடம்பெறுகின்றன. இணையத்தளங்களில் மிகமட்டமாகவும், நிறைந்த பொய்யுரைகளு டனும் எழுதப்படும் விபரிப்புக்கள், நாசகார சக்திகளின் ஆதரவுடனான வானொலி செய்தி விநியோகங்கள் என இந்த முயற்சி கள் ஒட்டுப்படை நடவடிக்கைகளாக மேற் கொள்ளப்படுகின்றது. எனினும், ஒரு உண் மையான மக்கள் போராட்டம் இந்த எதிரிச் செயற்பாடுகளால் சேதமுறாது என்பதை வரலாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூ பித்துள்ளது.

நாதன்



www.tamileelamarchive.com

தமிழ் ஆவணக் காப்பகம்



## காந்தரூபனின் 15ம் ஆண்டு நினைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்றார்.

கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் 15ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காந்தரூபன் அறிவுச்சோலையினரும், செஞ்சோலையினரும் இணைந்து நடாத்திய நினைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து கடற்கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் திருவுருவப் படங்களிற்கு அரசியல்த்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஈகைச்சுடரினை ஏற்றிவைக்க, கடற்தொழிலாளர் சமாசங்களின் இணைப்பாளர் திரு. மோகன் மலர்மாலைகளை அணிவித்தார்.

அறிவுச்சோலை மாணவர்களின் இசைநிகழ்வாக உடற்பயிற்சி கண்காட்சியும், வெளி அரங்க நிகழ்வும் நடைபெற்று உள் அரங்க நிகழ்வாக காந்தரூபன் அறிவுச்சோலை , காந்தரூபன் செஞ்சோலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெற்றது. அதன்போது காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட இளங்கதிர் என்னும் நூலினை அறிவுச்சோலை மாணவன் வழங்கி வைக்க தேசியத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

## படையத் தொடக்கப்பள்ளியின் 10ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் கலந்து கொண்டார்.

09.07.2005 அன்று இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் 10ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். இந்நிகழ்வில் படைய தொடக்கப் பயிற்சிக் கல்லூரியினால் வெளியிடப்பட்ட இரு நூல்களையும் தேசியத் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இப்பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை வழங்கி வரும் ஆசிரியர்களுக்கு இந்நிகழ்வின் போது தேசியத் தலைவர் அவர்கள் பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்துள்ளார்.





## இளநிலை அதிகாரிகளின் பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்றார்

விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் 09.07.2005 அன்று இடம்பெற்ற இளநிலை அதிகாரிகளின் பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சிநெறியை நிறைவு செய்த போராளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்துள்ளார். அத்தோடு இப்பயிற்சியின் போது சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளுக்கு தேசியத் தலைவர் அவர் களால் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மு.பொ

# மஹாநாம தேரர் மான்மியம்

## சாது சாது...

புத்தர் நிற்கிறார் பிட்சா பாத்திரத்தோடு
பிட்சா பாத்திரமாய் பூரணை கையில்!
அரசை ஒதுக்கி
அரச மரநிழல் அண்டிய ஆளுமை
பூரணையாய் அவரது கையில்!
சண்டாளர் இட்ட மாமிச உணவும்
சத்திரியர் தந்த அறுசுவை உண்டியும்
பிட்சா பாத்திரத்தில் பற்றற்றுக் கிடந்தன
நிர்வாணம் என்கிற ஓர் தனிப்பாதை
நிலத்தில் ஒட்டாது, பூ நடுரேகையாய்
அவர் முன் நீண்டது.
எவரையும் ஈர்க்கும் அன்பின் உயிர்ப்பே
அதனில் ஒளிர்ந்தது.

அசோகச் சக்கரம் மிகுந்தலை மலையில்!
தேவநம்பிய தீஸன்
சிரந்தாழ்த்தி நிற்கிறான்.
சங்கமித்தை - மகிந்தன் இருவரின் வரவால்
புத்தர் அமர்ந்த அரசமரக்கிளை
அனுராதபுரத்தில் வேர்விடுகிறது
பௌத்தம் ஈழவள நாட்டின் வாழ்க்கை முறையாய், எல்லோர் நெஞ்சிலும் இழைகிறது. அற்ப உயிரையும் அன்பில் தோய்க்கும் புத்தனின் விழிகள் வழியாய் அமைய, நாடும் வீடும் மேலெழுகின்றன.

காலம் மாறுகிறது. அரச படையெடுப்புகள், ஆட்சியதிகாரப் போட்டியின் விளைவாய் குரோதம் மலிகிறது. இனம், மொழி என்ற பிரிவு வேறு. புத்தனில் பெருகிய அன்புக்குப் பதிலாய் இரத்தம் பெருகிறது. மஹாநாம தேரர் அதன் மொத்த உருவாய் வரலாற்றைத் தனது கையில் எடுக்கிறார். எல்லாளான் - கைமுனு யுத்தம் என்பதை அரச ஆட்சியதிகாரப் போட்டியிலிருந்து இனமத வாதப் போட்டியாய் மாற்றும் வேட்கையில் மஹாநாம வெற்றி பெறுகிறார். அன்று தொடங்கிய அந்த இனவாத யுத்தம் இன்று வரை;

“மகனே, ஏன் கூனிக் குறுகிப்படுத்திருக்கிறாய்?” - விகாரமாதேவி துட்ட கைமுனுவைப் பார்த்து வினவினாள்
“கூனிக் குறுகாமல் எப்படிக் கிடப்பது?”
“ஏன் அப்படிச் சொல்கிறாய், மகனே?”
“ஏனா வடக்கே கொடுந்தமிழரும் தெற்கே கடலும் நெரிக்கையில் எப்படி நிமிர்ந்து கிடப்பது?”
மஹாநாம உருவாக்கிய பாத்திரங்கள் கதைத்தன.
மஹாநாம தேரர் அரசியல்வாதியாய் மாறாதபோது அரசினைத் தீர்மானிக்கும் சக்தியாய் மாறுகிறார்.
எவர்க்கும் அன்பையும் கருணையையும் போதித்த பௌத்தம், இன, மொழி குரோதத்தை வளர்க்கும் வாய்ப்பாய் மாற்றிற்று. எவரையும் அன்பால் இணைத்த பௌத்தம், ‘சிங்கள பௌத்தமாய்’ மாறத்தொடங்குது.

சிங்கள மாணவன் சிறுவயதிலிருந்தே எல்லாள - கைமுனு யுத்தமே வரலாறாய் கற்றுவருகிறான்.





www.tamileelamarchive.com

2.

சாது சாது........
பெரஹரா வருகுது, பெரஹரா வருகுது
கசை அடி, கசை அடி - பெரஹாரா வருவதை
கசையடி முழங்கி அறிவித்துச் செல்லும்
முன்னணி ஆட்கள் சடார் சடார் .....
தீப்பந்தம் சுழற்றி வருகுது இன்னோர் கூட்டம்
அதற்குப் பின்னர் 'கொட்டி செல்லங்' என்றொரு
புலியாட்டம் நிகழ்த்தி வருகுது மற்றொரு கூட்டம்
யானையில் பௌத்த சின்னங்கள் ஏந்திய
ஊர்வலம் பின்னால்
வெள்ளையணிந்த 'சில்' நோன்பெடுக்கும்
மக்கள் கூட்டம்
சாது சாது........



மஹாநாமவின் சீடனாய் 1956ல் பண்டார நாயக்கா அவதாரம். தியசேன குமாரயா! 24 மணித்தியாலத்தில் சிங்களம் மட்டும் சட்டம். எதிர்த்த தமிழ்த் தலைவர்கள் காலிமுகத் திடலில் கல்லெறிபட்டனர். இரத்தம் சிந்தினர். மீண்டும் எல்லாள - கைமுனு யுத்தம் புதிய வடிவில்! பௌத்த குருமார் ஆதரவு வழங்கினர். சாது! சாது! 58ல் இனக்கலவரம் பெரிதாய் வெடித்தது.
தமிழரின் உயிர்கள் காலுக்கு கீழ்போட்டு கசக்கப்படும் சிற்றெறும்பாயிற்று.

58ல் பாணந்துறையில் கோயில் பூசகர் வெளியே இழுத்து வரப்பட்டு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்படுகிறார். இன்னும் கோயிலில் தஞ்சம் அடைந்த தமிழர் பலருக்கும் அதே கதிதான். கொதிக்கும் தாருக்குள் போட்டு மூழ்கடிக்கப்படுகிறார்கள். தென்னிலங்கையில் தமிழர் போட்ட அவலக் குரலும் வேதனை அலறலும் கேட்டு கொலைக்காரக் கும்பல் இன்னும் வெறிகொண்டு ஆட்டம் போட்டது.

மஹாநாம தேரரின் சன்னதம் அவர்களில் தெரிந்தது. பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்ட அவலம் கண்டு பெருமதி அடைகிறார்.
அப்போது ஆளுநராக இருந்த ஒலிவர் குணதிலகா, "இது மிக மோசமான நிலை. தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தவும்" என்று பண்டார நாயக்காவிடம் முறையிட, அவர் தனது சுங்கானை வாயின் மறுபக்கம் திருப்பியவாறே, "என்ன அவசரம், அவர்கள் இதைக் கொஞ்சம் சுவைத்துபார்க்கட்டும்"என்கிறார். அக் கூற்றில் "இனிமேல் சமஷ்டி கேட்கமாட்டார்கள்" என்ற கருத்துப் பொதிந்திருந்தது.

சாதி பார்க்கும் தமிழா உனக்கு சமஷ்டி ஒரு கேடா!
கோழையாய் இருக்கும் தமிழா, உனக்கு கொள்கை ஒரு கேடா!

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படாத அந்த 24 மணித்தியாலங்கள் நொண்டி நொண்டி ஊர்வது போல்.
அந்த 24 மணித்தியாலங்கள் வன்முறையின் உச்சத்தைத் தொட்டது. தமிழர்கள் வெட்டப்பட்டனர், தீயில் போடப்பட்டனர், பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு அவர்கள் பெண்ணுறுப்புக்கள் கோரமான முறையில் குதறப்பட்டன.

இலங்கையில் சிங்கள பௌத்தம் காட்டும் நிர்வாணம் எதுவெனத் தெரிந்தது.

ஆனால் அடுத்த ஆண்டு பௌத்த மதத்திற்கும் சிங்கள இனத்துக்கும் அத்தனை தொண்டாற்றிய பண்டாரநாயக்காவுக்கு நன்றிக்கடன் செலுத்துவதுபோல் சோமராம தேரர் என்னும் பிக்குவானவர் அவர் இல்லஞ் சென்றார். பண்டாரநாயக்கா எழுந்து வணங்கிவிட்டு இருந்த போது சோமராமவின் துப்பாக்கி வேட்டு அவர் நெஞ்சைப்பிளந்து ஆசீர்வதித்தது "நான் தரும் நிர்வாணம் இது தான். சுவைத்துப்பாரும்" என்பது போல தமிழரின் சாபம் எதிர் வினையாயிற்று.


மண்ணில் சரிந்தார் பிரதமர் பண்டா

சாது சாது சாது.....
பெரஹரா வருகுது
சடார் சடார் கசையடி முழங்குதா?
துப்பாக்கி வேட்டா?
அதற்குப்பின்னால் கொட்டி செல்லங் என்னும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




புலியாட்டம் நிகழ்த்தி வருவோர் கூட்டம்
கண்டி நடனக்காரர் கவிழ்ந்து நிமிர்கிறார்.
யானையில் பௌத்த சின்னங்கள் ஏற்றி
ஊர்வலம் ஊர்வலம்
மஞ்சள் அங்கியில் பௌத்த குருமார்
சடார் சடார் கசையடி முழங்குதா? துப்பாக்கி வேட்டா?
சாது சாது.....

3

1977ல் மஹாநாம தேரரின் இன்னொரு சீடர், ஜயவர்த்தனபுரக் கோட்டையின் ராஜாவாகத் தன்னைப் பிரகடனப்படுத்துகிறார். அவர் ஆட்சியில் ஏறியதுமே தமிழர் சிங்களவர் இனக்கலவரம் வெடிக்கிறது. தமிழரின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன. பலர் கொல்லப்படுகின்றனர்.

தமிழ்த்தலைவர்கள் தமக்கென ஒரு தனிநாடு என்ற பிரகடனத்தை முன்வைக்கின்றனர்.
இதற்குப் பதிலளிப்பது போல் "சண்டையா சமாதானமா, உமக்குத் தேவை?" என்கிறார் ஜயவர்த்தனபுர ராஜா.

சுயநலமிக்க தமிழா உனக்கு சுயாட்சி ஒரு கேடா! அடிமையாய் வாழும் தமிழா உனக்கு அறப்போர் ஒரு கேடா!

தமிழ்த்தலைவர்கள் தம் பாராளுமன்றப் பதவியையும் இழந்து செய்வதறியாது திகைத்து நிற்கையில், தமிழ் இளைஞர்கள் புதிய முறையில் விடுதலைப் பெரஹரா நடத்திவருகிறார்.

சாது சாது......
விடுதலைப் பெரஹரா விடுதலைப் பெரஹரா!

விடுதலை ஊர்வலம் வருகுது வருகுது
அணிஅணியாக இளைஞர் நிற்கிறார்.
ஏ.கே துவக்கோடு அணிநடை வெடி இசை
'புலியாட்டம்' என்கிற போலி அபிநயம் முடிந்து இப்போ
புலிகளின் நர்த்தனம் உண்மையாய் எழுந்தது
அது முதன் முதல் வேட்ட வேள்விப் பொருளாய்
யாழ்நகர் அருகே
பதின்மூன்று இராணுவம் பலியிடப்பட்டது.

புலிகள் நர்த்தனத்தின் எதிரொலி தெற்கிலே கொடூரமாய் தெறித்தது.

சாது சாது....
மஹாநாம வழிவந்த பௌத்த பிக்குமார்
ஆசி வழங்கலில் பெரஹர நிகழுது.
முதல் நாள் பௌர்ணமி போயா தினத்திலே
'சில்' நோன்பிருந்த சிங்கள பௌத்தர்கள்
அடுத்த நாள் ஆயிரம் கொலைவாள்கள் ஏந்தியே
ஊர்வலம் வந்தனர்.
சாது! சாது! கொல்லடா தமிழனை!
கொல்லடா தமிழனை!
Sunday sil Monday kill
என்ற வாசகம் பிரசித்தமாயிற்று
பிக்குமார் தலைமையில் பெரஹரா நிகழ்ந்தது
சாது சாது....
சிங்க நர்த்தனம், சிங்க நர்த்தனம்!
புதியதோர் 'சிங்கபாகு' அரங்கேற்றப்பட்டது.

தமிழருக்கெதிரான இனவாதத் தீ கொழும்பெங்கும் கொழுந்து விட்டெரிந்தது.
ஆயிரக்கணக்கான தமிழர்கள் அதற்குள் வெந்து அழிந்தனர்.
எஞ்சியோர் அகதிகளாக வட
கிழக்கை நோக்கி கப்பலில் அனுப்பப்பட்டனர்.
சிங்கநர்த்தனம் இத்துடன் முடிந்தது.
ஆனால் புலிகள் நர்த்தனம் இதன் பின்னர்தான் உக்கிரம் கொண்டது. சிங்கபாகுவுக்கு மேலும்
மேலும் சவால்கள் விடப்பட்டதால் தாள தம்பட்டம் சங்கொலி முழங்கியே வெற்றி நிச்சயம்
கண்டிடப் போர்கள் நிகழ்ந்தன. சமாதானத்திற்கான ஒரு யுத்தம் நிகழ்ந்தது. ஆயினும் இவற்றை
அனைத்தையும் உதறி எறிந்து புலிகள் நர்த்தனம் முன்னேறி வந்தது.

அனுராதபுர அரசமரக்கிளையிலும் அதிர்வுகள் கேட்டன.
தலதா மாளிகையிலும் சத்தங்கள் அதிர்ந்தன.

4

இனி என்ன செய்வது?
நவீன மஹாநாம தேரர்கள் கூடித்தீர்வெடுத்தனர்.
ஆதிகாலந்தொட்டு அரசின் கொள்கைகளைத்
தீர்மானிப்பவராய் இருந்த மஹாநாம
வழிவந்த புத்தபிக்குமார் இனி சிங்கள பௌத்த தர்மராஜ்ஜியம் ஒன்றை உருவாக்குவது ஒன்றே தாம் நாட்டுக்குச் செய்யும் கடமையெனக் கண்டனர். ஆதனால் அவர்கள் நேரடியாகவே அரசியலில் இறங்கத் தீர்வெடுத்தனர். அத்தீர்விற்கிணங்க சங்கை சின்னமாகக் கொண்ட சிஹல உருமயக் கட்சியின் பேரில் தேர்தலில் போட்டியிட்டு ஒன்பது பாராளுமன்ற



www.tamileelamarchive.com


ஆசனங்களை வென்றெடுத்தனர்.

சாது சாது.......
சங்கூதி பிக்குமார் பெரஹரா நிகழ்த்திறார்.
வலம்புரி, இடம் புரி, நத்தைகள், ஊரிகள்
சின்னதும் பெரியதும் பிஞ்சுகள் பழுத்தவை
மஞ்சள் அங்கியில் ஊர்வலம் வருகிறார்
புலிகளை விரட்டியே நாட்டைக் காப்பாற்றுவோம்
சாது சாது
கண்டி நடனக்காரர் ஆடியவாறு பாட்டுப்பாடுகிறார்கள்.
சாதி பார்க்கும் தமிழா
உனக்குத் சமஷ்டி ஒரு கேடா?
பிரதேசவாதம் பேசும் தமிழா
உனக்கு தனிநாடொரு கேடா......

பிக்குமார் அணிதிரள்கின்றனர். பிக்குமார் பஸ்சில் ஏறினால் எழுந்து நின்று ஆசனம் வழங்கும் மக்களுள்ள நாடு இது. இப்போ ஒன்பது ஆசனங்களைப் பெற்று அவர்கள் தர்மராஜ்ஜியம் ஒன்றை அமைக்கப் புறப்பட்டனர். தர்ம ராஜ்ஜியத்துக்கு எதிராக நிற்கும் எவரோடு நாம் கூட்டுச் சேரப்போவதில்லை அவர்கள் கர்ஜித்தனர். சாது சாது.....

நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறுகிறது.
தேர்தலில் வெற்றி பெற்ற பிக்குமாரும் அங்கிருந்தனர்.
தர்மராஜ்ஜியத்தை உருவாக்கும் நினைப்போடு அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிப்பதற்காய் ஆசனத்தை விட்டெழுந்து மஹாநாம வழிவந்த பௌத்தபிக்கு ஒருவர் சபாநாயகரை நோக்கி செல்கிறார்.

சாது சாது... சாது
பாஞ்சாலையில் இருந்தவர் இப்போ பாராளுன்றத்தில் இருக்கிறார்
அரசை எதிர்த்து வாக்களிக்க முன்னெழுந்து செல்கிறார்.
தாள தம்புட்டம் எதுவுமில்லை
கசையடியும் கேட்கவில்லை
புத்தபிக்கு எழுந்து செல்ல
அவரைச் சுற்றி வளைக்கின்றனர்
அரச எம்.பி.மாரெல்லாம்!
ஏன் எதற்கு வளைக்கிறார்?
காலில் விழுந்து ஆசி பெறவா?
பஸ்சில் ஏறினா ஏழுந்து நின்று இருக்கை தருவோர்
பாராளுமன்றம் வந்த அவரை சும்மா விட்டு வைப்பாரோ....?




புத்தபிக்குவைச் சுற்றி வளைத்த அரசாங்க எம்.பி மார் நெருங்கி நெருங்கி வருகிறார்கள்.
“ஏய் ஹக்கடியோ (ஏய் சங்கே) பாஞ்சாலையில் பிரித் ஓதாமல் பாராளுமன்றத்தில் உனக்கென்னடா வேலை?” இன்னொரு எம்.பி. கத்துகிறான்.

“தர்மராஜ்ஜியம் காணப்போறாயோ? இந்தா வாங்கிக்கொள்” என்றொருவன் கத்தியவாறே பிக்குவின் வயிற்றில் ஓங்கிக் குத்துகிறான்.

“அம்மே’ என்று பிக்கு மெல்ல வேதனை தாங்காது அலற

“டேய் சங்கு, புலியோடயா கூட்டுச்சேரப் போற?” என்று கேட்டவாறே இன்னொருவன் பிக்குவின் ஆண் குறியையும் விதையையும் சேர்த்து ஒரே நசி.

“அம்மே....மகே அம்மே..”
புத்தபிக்குவின் கண்முன்னே தர்மராஜ்ஜியம் கீழே இறங்கி வந்தது. சிங்கள பௌத்த நிர்வாணம் பிக்குவுக்கு சித்தித்தது.
சாது சாது சாது.....

(மேற்கண்ட புத்தபிக்கு இத்தாக்குதலின் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார் என்பது பத்திரிகையில் வெளி வந்த செய்தி)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தனித்துவமான அடையாளத்தை நிறுவும் மகாவின் கோடுகள்

நேர்காணல் □ ஓவியர் மகா

நேர்கண்டவர்: தா.பாலகணேசன்



ஓவியர் மகாவினுடைய தூரிகையின் கோடுகளின் குணங்களையும் அவை வெளிப்படுத்தி நிற்கும் விடுதலை உணர்வுகளையும் எரிமலை சஞ்சிகை ஊடாக வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அதனூடாக ஒரு பரீட்சயத்தை நிச்சயமாக அவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருப்பார்கள் என நாம் நம்புகின்றோம். பத்தாண்டுகளுக்கு மேலாக புலத்தில் அவர் ஓவியத் துறையிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார். இவருடைய சகோதரர் நிலாந்தன் அவர்களும் ஓவியத்துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியவர்.

மகா ஓவியம் தொடர்பாக நீண்டகாலமாக ஒரு தேடலை நிகழ்த்தி வருகிறார். ஒரு புதுமையை நிகழ்த்த வேண்டும் என்பது அவரது பிரதான நோக்குகளில் ஒன்றாகும். இயந்திர மயமான வாழ்வியல் கலாச்சாரம் எங்கே தனது தூரிகையைப் பறித்தெடுத்துவிடுமோ? நிறங்களை இழக்கச் செய்துவிடுமோ? நான் இந்த இயந்திர ஓட்டத்தில் இயந்திரத்தை முந்தச் செய்து விடுவேனோ? என்கிற கேள்விகளை எம்முடன் கூட்டாக எழுப்புகிறார்.

நோர்வேயில் ((Universitetet I Oslo. Det juridiske Fakultet - ஒஸ்லோ பல்கலைகழகத்தில் கணினித் துறையில் பணிபுரிந்து வரும் அவர் Divisional Engineer. கணினி தொடர்பு பட்ட வேலைகளை சதா நவீனப்படுத்தி உழைக்கவேண்டியவராகவும் உள்ளார். அதுவும் ஒரு கால் சமூகத்திற்கு பயன் விளைவிக்கக் கூடியதாய் இருக்கும் என்கிறார்.

எனினும் ஓவியங்கள் மூலம் எமது சிந்தனைப் பார்வையை அகலிக்க, எமது ரசனையை வளர்த்தெடுக்க அவர் சதா உழைப்பார். அவரது தனித்துவ மிக்கதான நவீனமான கோடுகள் எமைச் சுற்றிய தளைகளை அழித்து அறுத்து எம்மை விடுவிக்கப் போராடும்.



www.tamileelamarchive.com

உங்களுக்கு ஓவியக்கலை பற்றிய ஆர்வம் எப்பொழுது, எங்கே கிளர்ந்தெழுந்தது?

ஓவியங்களைக் கொடுக்கிறவன் ஒரு மனிதனாக இருந்தாலும், அந்த படைப்புகளுக்கு உந்து சக்தியாக அமைவது இயற்கையும், அவன் வாழும் சூழலும் தான். அந்த வகையில் என்னுடைய உணர்வுகள் போட்ட கோடுகளுக்கான ஆசான் நான் வாழ்ந்த சூழலும் அது எனக்குத் தந்த அனுபவங்களும்தான். சித்திரம் போடும் ஆற்றல் எனக்குள்ளே இருந்தாலும் கூட, அது தனக்கென்று ஒரு முகமெடுத்து உயிர் பெற்ற காலமானது, எங்களுடைய போராட்ட காலம் தான். ஏனென்றால் எங்கடை போராட்ட வளர்ச்சியானது எங்களுக்குக் கொடுத்த அனுபவ விளைச்சலிலிருந்து நாங்கள் பல பயனுள்ள அறுவடைகளை செய்திருக்கிறோம். அதில ஒன்றுதான் என்னைப்போல கலைஞர்களுடைய தோற்றமும் வளர்ச்சியும். அந்த வகையில் என்னுடைய கோடுகள் ஓவியமானது எண்பத்தைந்து பிற்பகுதி அல்லது எண்பத்தாறின் முற்பகுதி எனலாம்.

உங்களுடைய ஓவியங்கள் எவ்வாறு மக்களுக்குள் சென்றடைந்தது?

என்னுடைய ஆரம்பகால ஓவியங்களானது சுவரொட்டிகளாகத்தான் இருந்தன. தாயக மண்ணில் எங்கட மக்களுக்கு ஒரு செய்தியைத் தாங்கி அது அறிமுகமானது. அவற்றுக்கு உதாரணமாக கருத்தடை, கசிப்பு ஒழிப்பு, பசுமைப் புரட்சி, வீட்டு வேளாண்மை போன்றவற்றைச் சொல்லலாம். அதற்குப் பிறகு, மேற்குலக நாடுகளில் எரிமலை சஞ்சிகை மூலம் எனது ஓவியங்கள் பல வெளியாகத் தொடங்கின. அரங்க பின்திரை ஓவியங்கள் வரைவதன் மூலமும் , இன்னும் சில புத்தகங்களுடாகவும் எங்கள் மக்களிடம் போய்ச் சேர்ந்திருக்கு. (அது தவிர பிரான்ஸ் நாட்டில் இருந்து ஒளிப்பரப்பாகிற தமிழ் தொலைக்காட்சியில் (ttn) நாடி மருத்துவ நிகழ்ச்சிக்கான பின் திரை அமைப்பில் கூட என்னுடைய சில ஆக்கங்கள் வெளியாகி இருக்கிறது). மக்களிடமிருந்து எமக்கு எதுவும் விளங்கவில்லை என கேள்வி எழுப்புவார்கள். என்னத்தைக் கீறிக்கிழிக்கிறீர்கள் எனக் கேள்விகளை எழுப்புவார்கள். விடுதலை அரங்கில் பின்திரைக்கான ஓவியங்களை வரையும்போது அவர்கள் இவ்வாறாக கேள்விகளை எழுப்புவார்கள். நீங்கள் எதை விளங்கிக்கொள்கிறீர்கள் நான் கேள்வியை எழுப்புவேன். அவர்கள் தேட முயன்றார்கள். தேடுவதன் மூலம் அவர்கள் பல விளக்கங்களையும், விடைகளையும் பெறத் தொடங்கினார்கள். பின்னர் அவர்களது இரசனையும், சிந்தனையும் அகலித்துச் செல்வதை அவதானிக்கத் தொடங்கினேன். அது பின்னர் அவர்களுக்குள் ஒரு பரிட்சயத்தை வழங்கியிருக்க வேண்டும் என நம்புகிறேன்.

உங்களுடைய ஓவியங்களில் பூமிக்கு மேல் நிகழ்வன பற்றி மட்டுமல்லாமல் கீழும் நிகழ்வைக் காட்டுகின்றதான ஓவியப் பண்புகளை நாங்கள் பார்க்கின்றோம். அவை எவ்வாறு நிகழ்கின்றன எனக் கூறமுடியுமா?

நிச்சயமாக , நீங்கள் பார்த்தால் தெரியும் பெரும்பாலான ஓவியங்கள் வந்து நிலத்துக்கு மேல் இருக்கிற விடயங்களைத்தான் அல்லது நேரடியாகப் பார்க்கிற விடயங்களைத்தான் சொல்கிறது. எங்கள் உணர்வுகளில் பார்ப்பவற்றைச் சொல்கிறது. ஆனால் எனது சிந்தனையில் எங்களால் பார்க்க முடியாத விடயங்களை எப்படி எமது மக்களுக்குச் சொல்லலாம் என சிந்தித்துப் பார்த்தேன். உதாரணமாக பனைமரத்தைக் கீறி பனைமரத்துக்கு பல அர்த்தத்தைக் கொடுக்கிறேன். அதற்கு வீரியம் என்றும், வைராக்கியம் என்றும் சொல்கிறோம். உரம் என்றும், உறுதி என்றும் சொல்கிறோம். இப்படிப் பல வகையான விளக்கங்களைக் கொடுக்கிறோம். ஆனால் அந்த பனைமரத்தையும் கீறி அதன் வேரையும் கோடுகளால் வரைவேனாக இருந்தால் அந்த உரம், உறுதி எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரு இருப்பை அந்த ஓவியம் காட்டுகிறது.
இன்னும் சில ஓவியங்களைப் பார்த்தால் மண்ணுக்குக் கீழே சில முகங்களைக் கீறி மேலே மாவீரர்களின் கல்லறை இருக்கும். அங்கே முகங்களைக் காண்கிறோம், உணர்வுகளைக் காண்கிறோம் உயிர்ப்புமிக்கவர்களின் வாழ்வைக் காண்கிறோம். அப்பொழுது நான் சொல்லப் போகும் விஷயத்தை மேலும் அழுத்தமாக்கவே எனது கோடுகளை இவ்வாறு பயன்படுத்துகிறேன்.

சிக்கல் மிக்கதான உங்கள் கோடுகள் எவ்வாறு இன்றைய வாழ்வியல் சிக்கல்களை வீரியத்தோடு அவிழ்த்துக் காட்டுகின்றன?

கேள்வியிலேயே பதில் உண்டு. சிக்கல் நிறைந்த வாழ்வியல் சூழல் என்று ஒரு வார்த்தையை பயன்படுத்தினீர்கள். சிக்கலான ஒன்றுக்குள் அகப்பட்டுக் கொண்டோமானால் தேடவேண்டும். சிக்கல் மிகுந்த வாழ்வியல் சூழலை வெளிப்படுத்துகையில் எனது கோடுகளும் சிக்கல்களாக விழுகின்றன. நான் போடும் கோடுகள் ஊடாக வெறுமனே இது ஒரு பிள்ளையார் படம், இது ஒரு சிம்ரனின் படம் என இருப்பதைக் காட்டிலும் ஒரு தேடலை உருவாக்குவதிலேயே எனக்கு ஆர்வம் அதிகம். ஒரு கோடு பல அர்த்தங்களை தருமாக இருந்தால் அதுவே எனக்கு விருப்பமாக இருக்கும். வாழ்வியல் சிக்கலிலும் பல முகங்கள் உள்ளன. நாங்கள் அதை அவிழ்க்க வேண்டுமாயின் தேடவேண்டும். எதையுமே வெளிப்படையாகக் காட்டினால் அது வெளிப்படையாக இருக்கும். அதில் என்ன இருக்கிறது. மனிதனுக்குள் ஏற்படும் உணர்வுகளும், குழப்பமான ஒரு தன்மையை பிரதிபலிக்குமாயின் கோடுகளும் சிக்கலாக வீழ்வதில் வியப்பில்லை. காரணம் உணர்வுகளின் வெளிப்பாடுகளில் கோடுகளும் ஒன்று.
இப்படி சிக்கல் நிறைந்த கோடுகளிடையே நாங்கள் செய்யும் தேடுதல் தெளிவான ஒரு கருத்தாளுமையை உருவாக்குவதோடு வாழ்வியல் சிக்கலிடையே ஒளிந்திருக்கும் சில விடயங்களையும் அந்தத் தேடுதல் வெளிப்படுத்தும் அது மட்டுமல்லாமல் கோடுகளுக்கிடையிலான இந்தத் தேடுதல் நவீன ஓவியத்தின் பால் ஒரு ஈர்ப்பையும் உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமில்லை.

ஓவியத்தில் எவ்வாறு வர்ணங்களை தேர்ந்து கொள்கிறீர்கள், நீங்கள் கறுப்பு வர்ணத்தை அதிகம் ஓவியத்தில் கையாள்வதாக கருத்து நிலவுவது குறித்து?

எமது உணர்வின் வலி அதிகமாகும் பொழுது ஒரு படைப்பு உருவாகிறது. அந்த அடிப்படையில் வந்து வர்ணக்கலவைகளுக்கும் ஒரு இடம் இருக்கிறது. ஒவ்வொரு வர்ணத்திற்கும் ஒவ்வொரு உணர்வு, குணம் இருக்கின்றன. ஆக சிகப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் வர்ணக்கலவைகளைத் தேர்ந்தெடுக்கின்றேன். அதிலும் குறிப்பாக கறுப்பு வர்ணத்தை தேர்ந்தெடுப்பேனாக இருந்தால் அதற்கும் பல காரணங்கள் இருக்கிறது. அதற்கு சில காரணங்களைச் சொல்லப்போனால் உதாரணத்திற்கு வந்து எந்த எந்த ஓவியங்களில் கறுப்பு வர்ணம் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அதற்கு எங்களுடைய வாழ்க்கையில் நாங்கள் அனுபவிக்கிற இருண்ட சூழலைத் தாண்டி



www.tamileelamarchive.com

வெளிச்சத்தை நோக்கிப் போக வேண்டியதைக் காட்டுகிறது. நாம் ஒளி நோக்கிப் போகவேண்டும் எனும் உத்வேகத்தை உணர்த்துவதாக அது அமைந்திருக்கும். எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சோகம், விரக்தி, வெறுப்பு, இறப்பு, இழப்பு, பிரிவு, தொலைவு இப்படி பல்வேறு வகையான உணர்வழுத்தங்களைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. அது மட்டுமல்லாமல் கறுப்புக்கு இன்னும் ஒரு குணம் இருக்கு வீறாப்பு, வைரியம் சோகம் மட்டும் இருக்காது. அதை தீர்மானிப்பது அதன் அருகிலுள்ள கோடுகளே. ஆகவே வர்ணக் கலவைகளையும் கோடுகளே தீர்மானிக்கின்றன.

கோடுகளாக அமைந்திருப்பினும் அந்த உணர்வுகளின் தன்மையை வெளியில் கொண்டுவருவது வர்ணக்கலைகளின் தெரிவு. இது ஒரு ஓவியத்திற்கு மிகவும் முக்கியமானது. இவ்வாறு வாழ்வியல் சூழலை பிரதிபலிக்கும் ஓவியங்களில் கறுப்பு வர்ணத்தை கூடுதலாக நான் பாவிப்பதற்கான காரணம் அந்த ஓவியங்கள் வரையபட்ட கால கட்டங்களில் நிகழ்ந்த அடக்குமுறை. எல்லா வகையான உணர்வுகளின் முடிவிலும் எமக்கு உண்டான ஒரு சோக உணர்வும் போராட்ட காலத்தில் எம்முடையே தோற்றம் பெற்றிருந்த உறுதி வைராக்கியம் போன்ற தன்மைகளை பிரதிபலிக்கவுமே.

**இன்று ஓவியப் பண்புகள் மாற்றம் அடைந்து வருகின்றனவா ?**

ஆம். உண்மைதான். ஆரம்பகாலங்களில் கிடைப்பதைக்கொண்டு வர்ணங்கள் தீட்டப்பட்டன. கல்லுகள், மரபட்டைகள், இலைகள் கொண்டு தீட்டப்பட்டது. இன்று நீங்கள் பார்த்தீர்களானால் தெரியும் தொழில்நுட்பமானது மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த காலகட்டத்தில் அன்று எதுவுமே கிடைக்காமல் பச்சை இலைச்சாறுகளைச் சேர்த்தும், செங்கல்களைக் கொண்டும், இயற்கையில் கிடைத்தவையைக் கொண்டும் ஓவியங்கள் தீட்டப்பட்டன. இன்று எமது கையில் எது இருக்கிறதோ அதைக்கொண்டு தீட்டும் வல்லமையைப் பெற்றிருக்கிறோம். இன்று முன்னேறி இருக்கிறோம். அதாவது வர்ணம் மட்டும் அல்ல ஊடகங்களும் முக்கியமானவை. அதாவது படத்தை நாங்கள் எங்கே தீட்டுகிறோம், எப்படித் தீட்டுகிறோம், என்ன முறையில் தீட்டுகிறோம் என்கிற அடிப்படையில் வைத்துக்கூட அதன் பண்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டுத்தான் இருக்கு. ஆகவே அன்றுடன் இன்றைய காலத்தை ஒப்பிடுகையில் எல்லாம் வளர்ந்து செல்வதைப்போல ஓவியத்தின் பண்புகளிலும் மாற்றமும், வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. ஒட்டுவேலை, கழிவுப்பொருட்களைக்கொண்டு ஓவியம் தீட்டுதல், சிற்பம் செதுக்குதல் எனவும், ஒரு படத்தைக் கீறிப்போட்டு அதற்கு மேல் ஒரு ஒயில் பேப்பரை ஒட்டி சிறிது காலம் வைத்தல் மூலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதலும் என பல வழிகள் இருக்கின்றன... இவையெல்லாம் நாங்களாகவே கண்டுபிடித்துக் கொள்ளும் வழிமுறைகள்.
ஏனென்றால் நாம் வாழ்கின்ற சமூக தொழில் நுட்ப வாழ்வியல் சூழலை ஒட்டியே ஓவியக் கலையின் வளர்ச்சியும் அதன் பண்பும் அமைகிறது. உதாரணமாக கணிணி மயப்பட்டுவரும் இன்றைய வாழ்வியல் சூழலில், ஓவியக்லையும் கூட அகப்பட்டுப்போகாமல் இருக்கும் என்று நாம் கூறிவிட முடியாது. ஆகையால் அதன் பண்பு காலப் போக்கில் கணிணி மயப்படுத்தப்பட்டதாகக் கூட ஒரு வேளை மாறலாம்.

**உங்களைக் கவர்ந்த ஓவியர்கள்?**

என்னுடைய ஓவிய உணர்வுகளைத் தூண்டிவிட்டது கிட்டண்ணா. அதற்குப் பின்னுக்கு வந்து என்னை நவீனப்படுத்தியது மார்க் மாஸ்ரர். பின்னர் என்னைக் கவர்ந்தவர் பிக்காசோ. பிக்காசோவின் கோடுகளும், வான்கோவின் தூரிகை அசைவுகளும், வீச்சுக்களும் நிறைந்திருக்கும். ஏனென்றால் அது ஒரு தவழுகின்ற காலம். தவழுகிற காலத்தில் எதையாவது ஒன்றை பற்றிக் கொண்டுதான் நடக்கமுடியும். அந்த நேரங்களில் வந்து அந்த இரண்டு பேரையும் பற்றித்தான் நான் மேலே வந்தேன். இப்ப சேசாவின் பாதிப்பு வந்து பிக்காசோவில் இருக்கிற மாதிரி பிக்காசோவின் பாதிப்புகள் எனக்கு இருந்தது. அது என் ஆரம்ப காலகட்ட வளர்ச்சி. அந்த அடிப்படையில் எனக்கு பிடித்த ஓவியர் என்று குறிப்பிட்டுச் சொல்லுறத்துக்குப் பதிலாக எல்லா ஓவியர்களிலேயும் ஏற்றுக்கொளளக்கூடிய சிறப்பு அம்சங்கள் பொதிந்திருக்கும். ஒவ்வொருத்தருக்கும் இருக்கும் தனித்துவங்களை நான் ஏற்றுகொள்கிறேன். இவரைத்தான் எனக்குப் பிடிக்கும் என்று என்னால் சொல்ல முடியவில்லை.

**தாயகத்திலிருந்து நீங்கள் வரைந்த ஓவியங்களுக்கு நோர்வேயில் இருந்து வரையும் ஓவியங்களுக்கும் இடையில் நீங்கள் உங்களுக்குள் அவதானித்த மாற்றங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்.**

நான்கு சுவர்களுக்குள் அடங்கிப் போயிருந்த என் ஓவியக்கலையை முதலில் வெளியில் கொண்டு வந்தவர் கிட்டு அண்ணா. இங்கிருந்து தான் எனது ஓவியக்கைலைக்கான முதற்கட்டப் பயணம் தொடங்கியது. இங்கு நான் தீட்டியவை எல்லாமே ஒரு கருத்தை வெளிப்படையாகவே வெளியில் காட்டுவதாக அமைந்திருந்தது. ஏனெனில் எமது தாயகத்தின் தேவைகளை வெளிப்படையாகவே காட்ட வேண்டிய ஒரு தேவை அன்று இருந்தது இங்கு நான் பல விடயங்களைக் குறிப்பிட வேண்டியிருக்கும் ஒரு தேடுதல் பாதையைத் திறந்து விட்டவர் மார்க் மாஸ்ரர். அவர் எப்பொழுதும் குறிப்பிடும் வார்த்தை ‘தேடுதல்’, “அதாவது நாம் ஒரு ஓவியத்தை படைப்பதற்கு அதன் கருவிற்குள் ஒரு தேடுதலை முதலில் நடாத்திய பின்புதான் அந்த ஓவியத்தை தீட்ட வேண்டும். அப்பொழுதுதான் அதற்கு உயிர் இருக்கும்” என்பார் இந்த வார்த்தைகளின் ஆழமான பதிவுகள் என்னையும் தேடத்தூண்டியது. இந்த தேடுதலின் பாதிப்புகளாய் எனது ஓவியங்களில் பிக்காசோவின் கோடுகளும், வான்கோவின் தூரிகை அசைவும் கொஞ்சம் இருக்கும். இவர்களிடமிருந்துதான் எனது தேடல் தொடங்கியது.

தாயகத்திலிருந்து நான் வரைந்த ஓவியங்கள் ஒரு செய்தியைச் சொல்பவையாக இருந்தன. செய்திகளைச் சொல்வதாக அமைக்கப்பட்டிருந்த ஓவியமானது பிறகு மார்க் மாஸ்ரருடைய தொடர்பால் மாறியது. இன்னும் ஒரு ஓவியருடைய சாயலை அது கொண்டிருந்தது. ஆக மொத்தத்தில் எனது திறமைகள் வெளியே வந்தன. எனக்கென்று ஒரு முகம் அங்கு இருக்கவில்லை. இன்னொருவருடைய முகமூடியை அணிந்துகொண்டு நான் கூத்தாடித் திரிந்தேன்.

ஆனால், நான் புலம் பெயர்ந்து வந்த பிற்பாடு ஒரு சிறிய இடைவெளிக்குப் பின்பு என்னை சுயவிமர்சனத்துக்குள்ளாக்கினேன். அதன் பிற்பாடு எனது உணர்வுகளுக்கு தனித்துவமான அடையாளம் கொள்ளும் கோடுகளை நான் கீறத்தொடங்கினேன். நீங்கள் கேட்டது போலவே நிலத்துக்குக் கீழ், நிலத்துக்கு மேல், கருப்பையில் இருக்கும் குழந்தை, மூளைக்குள் நிகழும் அசைவுகளைக் காட்டுவது போல என நீளும். இவையெல்லாமே நானாக உருவாக்கிக்கொண்ட கற்பனைகள். இல்லையேல் அவை எனது சிந்தனைகள். இரண்டு காலகட்டமாக எனது ஓவியக் காலத்தை பார்ப்பேனாக இருந்தால் முதலாவது கால கட்டம் ஒரு செய்தியைச் சொல்லியது. இரண்டாவது கால கட்டம் இன்னொருவரை ஒட்டி வளர்ந்தது. மூன்றாவது காலகட்டம்


www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்



எனக்கான தனித்துவத்தை வகுத்துக்கொண்டதாகச் செல்கிறது. எனக்கான ஆளுமையோடு ஒரு படைப்பை உருவாக்குபவனாக நிமிர்கிறேன்.

அதன் பின் மூன்றாம் கட்ட வளர்ச்சியாக எனக்கென்று, ஒரு பாணியையும் அதற்கான ஒரு ஆளுமையையும் நான் ஏற்படுத்திக் கொண்டது. இந்த .... தேசத்து (நோர்வே) மண்ணில் தான். இந்த வகையில் நான் குறிப்பிடக்கூடியது, தாயகத்தில் நான் வரைந்தவை நேரடியாக ஒரு செய்தியை சொல்பவையாகவும், இன்னொரு ஓவியரின் சாயல் கொண்டதாயும் அமைந்திருந்தது. நோர்வே நாட்டில் நான் வரைந்தவை கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து விலகி எனக்கென்றோர் பாணியில் சிக்கல் நிறைந்த கோடுகள், வர்ணங்கள்களிடையே ஒரு தேடுதலைத் தூண்டும் வகையில் வரையப்பட்டுள்ளன.

மேற்குலக வாழ்வியல் குறித்த ஓவியங்கள் பல வரைந்திருக்கிறீர்கள். உதாரணமாக, இயந்திர வாழ்வியல் கலாச்சாரம், இனி வரும் சந்ததி, ஆகிய ஓவியங்கள், கோட்டுச் சித்திரங்கள் மிக ஆழமானவை இவை குறித்து உங்களுடைய பார்வையை எங்களுடன் பகிர்ந்துகொள்வீர்களா? 'இயந்திர வாழ்வியல் கலாச்சாரம்' குறித்த ஓவியத்தை இயந்திரன் என்றோ விஞ்ஞான மனித ஓட்டப் பந்தயம் என்றோ, புள்ளி என்றோ, தற்சிறை என்றோ உலகம் என்றோ தலைப்பிட்டு அழைக்கக்கூடியதாக இன்றும் பல அர்த்தங்களைப் பார்வையாளருக்கு எழுப்பக் கூடியதாக எவ்வாறு அமைக்கிறீர்கள்?



இயந்திர வாழ்வியல் அல்லது - ஐரோப்பிய வாழ்வியலில் எமது வாழ்க்கையை ஒரு கணம் நின்று பார்த்தால் தெரியும் எமது வாழ்க்கையின் ஓட்டம் இயந்திரமயமானது என்று. அந்த ஓவியத்தைப் பார்த்தீர்களானால் தெரியும் அவை இலத்திரனியல் அம்சங்களால், கோடுகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. பார்த்தால் ஒரு உசை உரவை- அதாவது அப்படி இருக்கிற மாதிரி ஒரு இலத்திரனியல் அமைப்புகளாகத்தான் ஒவ்வொரு கோடுகளும் அதற்குள் தீட்டப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தமானது வந்து இன்றைய மனிதன் கலங்களுக்குப் பதிலாக இலத்திரனியல் அதாவது சேர்கிட் வாழ்க்கையில வந்து உட்படுத்தப்பட்டிருக்கிறான்.

தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கில் மனிதன் முந்துவானா, தொழில்நுட்பங்கள் முந்திவிடுமா என்கிற கேள்வி எழுகிறது. அதில வாய் பிளந்து நிற்கிற அந்த உருவமானது தனக்குள்ளே ஒரு பிரமிப்பை ஏற்படுத்திக்கொள்கிறது நான் யார், நான் எப்படிப் போவன், நான் வெல்லுவேனா, தோற்பனா என்ற ஒரு சந்தேகக் குறியை தனக்குள் ஏற்படுத்துகிறது. அதே போல அந்த கீழ்தளத்தில் கூட சில சில மண் முட்டைகள் அடுக்கி இருக்கிற மாதிரி சில சில




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடயங்கள் காணப்படுகிறது அதிலையும் சில முட்கம்பி வேலிகளும் காட்டப்படுது. ஆக மொத்தத்தில வந்து இன்றைய அந்த தொழில்நுட்ப வளர்ச்சியானது வந்து இராணுவத்தினூடாகவோ, நல்ல விடயத்தை செய்மதி அனுப்பி கண்டுபிடிப்பதனூடாகவோ, எந்த ஒரு வகையில அது நன்மையைச் செய்கிறதா அல்லது தீமையைச் செய்கிறதா என்ற கேள்வி எழுகிறது. என்ன விடையைப் பெறப் போகிறோம் என்கின்ற வகையில் தான் அந்த ஓவியம் படைக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதுபோல் ஒரு ஓவியத்தின் பண்பும், உருவாக்கமும் அது உள்ள வாழ்வியல் சூழலை வைத்தே அமைகிறது. அந்த வகையில் 'இயந்திர, வாழ்வியல் கலாச்சாரம்' என்ற ஓவியத்தை எடுத்துக்கொண்டால் இது மனிதர்களிற்கும் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைச்சலான இயந்திரங்களிற்கும் இடையிலான ஒரு ஓட்டப்பந்தையும். இதன் இறுதியில் கட்டுப்பாடு யார் கையில் உள்ளது என்பது விடைகாணப்படாத ஒரு கேள்வி ஆகையால் தொழில்நுட்ப வளர்ச்சியானது இன்றைய எமது வாழ்வியல் சூழலை சீர்குலைக்கின்றதா அல்லது வளர்க்கின்றதா? என்ற ஒரு விடை காணப்படாத கேள்வியைத்தான் இந்த ஓவியத்தின் கோடுகளும் கூடுதலான கறுப்பு வர்ணமும் காட்டுகிறது. இங்கு கறுப்பு வர்ணமானது கூடுதலாக பாவிக்கப்பட்டிருப்பது மனிதனின் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் போட்டி போட முடியாது தோற்று போன வர்ணம் என்பதை இன்றைய காலக் கட்டத்தைத்தான் காட்டுகிறது.

அடுத்து இனி வரும் ஓவியம் பற்றிச் சொன்னால் ஒரு தாய் அந்தத் தாயின் வயிற்றில் ஒரு கரு. அந்தக் கருவைச் சுற்றிச் சூழலைப் பார்ப்பீர்களானால் ஐரோப்பிய நாடுகளை அடையாளப்படுத்தும் முக்கிய அடையாளங்கள் அங்கே வரையப்பட்டிருக்கும். எங்களுடைய பண்பாடுகள், அடையாளங்கள் எவ்வாறு அழிந்து போகப்போகிறது என்பது குறித்தும் கேள்விகள் எழும்புகிறது. அந்த ஓவியத்தில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் எமது எதிர்காலச் சந்ததியினர் தாயகம், மேற்குலக நாடுகளில் பன்முகக் கலாச்சார வாழ்வில் தாங்கள் யார் என்றும் தமது முகங்களை இழந்தும் கேள்விக்குறியாக நிற்கும் ஓர் நிலையைத்தான் அதுகாட்டுகிறது. நான் யார் என்ற கேள்வி மிகப் பெரிய கேள்வியாக இனி வரும் சந்ததியிடம் எழுந்து நிற்கப் போகிறது. இந்த ஓவியத்தில் காணப்படும் ஒவ்வொரு கொழுக்கியும் எமது எதிர்காலச் சந்ததியினரின் எதிர் காலம் பற்றிய பல்வேறு வகையான கேள்விக்குறியே.



புத்தரைத் தொலைத்த தேசம் பற்றிய ஓவியம் காட்டும் தங்களின் சிந்தனைப் பார்வையை எமக்கும் காண்பிக்க முடியுமா?

அது கறுப்பு வெள்ளையால் தீட்டப்பட்ட ஓவியம் சித்திரம் என்று சொல்லிக்கொள்ளலாம். தங்களை சிங்கள பௌத்த தேசத்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அவர்கள் என்றைக்கு எங்கள் மீது மிகக் கொடுமையான சித்திரவதைப் போரை ஆரம்பித்தார்களோ அன்றைக்கே அது பௌத்த தர்மத்தைத் தொலைத்த நாடாகி விட்டது. அப்பவே நாங்கள் கருத்தில் கொள்ளலாம் புத்தர் அந்த நாட்டை விட்டு ஓடிவிட்டார் என்று. எங்களுக்குக் கொடுமைகளை இழைக்கத் தொடங்கிய முதலாவது நாள். புத்த விகாரையானது கறுப்பு நிறம்கொண்ட ஒரு பாதைபோல அமைக்கப்பட்டிருக்கும். புத்தருடைய ஒளிமயப்படுத்தப்பட்ட விகாரை இருண்டு விட்டது என்பதைக் காட்டுகிறது. இருண்ட பாதையானது மேல்நோக்கி வளர்ந்து செல்கிறது. அது எப்ப முடியும் என்று யாராலும் சொல்ல முடியாது.

இங்கு வரையப்பட்டுள்ள பௌத்த விகாரையானது பல்வேறு வகையான கருத்துக்களை பார்ப்பவர்கள் மத்தியில் உண்டுபண்ணும். அது தவிர கருமையான விகாரையும், தோற்றமும் அடித்தளத்தில் பல பிரிவுகளாக வரையபட்ட தளங்களும், மாறுபட்ட சிங்கள பேரினவாத அரசுகள் பௌத்தத்தின் பெயரால் செய்த கொடுமைகளை மேலோட்டமாக சித்தரிக்கின்றது. ஆக மொத்தத்தில் இலங்கைத் தீவு பௌத்த சிங்கள தேசம் என்ற கருத்தில் பௌத்தம் என்றோ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தொலைந்து விட்டது. இன்று சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைகளும், சித்திரைவதைகள் மட்டுமே மிச்சம்.

தொழில் ரீதியான முறையில் ஓவியங்கள் எமது சமூகத்தில் இயங்குவதற்கான சூழல் உருவாகி வருகிறதா?

▫ உண்மையில் இதற்கான பதில் மக்களிடம்தான் உண்டு. வரலாற்றைப் பொறுத்தவரை ஓவியர்கள் வாழும் காலத்தில் அவர்களது ஓவியங்கள் வாழ்ந்ததில்லை மாறாக ஓவியர்கள் இறந்த பின்பு தான் அவர்களது படைப்புகள் வாழுகின்றன. உதாரணமாக பிக்காசோ, வான்கோ, நோர்வே நாட்டு எட்வாட்முஞ் இன்னும் பலர். ஓவியக் கலையானது மக்களிடையே பெருமளவில் அறிமுகப்படுத்தப்படும்போது தான், தொழில் ரீதியாக அதனுடைய வரவேற்பு அதிகரிக்கும் எமது சமூகத்தைப் பொறுத்த வரையில் இதற்கான கால அவகாசம் தேவை என்பதுதான் எனது கருத்து.

விடியலை நோக்கிய எனும் ஓவியம் தத்துவப் பின்னணியில் இயங்குகிறது என விமர்சகர்கள் குறிப்பிடுவது குறித்து சொல்லுங்கள்?

▫ எனது ஓவியங்களைப் பார்க்கும் போது விமர்சகர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைப்பார்கள். ஒரு விதை , விதைக்குள் இருந்து ஒரு உருவம் ஒளியை நோக்கி எழுகிறது. இது ஒரு சாதாரண விளக்கம். அந்த விதைக்குள் பல வகையான நிறங்கள், மதங்கள், முகங்கள் காணப்படுகின்றன. வெளிச்சத்தை நோக்கி விதை மேற்கொள்ளும் பயணம். வெளிச்சம் விடுதலையாக இருக்கலாம் அல்லது சுதந்திரமாக இருக்கலாம் அல்லது எங்களுக்கான வாழ்க்கையாக இருக்கலாம். உண்மைதான், அந்த ஓவியத்தைப் பொறுத்தவரையில் அதற்கு பல அர்த்தங்களை பார்ப்பவர்கள் கருத்தில் கொள்ளலாம். அடக்குமுறை, சீர்குலைந்த வாழ்வியல் சூழலிற்குள் இருந்து ஒரு விடுதலை நோக்கிய பயணத்திற்காக ஏங்கும் ஒரு நிலையைத் தான் இந்த ஓவியம் காட்டுகிறது. உதாரணமாக இந்த ஓவியத்தின் கீழ் பகுதியானது விதை போன்ற ஒரு அமைப்பைக் கொண்டிருப்பது கூட முளை விட்டு ஒளி தேடி வளரும் ஒரு கருத்தைத்தான் கொண்டிருக்கிறது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலம் கனியும்

எ.ஜோய் கவிதைகள்

இலைகள் உண்டு துப்பிய
வெளிச்ச எச்சங்கள் மட்டுமே
எங்கள்
பகல்களாய்ப் போகிறது....

நிர்மலமான
எங்கள் வானத்தில்
எங்கிருந்தோ
போர்ப்பறை முழங்கி
ஆரவாரித்து வரும்
கரிய மேகங்களோடு
சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது
காற்றின் துணை கொண்டு....

மின்னியும் முழங்கியும்
படையெடுத்தும்
தன் வலிய இருத்தலை
உணர்த்திக்கொள்வதற்காக
எண்ணிக்கொள்கிறது
ஆயுளில்லா மேகங்கள்...

அவிழ்ந்து போகும் அபாயம்
மறந்து போன மேகங்கள்
உங்கள் ஒவ்வொரு மோதுகையிலும்
அழிந்து போவது நீங்கள் மட்டுமே...

உதிர்கால வேளையிலே
இலைகளெல்லாம் அலைகளோடு
அள்ளுண்டு போக

எங்கள் பகல்களை
நாங்கள் சமைத்துக்கொள்வோம் ...
அன்று
எங்கள் வானத்தழல்
விடுதலைச் சூரியன்
கிழக்கில் இருந்து மேற்குவரை
சுதந்திர நடை பயில்வான்....

அதுவரைக்கும்
உதிர்ந்த இலைகளோடு
விழுந்த இலைகளோடு
விழுந்து கிடக்கும் பூக்களை
எடுத்து கோர்த்து வைக்க மறக்காதீர்கள்
அது வரைக்கும் வசந்தத்தின்
வழிப்பாதையில் விரிக்கப் பயன்படும்....





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





## எரிவதும் சுகமே !...

வெப்பத்தின் மீதான
என் வெப்பம் பற்றி
யாரும் அக்கறை கொள்வதாக
எனக்குத் தெரியவில்லை....
பெறுமதிப் பூக்கள்
பூத்துக் குலுங்கும் மரமாய்
வந்த கடன் தீர்க்க
வருவாய் கரைந்த போகும்...

உள்ளுறைந்த
திண்மப் பனிக்கட்டி
திரவமாய் உருகியோடு
கண்ணுறங்கா நிலையில்
நானோ!.....

திரவம் திண்மமாதலும்
திண்மம் திரவமாதலும்
இயல்பு என்றால்
வெப்பம் தணித்தலும்
தணிதலில் பூத்தலும்
இயல்பற்றதாகுமோ?....

இயல்பற்றது இயல்பாகும் தருணம்
வெப்பம் கக்கிய
அக்கினித் துகளிலிருந்து
நான் முழுமையாய்
எரிந்து போயிருப்பேன்....

## தாய்மண்

நிச்சயமற்ற ஒரு கணத்தில்
நீயும் நானும்
பிரிந்து சென்றோம் ...

பூவரசங் கிளைகளில்
கொஞ்சிப் பேசும் குருவிகளும்

ஓட்டு வீட்டு முகப்பில்
திரியும் புறாக்களும்

கொய்யா மரத்தில்
தாவித் திரியும்
அணில்களும்
எல்லாமும் எல்லாமும்
உன்னையும் விட்டு
வான் பறவை ஒன்றின் சிறகசைப்பில்
புள்ளியாய் தொலைந்து போனேன்....

தொலைந்த புள்ளியில்
மீண்டும் பிறப்பெடுத்து
வெள்ளிகள் விரித்த வீதியில்
துள்ளியே நடைபயில
எல்லாமும் எல்லாமும்
எனக்கு அந்நியமாகிப் போனது

அந்நியன் கால்பட்ட
உன் தேகம் அனலாய் கொதித்து நிற்க
நான் மட்டும்

பரதேசம் புகுந்து
பரதேசி ஆனேன்...

நீள் கொடிய பயணத்தில்
உன்னை தரிசிக்கும் ஆவல்
என்னைத் தொல்லை செய்ய
எனக்குள் எழுந்தழியும் சந்தேகம்
என்னை நீ ஏற்பாயா
அல்லது மறுப்பாயா?....

சந்தேகித்த ஒரு கணத்தில்
என் பாதம்
உன்னைத் தொடுகையிலே
மரணித்துப் போன உணர்வுகளுக்கு
ஒத்தடமாய்
உன்னில் இருந்து
கேட்டது அந்த ஒலி
வா மகனே
எப்படி இருக்கிறாய்?....



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கனவு மெய்ப்படும்

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, பொருளா தாரத்தடைகளை மீறி எழுகின்ற முயற்சியில் வன்னிநிலம் பிரசவவலி கண்ட தாயாகத் தோற்றம் தருகிறது. வன்னிநிலம் வளர்ச் சியை நோக்கிய பாய்ச்சலுக்குத் தயாராகி வருவதை, தமிழர் தாயகத்தின் பொருண் மிய உந்துசக்தியின் மையநிலையமாக மாறி வருவதை அண்மைக்காலங்களில் அங்கு பயணஞ்செய்தோர் அறிவர். அதன் கட்டியெ ழுப்புதலுக்கான உந்துதளமாக புலம்பெயர் தமிழர்கள் இருந்து வருவதை நிரூபித்திருக் கிறது வன்னிரெக் என்ற வன்னி தொழிநுட்ப வியல் நிறுவகம்.



சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தி னால் சிங்கம் தீபனின் கல்வி எட்டாந்தரத்துடன் நின்றுபோயிற்று. மிதிவெடியினால் அவரது கால் துண்டாடப்பட்டபின் எதிர்காலம் மேலும் இருண்டுபோயிற்று. அமெரிக்காவின் சிலிக் கான் பள்ளத்தாக்கில் பணிபுரியும் தமிழ்ப் பொறியியலாளர்களும் விஞ்ஞானிகளும் இணைந்து உருவாக்கிய இப்புதிய தொழி நுட்பக்கல்லூரி வன்னிப்பெருநிலப்பரப்பில் தீபனுக்கும் அவரைப்போலவே ஆர்வமுள்ள வடக்குக்கிழக்கின் தமிழ் இளைஞர்களுக்கும் தனது கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது. தீபன் "நான் எனது பெற்றோரில் தங்கி வாழவேண் டும் என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். இப்போது நானே அவர்களை பராமரிக்கக் கூடியதாக நிலைமை மாறியிருக்கின்றது" என் கிறார். வன்னி தொழிநுட்பக்கல்லூரிக்கு வருவ தற்கு முன் கணினியை இவர் நேரில் பார்த் திருக்கவில்லை. முதலில் கணினியை உப யோகப்படுத்துவதைக் கற்கவேண்டியிருந்தது. பின்பு ஆங்கிலத்திலும் போதிய அறிவு பெற வேண்டியிருந்தது. ஏனெனில் கல்லூரியின் விரிவுரைகள் பாடக்குறிப்புகள் ஆங்கிலத்தி லேயே வழங்கப்படுகின்றன. தீபன் இப் பொழுது இலத்திரனியலிலும் மென்பொருள் அபிவிருத்தி மற்றும் கணினி தொடர்பான கற்கை நெறிகளிலும் பல்கலைக்கழக மட்டத் திலான வகுப்புகளில் படித்துக்கொண்டிருக் கிறார். போரினால் பாதிக்கப்பட்டுள்ள, தொழி நுட்பத்தில் வறுமைப்பட்டுள்ள வடக்கு-கிழக் கில் இக்கற்கைநெறிகள் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" — பாரதி



www.tamileelamarchive.com

> புலம் பெயர்ந்துவாழுகின்ற மக்கள் தமது தாய் மண்ணுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என்பதற்கு முன்னுதாரணமான படிப்பினை வன்னிரெக்

வன்னிரெக் என அறியப்படும் வன்னி தொழிநுட்பவியல் நிறுவகம் சான் யோசேயில் வாழும் மென்பொருள் பொறியியலாளர் ஜெயக்குமாரசூரியரின் கனவிற் கருவாகியது. யாழ்ப்பாணத்திற் பிறந்த சூரியர் 1982 இல் நாட்டை விட்டு இடம்பெயர்ந்தவர். 2002 இல் யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் உருவான அமைதிச்சூழலில் தனது தாய்மண்ணுக்கு சேவை செய்யவிரும்பினார். அச்சமயம் புலம்பெயர்ந்துவாழும் தமிழ்த் தொழிநுட்பவியலாளர்களால் அமைக்கப்பட்டிருந்த அனைத்துலக தமிழ்த் தொழிநுட்பவியலாளர் அமைப்பு (INTERNATIONAL TAMIL TECHNICAL PROFESSIONALS ORGANIZATION -ITTPO) தாயகக்கட்டுமானப்பணி களுக்கென தமது துறை சார் அறிவையும் ஆதரவையும் வழங்க ஆயத்தமாக இருப்பதை அறிந்து அதனுடன் தொடர்பு கொண்டார். உடனடியாகவும் தாராள மனத்துடனும் ITTPO உதவமுன் வந்தது. வன்னிரெக் நிறுவிய 6 மாதங்களுக்குள்ளாகவே கல்விமான்களும் உயர்தொழிநுட்பவியலாளரும் வன்னிரெக்கின் நாளாந்த தொழிற்பாட்டிற்கு அவசியமான 100,000 அமெரிக்க டொலர்களையும் தங்களது சேவைகளையும் வழங்கினர். ITTPO இன் தலைமைச் செயலாளரில் ஒருவரும் IBM நிறுவனத்தின் ஆய்வாளருமான ரட்ணம் சூரியகுமாரன் "ஏராளமான திறமையுள்ள மாணவர்கள் யுத்தத்தினால் பல்கலைக்கழகத்துக்கு செல்லமுடியாத நிலை அங்கு இருந்தது. அத்துடன் தொழிநுட்பம் பற்றிய போதிய அறிவு இன்றி உள்ள வடக்கு-கிழக்கு மாணவரிடையே கணினி தொடர்பான கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு வன்னியே பொருத்தமான இடம் என்று நாம் தீர்மானித்தோம்" எனக் கூறுகிறார்.

வன்னிரெக்கின் ஆரம்பப் பணிகளுக்காக அமெரிக்காவிலிருந்து ஜெயக்குமாரசூரியர் இலங்கை வந்தபோது போரின் வடுக்களால் வன்னிப்பெருநிலப்பரப்பு சிதைவுற்றுக் காணப்பட்டது. கிளிநொச்சி நகரம் செல்மழையால் முழுக்காட்டப்பட்டிருந்தது. சூழவிருந்த வயல்நிலங்களும் காணிகளும் நிலக்கண்ணிகளால் நிறைந்திருந்தன. கட்டுமானப்பொருட்களும் பொறிகளும் போர் நடந்த 12 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டு சீர்குலைந்திருந்த ஏ- 9 பாதை வழியாக பல சிரமங்களின் மத்தியில் கொண்டுவரப்பட்டது. யூன் 2003 இல் வன்னிரெக் திறந்துவைக்கப்பட்டது. அமெரிக்காவின் சியாட்டில் (Seattle) நகரிலுள்ள மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களினால் வன்னிரெக்கின் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் திட்டவறிக்கையில் நிர்மலன் கார்த்திகேயன் கீழ்க்கண்டவாறு குறிப்படுகிறார். "புலம் பெயர்ந்துவாழுகின்ற மக்கள் தமது தாய் மண்ணுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதற்கு முன்னுதாரணமான படிப்பினை வன்னிரெக்"

புழுதிநிறைந்த ஒழுங்கை ஒன்றின் முடிவில் அழகாகப் பேணப்பட்டுள்ள பசுமையான புல்வெளியின் மத்தியில் வளாகம் அமைந்துள்ளது. தொழிநுட்பத்தில் பின்தங்கியுள்ள ஒரு கிராமத்தில் உயர் தொழிநுட்பச்சோலையாக வன்னிரெக் இருக்கிறது. ஒழுங்கமைக்கப்பட்ட பாதைகள் வளாகத்தின் புல்வெளிகளை இடைவெட்டிச்செல்கின்றன. மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது; தொலைபேசிகள் அரிதாக உள்ளன; இவ்வாறான நிலை உள்ள கிளிநொச்சி நகரில் வன்னிரெக்கின் வகுப்பறைகளோ குளிர்ச்சியாக, கற்றலுக்கான முற்று முழுதான சூழலை கொண்டிருக்கிறது. இதன் மென்பொருள் ஆய்வுகூடம் பென்ரியம் 4 கணினிகளால் நிறைந்துள்ளது. அத்துடன் மாணவர்கள் தங்கிநின்று படிப்பதற்கான தங்குமிட வசதிகளை கொண்டுள்ளது. வளாகத்தினுள் தற்பொழுது விரிவுரைமண்டபம், ஆய்வுகூடம், வேலைவாய்ப்பு அலுவலகம், உணவுச் சாலை, உடற்பயிற்சிக்கூடம், 15,000 புத்தகங்களைக் கொண்ட நூலகம் என்பன காணப்படுகின்றன. இங்குள்ள 12 விரிவுரையாளர்களில் சிலர் வருகைதரு விரிவுரையாளராகவும் ஏனையோர் நிரந்தர விரிவுரையாளர்களாகவும் உள்ளனர். இவர்கள் இலங்கை, இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கல்வியையும் பயிற்சியையும் பெற்றவர்களாவர். இலத்திரனியல், மென்பொருள், ஆங்கிலம், நெற்வேர்க்கிங், தந்திகளற்ற தொலைத்தொடர்பு போன்ற கணினிசார் கற்கைநெறிகள் கற்பிக்கப்படுகின்றன.

இந்த நகரத்தின் தாழ் மின்னழுத்தம் காரணமாக வன்னிரெக்கின் சேவருக்கு இடையறாத மின்வழங்கலை உறுதிப்படுத்த 2 டீசல் மின்பிறப்பாக்கிகள் தேவைப்படுகின்றன, அத்துடன் இணையத்தளவசதிகள் இன்னும் டயல்-அப் முறையிலேயே உள்ளன. இது மாணவருக்கும் ஊழியருக்கும் விரக்தியைத் தரும் விடயமாக உள்ளது. கல்லூரி நிர்வாகிகள் வளாகத்திற்கென செய்மதித் தொடர்பு கருவி வசதிகளை பெறுவதற்கு இலங்கை அரசிடம் அனுமதி கேட்டும் அதற்குரிய பல னெதுவும் இதுவரையிற் கிடைக்கவில்லை.

சென்ற கல்வியாண்டில் 60 பட்டதாரிகள் கல்வி கற்று வெளியேறியுள்ளனர். இந்த ஆண்டு 180 விண்ணப்பதாரிகளுள் 60 பேர் தேர்வு செய்யப்பட்டு கல்விகற்க ஆரம்பித்துள்ளனர். அடுத்த ஆண்டு ஓராண்டுப்பட்டப்படிப்பினை ஈராண்டுப் பட்டப்படிப்பாக விரிவுபடுத்த வளாக நிர்வாகம் உத்தேசித்துள்ளது. கிளிநொச்சி அறிவியல்நகரில் 150 ஏக்கர் நிலம் புதிதாக அமைக்கப்படவிருக்கும் வளாகத்துக்கென வாங்கப்பட்டிருக்கின்றது.

சர்வதேசப் பல்கலைக்கழகங்களுக்கு நிகரான பாடநெறிகளை வழங்க வேண்டும் என்பது வன்னிரெக்கின் லட்சியமாக உள்ளது. 2010 இல் 1000 மாணவர்கள் வரை இங்கு கல்விகற்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பட்டதாரியாக வெளியேறும் ஒரு மாணவர் வன்னிப்பெருநிலப் பரப்பில் இரண்டு வருடமாவது பணிபுரிய வேண்டும் என்பது கல்லூரிவிதியாக உள்ளது. இங்கு படித்து வெளியேறும் மாணவர்கள் உள்ளூர் நிறுவனங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பணியாற்றமுடியும்.

வன்னிரெக்கின் தொழிநுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளராகப் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டம், உலக உணவுத்திட்டம், வலயக்கல்வியலுவலகம், சுகாதாரச் சேவைகளுக்கான மாகாண உதவிப்பணிப்பாளரலுவலகம், மாவட்டச் செயலகம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன அவற்றிற் சில.

வன்னிரெக்கின் பட்டதாரியொருவர் வெளிவழங்கற்திட்டமொன்றின் ஊடாக அமெரிக்காவின் மின்னியாப் பொலிஸ் நகரிலுள்ள computerzone consulting (czc) என்ற நிறுவனத்தில் பணிபுரிகின்றார். வெளிவழங்கலூடாக மேலும் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தம்மைத் தொடர்புகொள்ளும் என்று நிர்வாகம் நம்பிக்கை தெரிவிக்கின்றது. தற்போது வெளிவழங்கல் ஒப்பந்தங்களில் அநேகமானவை இந்தியாவின் பெங்களூரை நோக்கிச் செல்கின்றன. வன்னிரெக் போதுமான பட்டதாரிகளை உருவாக்குவதுடன் வெளிவழங்கல் ஒப்பந்தங்களுக்கு பெங்களூரை விட மலிவான விலைக்கு வழங்கக் கூடியதாக இருப்பின் உலகின் உயர் தொழிநுட்பநிறுவனங்களின் கவனம் வன்னி நோக்கி திரும்பக்கூடும். வன்னியில் கணினித் தொழிற்துறை ஒரு புதிய பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடும். அப்போது ஆசியாவின் புதிய சிலிக்கான் பள்ளத்தாக்காக வன்னி மாறலாம். புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆதரவு தொடர்ச்சியாகக் கிடைக்கும்போது இவை யாவும் சாத்தியமாகலாம்.

ஆதாரம்:
லிசா மக்கிறெகர் (mercury news)
வன்னிரெக் இணையத்தள முகவரி:
www.vanni.org



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# "ஐயா நீங்கள் உயிருடன் வந்ததே அதிசயம்"



1989ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு கொழும்பு நாளிதழ்கள் வருவதில்லை. ஞாயிறு வெளியீடுகள் மட்டும் வரும் 'சண்டே ரைம்ஸ்' வாங்குவதற்காக காலை ஒன்பது மணியளவில் சைக்கிளில், நாச்சிமார் கோவிலருகில் உள்ள எனது தற்காலிக இருப்பிடத்திலிருந்து யாழ் பேருந்து நிலையப் பேப்பர் கடைக்குச் சென்றேன்.



www.tamileelamarchive.com

## வேரற்கேணியன்

தமிழீழ ஆவணக் காப்பகம்



அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ண்பர்களுடன் கதைத்துக்கொண்டு ருபார்; வருவார் என எதிர்பார்த்திருந்த ன் வீட்டாருக்கு ஏமாற்றம்.

மூன்று மணியாயிற்று. திர்ச்சியடைந்து அயலவர் உறவினரிடம் சால்லித் தேடிப் பார்த்துவர னுப்பினார்கள். அந்நாளில் நான் ரசை' வார ஏட்டில் பணியாற்றிக் காண்டிருந்தேன்.

தமிழ் ஈழம், ஈழமக்கள் புரட்சிகர டுதலை முன்னனியின் நிர்வாகத்தில் ருந்தது. எதிர் இயக்கத்தவரும் அவர்களின் ஆதரவாளர்களும் டத்தப்பட்டு தடுப்பு முகாம்களில் வைத்து த்திரவதை செய்யப்பட்டனர்; சிலர் டப்பட்டனர்; தெருவோரம் வீசப்பட்டனர்; லர் காயங்களுடன் விடுதலையாகி ருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

என் வீட்டார் என்னைத் தேடி லைந்தனர். ஒரு நடுத்தர வயதினர் ணிந்து, மணிக்கூண்டுக் கோபுரம் அருகில் இருந்த தடைமுகாமுக்குப் பானார். வாசலில் இருந்தவனிடம் என் பயர் உருவ விபரம் சொல்லி விசாரித்தார். "ஓ... இங்கேதான் இருக்கிறார்...... விசாரித்தபின் விடுவார்கள்..." என்றான் அவன். அவர் திரும்பிச் சிறிது தூரம் போனவர் மீண்டும் வந்து அவரை ஒருக்காப் பார்த்திட்டுப் போகலாமா? என்று நயமாக் கேட்டார். "இப்ப பார்க்க முடியாது" என்றான் அவன். பேச்சில் கடுமை தெரிந்தது. அவர் வீட்டுக்கு போய் நடந்ததைச் சொன்னார். அதைக் கேட்ட இளைஞன் ஒருவன் "நான் போய் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

முகாம் வாசலில் நின்றவனிடம் என் பெயர் அடையாளம் சொல்லி "அவரைப் பார்த்துவிட்டுப் போக வந்ததேன்" என்று கேட்டான். "பார்க்கமுடியாது" என்றான் அவன்.

"நான் அவர் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரன் நானும் உங்கள் ஆதரவாளன், கலட்டியம்மன் தெரு," என்றான். இளைஞன்.

"அவரை இப்ப பார்க்க முடியாது.... பொறுப்பாளர் இல்லை நீ நாளைக்கு வா...." என்றான் அவன்.

"அவர் இங்கே இருக்கிறாரா?..."

"ஓ.... கண்ணாடி போட்டவர்.... கையில் ஒரு இங்கிலீஸ் பேப்பர்.... பழைய ஹீரோ சைக்கிளுடன் வந்தார்..."

"சரி... அவர்தான்.... பொறுப்பாளரை எங்கே சந்திக்கலாம்?..." "அவரை நீ பார்க்க முடியாது போ... நாளைக்கு வா..." என்றான், கோபமாக.

என்னைத் தேடி நாற்திசையும் போனவர்கள் வெவ்வேறு தடைமுகாம்களில் விசாரித்தார்கள். தெருவோரம் கிடந்த சடலங்களைக் கூர்ந்து பார்த்தார்கள். நான் வேலை செய்த பத்திரிகைப் பணிமனையில், இருந்தவர்களிடம் நான் காணாமல் போனதைச் சொன்ன போது அவர்கள் திகைப்படைந்து கவலைப்பட்டனர். தேடிப் போனவர்கள் பகல் மறைந்து இருள் வந்தும் வெறுங்கையுடன் திரும்பி வீடு வந்தனர். பெண்கள் கோயிலுக்குப் போய் நேர்த்தி வைத்தனர். சோதிடர்களிடமும் சாமியிடமும் சென்றனர். ஒரு பெண் வந்து " அவர் உயிருக்கு ஆபத்தில்லை, ஆயுள் எண்பதுக்கு மேல் ஆனால் விபத்து நேரும் காலம்." என்று ஒரு பெண் சோதிடர் சொன்னதாக நம்பிக்கை தெரிவித்தார். என் மனைவியை பத்து மைல் தொலைவில் இருந்த ஒரு அம்மன் கோயிலுக்கு காரில் கூட்டிப் போனார்கள். அந்த அம்மன் உருக்கொண்டு, "கவலைப் படாதே உன் புருசன் இன்னும் பத்து நாளில் வீட்டுக்கு வருவார் வந்தபின் அவரையும் கூட்டிக்கொண்டு இங்கே வா" என்றது.

நான் கடத்தப்பட்ட நாளிலிருந்து மனைவி உண்ணாவிரதம் இருந்தாள். கோப்பி, தேனீர் மட்டும் அருந்தினாள். பதினைந்தாம் நாள் நான் வீடு வந்தபின்னர் சோறு சாப்பிட்டாள்.

தன்னுடன் இருந்த மூத்த மகனை அயலவரின் உதவியுடன் விமானத்தில் கொழும்புக்கு அனுப்பிவைத்தாள்; ஊரில் அவன் இருந்தால் தகப்பனைக் கடத்தியவர்கள் மகனையும் கடத்திக்கொண்டு போய்விடுவர் என்று அஞ்சினாள்.

* * *

கடையில் 'சண்டே ரைம்ஸ்' வாங்கிக் கொண்டு சைக்கிளில் ஏறப்போனபோது ஒருவன் வந்து என் கையைக் கெட்டியாக பிடித்தான்.

"உன்மேல் சந்தேம், விசாரிக்கவேணும் வா" என்றான் அவன். எனக்கு நிலமை சட்டெனப் புரிந்தது. அந்நாளில் அப்படித்தான் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தன. என்ன சந்தேகம் சொல்லேன் என்றேன். "நீ வருகிறயா? இல்லையா?...."

வீதியில் நின்று வாக்குவாதப்பட்டால் அவன் அங்கேயே வைத்து என்னை அடித்து உதைத்து இழுத்துப் போவான். 'அகப்பட்டாயிற்று. இனி நடப்பது நடக்கட்டும்' என்ற முடிவுடன் சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தேன். என்னை அறிந்தவர்கள் எனக்கு நடக்கப்போவதை உணர்ந்தவர்களாக என்னைப் பரிதாபமாகப் பார்த்துகொண்டனர். மின்சார நிலைய வீதியிலிருந்து பேருந்து நிலையத்தில் திரும்பி மருத்துவமனை வீதியில் ஏறி சிறிது தூரம் சென்று வலப்பக்கம் திரும்பி மணிக்கூண்டுக் கோபுரத்தின் அருகில் இருக்கும் அசோக் ஹோட்டல் எதிரில் இருந்த பெரிய வீடு ஒன்றைக் காட்டி "உள்ளே போ" என்றான். என்னைக் கூட்டி வந்தவன். என் கையில் இருந்த சைக்கிளை வாங்கிக்கொண்டு போய் வீட்டின் பின்னால வைத்தான்.

அந்த வீட்டின் மண்டபத்துச் சுவர் ஓரம் தூரம் ஒருவராய் பலர் நின்றனர். எல்லோரும் மௌனமாக ஒரு புதிய வரவை கவலையுடன் பார்த்தனர். 'ஈழமுரசு' பத்திரிகையில் என்னுடன் பணியாற்றிய ஒருவரும் ஒரு போட்டோ ஸ்ருடியோ உரிமையாளரும் எனக்குத் தெரிந்தவர்கள்.

உள்ளேயிருந்து ஒரு இளைஞன் வந்து என்னைப் பார்த்து "நீ யார் என்ன பெயர்? எந்த ஊர்?" என்று கேட்டான். அவனிடம் கைத்துப்பாக்கி இருந்தது. அவன் அருகில் மற்றொருவன் கையில் பொல்லுடன் நின்றான். நான் என் பெயர் ஊர் சொன்னவுடன் அடி விழுந்தது. கை மணிக்கட்டிலும் தொடையிலும் அடிகள் விழுந்தன. "ஐயோ ஐயோ" என்று நான் சத்தமிட்டேன். பிஸ்ரலுடன் நின்றவன் "அடிக்காதே" என்றான் அடித்தவன்தான் முகாம் பொறுப்பாளர் என்று பின்னர் தெரிந்துகொண்டேன்.

"உள்ளே கூட்டிப்போ" என்றான் பிஸ்ரல்காரன். உள்ளே போனதும் "சேட்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கழட்டு மணிக்கூடு கழட்டு, கண்ணாடி கழட்டு ..” என்றான். பொறுப்பாளர்.

“இது தொலைப் பார்வைக்கான கண்ணாடி”என்றேன். “கழட்டடா என்று பொல்லை ஓங்கினான். கழற்றிக் கொடுத்தேன். சேட் பொக்கற்றில் கையை வைத்துப் பார்த்தான். ரூபா 150.00ம் சில்லறையும் இருந்தன. அவற்றை எடுத்து கண்ணாடி மணிக்கூடுடன் சேட்டில் சுற்றி அலுமாரியில் வைத்தான். “இரு அப்பிடி” என்று அறை மூலையைக் காட்டி விட்டுப் போனான்.

பத்து நிமிடங்கள் சென்றிருக்கும். அவனும் கையில் தடியுடன் இருவரும் வந்தனர். வந்ததுமே ஒரு ‘குண்’டைத் தூக்கி போட்டான். மாத்தயா பிரபாகரனைச் சுட்டுப் போட்டான் தெரியுமா? என்றான். “தெரியாது ... பேப்பர் பார்க்கேல்லை...” என்றேன் மென்குரலில்

“சரி உன் பெயரென்ன?”
சொன்னேன்.
“எத்தனை பிள்ளையள்?...”
“நான்கு....”
“எங்கே அவன்கள்?”
“இரண்டு பேர் வெளிநாட்டில..
ஒருவன் வீட்டில...”
“மற்றவன்?...”
“.......இயக்கம்....”
“அவன் பெயரென்ன?....”
சொன்னேன்.

அவன் ‘தடி’யன்களைப் பார்த்துத் தலையசைத்தான். அடிவிழுந்தது. முழங்கைக்கு மேல் இரு பக்கமும் “ஐயோ...ஐயோ...” என நான் சத்தமிட அடி மெதுவாக விழுந்தது. பொறுப்பாளர் “அடியடா...” என உறுமினான். ‘தடி’யன்களைப் பார்த்து.

என் கைகள் தோல் வெடித்து இரத்தம் கசிந்தது. “சரி போதும்” என்றான் பொறுப்பாளர். களிசான் பொக்கற்றிலிருந்து லேஞ்சியை எடுத்து காயங்களை அழுத்தினேன். வாடா என்று கூட்டிப்போய் வேறொரு அறையைக் காட்டி இரு என்றான்.

ஒருவன் வந்து மதியச் சாப்பாட்டுக்கு அழைத்தான். வெளியில் வந்தேன். சமையலறைப் பக்கம் கூட்டிப் போனான். பலரும் நின்றுகொண்டே சோற்றுத்தட்டை கையில் ஏந்தியபடி சாப்பிட்டனர். அடுக்கப்பட்டிருந்த தட்டுக்களில் ஒன்றை எடுத்தேன். கழுவிக் கொண்டு சமையல்காரரின் முன் போனேன். அவன் சோறும் சாம்பாரும் வைத்தான். தூரப் போய் நின்று சாப்பிட்டேன். கை கழுவிக் கொண்டு திரும்பியபோது அங்கே இளவயதுக் ‘கைதி’கள் நால்வர் இருந்தனர் வாசல் கதவு பூட்டப்பட்டது. யன்னலூடாக வெளியில் பார்க்க முடிந்தது. பாய்கள் சுருட்டிவைக்கப்பட்டிருந்தன. ஒன்றை எடுத்து விரித்துவிட்டு அமர்ந்தேன் அறையின் மூலையில் புத்தகங்கள் குவிந்து கிடந்தன. அந்த இளைஞர்கள் புத்தகங்களைத் தலையணையாக வைத்துப் படுத்திருப்பது தெரிந்தது. ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். யாழ். மாநகர சபை நூலகம் என்று முத்திரை இருந்தது. ஒரு ஆங்கிலப் புத்தகத்தை எடுத்தன். அது Hittler and War. சுவரில் சாய்ந்தபடி பக்கங்களைப் புரட்டினேன். மனதிலும் உடலிலும் வேதனை. வாழ்நாளில் என்றுமே அனுபவித்திராத துயரம். வெளியுலகில் என்ன நடக்கிறது? நாளிதழ்களை பார்க்க கிடைக்காத சோகம். புத்தகங்களே ஆறுதலளித்தன.

இப்படியும் மனிதர்கள்! அதுவும் இளைஞர்கள். என் பிள்ளைகளைப் போன்றவர்கள். இதுதான் போராட்டமா? அரசின் அநியாயங்களைப் எதிர்த்துப் போராடப் புறப்பட்டவர்கள் இன்று பிரிந்து நிற்கிறார்கள், பகைவர்களாக. பெற்றாரும் வயோதிபர்களும் கூட அவர்களுக்குப் பகைவர்கள். விடுதலைக்கு நான் தரும் விலை இதுவா? எனப் பல சிந்தனைகள் மனதில் எழலாயின புத்தகத்தில் மனம் செல்லவில்லை மூடி வைத்தேன். இருள் படர்ந்தது. தூக்கம் வந்தது. இன்னும் மின்வெளிச்சம் தூண்டப்படவில்லை. ஒருவன் கதவை திறந்துகொண்டு உள்ளே வந்தான். எல்லாரையும் கூர்ந்து பார்த்தான். என்னைப் பார்த்து “நீ புது ஆள்.... என்ன பேர்? எந்த ஊர் ? ” என்று கேட்டான். சொன்னேன்.

ஓ... நீ அவன்ட அப்பாவா...? என்றவன் சப்பாத்துக்காலால் என் இடுப்பில் அடித்தான் “எழும்படா” என்றான் உன்ர மகன் சாவகச்சேரியில பெரிய ஆள் என்ன? என்று கேட்டு என் கன்னத்தில அறைந்தான். நான் சுவருடன் மோதுண்டு விழுந்தேன். அவன் போய்விட்டான்.

என் பின்தலையில் இரத்தம் கசிந்தது. மயக்கம் வந்தது மெல்லச் சரிந்து படுத்தேன்.

உணர்வுபெற்றுக் கண் விழித்தபோது தலை வலித்தது. உடல் சுட்டது மின் வெளிச்சம் வந்திருந்தது. அறையில் இருந்த இளைஞன் ஒருவன் என்னிடம் வந்து கதைத்து, யன்னலூக யாருடனோ சொல்லி பனடோலும் வெந்நீரும் எடுப்பித்துக் கொடுத்தான். இரவுச் சாப்பாட்டை நான் விரும்பவில்லை. படுத்துகொண்டேன்.

மறுநாள் விடிந்தது காலைக் கடன் கழிக்கவும் தேனீர் குடிக்கவும் கதவு திறக்கப்பட்டது, காலை உணவாக பாணும் சம்பலும் கொடுத்தார்கள். சாப்பிட்ட பின் அறைக்குள் போய் புத்தகம் ஒன்றை எடுத்து வாசித்துக்கொண்டிருக்க ஒருவன் வந்து என்னைப் பார்த்து உன்னை வரட்டாம் வா என்றான் எழுந்து அவன் பின்னால் போனேன். மண்டபத்தில் இருந்த ஒரு வைத்தியர் முன் விட்டு, மருந்து கட்டு என்றான். பலர் கியூவில் நின்றனர், மருந்து கட்ட என் முறை வந்தபோது தலைக்காயத்துக்கும் கைகளில் வெடிப்புக்கும் அவர் பஞ்சுத் துண்டில் மருந்து தொட்டு வைத்தார். வீங்கியிருந்த மணிக்கட்டுக்கு தைலம் பூசினார். பூசிக்கொண்டே ஐயா எந்த ஊர்? என்று மெல்லக் கேட்டார் மருத்துவர். “சாவகச்சேரி” என்றேன், வேறு கேள்வி இல்லை வீக்கம் தொடையில இருக்கு, மருந்து இருக்கா? என்று கேட்டேன். “அதுக்குப் புக்கை கட்டவேணும்” என்றார். அறைக்குத் திரும்பினேன்.

பத்து மணியிருக்கும் ஒருவன் வந்து, “உன்னை வரட்டாம்” என்றான். எழுந்து அவன் பின்னால் போனேன். ஒரு அறைக்குள் கூட்டிப்போனான் அங்கே அந்தப் பிஸ்ரல்காரன் நின்றான். மெலிந்த உயர்ந்த இளைஞன். பிஸ்ரலை என் நெஞ்சுக்கு நேரே பிடித்தபடி பேசினான் “கேக்கிறதுக்கு ஒளிக்காமல் பதில் சொல்லவேணும். சரியா” என்றான். முன்பே பலரும் கேட்டவற்றுடன் புதிதாக சில கேள்விகளும் கேட்டான், என் ஊரில் உள்ள சில இளைஞர் யுவதிகளின் பெயர்களை கூறி அவர்களைத் தெரியுமா? என்று கேட்டான். “சிலரைத் தெரியும்” என்றேன். உன்னைக் கூட்டிக்கொண்டு போனால் காட்ட இயலுமா? என்று கேட்டான்.

“ஓம்...” என்றேன்.

‘இவன்கள் அந்தப்பக்கம் வரமாட்டான்கள்’ என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அமைதியாகக் கதைக்கிறானே என்றெண்ணி “தம்பி விசாரணை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


முடிந்தால் என்னை விடலாமே" என்றேன்.

"இன்னும் விசாரிக்க இருக்கு... முடிந்தபிறகு போகலாம்" என்றான்.

"தம்பி... நான் உங்கள் அப்பாவைப் போல... எனக்கு ஏன் நீங்கள் அடிக்கிறீர்கள்?..." என்றேன்.

"இனிமேல் உங்கள்மேல் யாரும் கைவைக்கமாட்டார்கள்" என்றான்.

போய்விட்டான். பொய்தான் சொன்னான்.



அறைக்குள் போனேன்.

முகாம் பொறுப்பாளர் வந்து "விசாரணைக்கு வா" என்று தினமும் அழைப்பான். அவன் அருகில் 'தடி'யன்களும் நிற்பார்கள். அவனைத் தெரியுமா? இவனைத் தெரியுமா? என்று கேட்டு தலை அசைப்பான். கைகளில காயம் என்பதால் அடி முதுகில் விழும். 'தடி'யன்களுக்கு என்னைத் தெரியுமோ அல்லது இரக்கமோ மெதுவாக அடிப்பார்கள். பொறுப்பாளர் தடியைப் பறித்து அவன்களுக்கு அடிப்பான். அவர்கள் சிரிப்பார்கள். "சரி இரு.... உனக்கு மண்டையில போடவேணும்" என்பதுடன் பொறுப்பாளர் போவான்.

இவன்கள் என்னை உயிருடன் விடமாட்டான்கள் போலிருக்கே, தலையில சுடப்பட்டு தெருவேராம் கிடந்த சடலங்கள் நினைவில் வந்தன. சரி.... இப்பிடி எத்தனையாயிரம் இளைஞர்கள் விடுதலைக்காக உயிர் விட்டார்கள்..... அதில் ஒன்றென என் உயிரும் போகட்டுமே.... என்று எண்ணி மனதை தேற்றினேன்.

ஐந்து நாள்கள் கடந்தன. காயத்தில் பூசிய மருந்தும் தோலும் காய்ந்து பட்டை பிரிந்தன; அணில் முதுகின் வரிகளாய்த் தெரிந்தன, ஆனால் முதுகில் என் கண்களுக்குத் தெரியாத காயங்கள் வலித்தன. தொடை வீங்கி நொந்தது. தலையில் ஒரு விறைப்பு. உடல் அலுப்பு.

அதன்பின் யாரும் என்னை அழைக்கவில்லை, சாப்பாட்டு வேளை தவிர ஆனால் பொறுப்பாளர் அறைக்கு வந்து விசாரிப்பதுபோல் மற்றவர்களுடன் பேசிக்கொள்வான். அறையில் இருந்து இளைஞன் ஒருவனுக்கு முதுகில் பல காயங்கள். அவன் குப்புற படுத்துக் கிடப்பான். வைத்தியர் அவனுக்கு அன்று ஒருநாள் மட்டும் மருந்து போட்டார். அவன் மீண்டும் முதுகில் அடி வாங்கினான். ஒரு நாள் அவனை விடுதலை செய்தார்கள். அவன் வீட்டுக்கு கிட்டவே இருப்பவன் என்று அறிந்து வைத்திருந்தேன். கிழிந்த புத்தகத்தில் ஒரு பக்கம் எடுத்து அதில் என் முகவரி எழுதி வீட்டாரிடம் விபரம் சொல்லும்படி இரகசியமாக அவனிடம் கொடுத்து விட்டேன். அவன் என் வீடு சென்றபோது என் மனைவி யாரே உளவறிய வந்திருப்பான் என்று ஐயப்பட்டு "இந்த வீடு இல்லை" என்று சொல்லி விட்டாள்.

பதினைந்தாம் நாள் காலை. முகாம் பொறுப்பாளர் வந்து அறைக்கதவை திறந்து என்னை அழைத்தான். தன்னுடைய அறைக்கு கூட்டிப்போய் என்னுடைய உடைகளை எடுத்துக் கொடுத்தான்."எல்லாம் சரியா?" என்று கேட்டான்.

"சேட் போடு... மணிக்கூடு கட்டு.... காசு சரியா? கண்ணாடியை போடு.... சரியா வா" என்றான். ஆயிரம் கேள்விகள் மனதில் எழ அவன் பின்னால் சென்றேன்.

மணிக்கூண்டு கோபுர வீதியில் வேன் ஒன்றும் லொறி ஒன்றும் நின்றது. வேன் முன் இருக்கையில் ஒருவர் மட்டும் இருப்பது தெரிந்தது. "ஏறு லொறியில் என்றான் பொறுப்பாளர். மிகச் சிரமப்பட்டு ஏறினேன். துப்பாக்கியுடன் இரண்டு பேர் ஏறி என் இருபக்கமும் நின்றனர். அதில் ஒருவன் என் ஊரவன். அரசியல் இயக்க எதிரி 'என் மண்டையில போடவோ?' எதுவும் புரியாமல் நிற்கிறேன்.

வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன, கண்டி வீதியில் அரியாலை கடந்து நாவற்குழி வளைவில் திரும்பி கைதடியைக் கடந்து நுணாவில் சந்தி கண்டு சாவகச்சேரி போய், தென்மராட்சி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அரசுச் செயலகத்தின் அருகில், முன்னாளில வேல் சினிமாக் கொட்டகை இருந்த குறுந்தெருவில் ஒரு வீட்டின் முன்னால் நின்றன. துப்பாக்கியுடன் நின்ற ஒருவன் என்னைக் கூட்டிப்போய் உள்ளே இருக்கச் சொல்லிவிட்டு மறைந்து போனான். வேனில் இருந்து வந்தவன் இறங்கி நான் இருந்த அறைக்கு வந்தான். ஒரு மேசை விளிம்பில் இருந்துகொண்டு "ஐயா.... என்னைத் தெரிகிறதா" என்று கேட்டான்.

"ஞாபகமில்லையே..." என்றேன்,

மறந்துவிட்டீங்க... உங்களை எனக்குத் தெரியும்.... நீங்கள் தொழிற்சங்கப் பணிமனையில் 'சுடரொளி' பேப்பரின் ஆசிரியராகப் பணியாற்றியபோது நானும் டேவிட்சனும் வருவோம். அங்கே வைத்து சுவரொட்டிகள் எழுதினோம் சி.ஐ.டி டேவிட்சனைப் பிடித்துக் கொண்டு போன பிறகு உங்களையும் பொலிஸ் விசாரித்து என்றும் பேப்பரில் பார்த்தேன் உங்களைத் தெரியாமல் பிடிச்சிட்டான்கள்..... அவன் சார்பில நான் மன்னிப்புக் கேக்கிறேன்..... சாப்பிட்டிட்டு நீங்கள் வீட்டுக்குப் போங்கோ....

"ஓ.... இவர்தான் றொபேட்" என நினைவு வந்தது,
ஒரு பையனை அழைத்து ஐயாவுக்கு "சாப்பாடு கொடு" என்றான்,
"வேண்டாம்.... தண்ணீர் தாங்க போதும்....." என்றேன்.
"சரி தேனீர் கொடு..." என்றான்.

தேனீர் வரும்வரை றொபேர்ட் அரசியல் பேசினான். எனக்குப் புத்திமதி சொன்னான். ஒளிந்திருக்கும். இயக்கத்தினரை ஆயுதங்களுடன் சரணடையச் சொல்லுங்கோ" என்றான். தேனீர் வந்தது.

"குடிச்சிட்டு நீங்கள் போங்கோ" - சொல்லிவிட்டு எழுந்து போனான்.

வெளியே வந்தேன். கண்டிவீதியில் ஏறி சிறிது தூரம் செல்ல ஒரு சலூன் தெரிந்தது. பதினைந்து நாள்கள் வழிக்காத தாடியை எடுத்துவிட எண்ணி உள்ளே போனேன். சேவ் எடுக்க என்றேன். மருந்துவர் எனக்குத் தெரிந்தவர். ஆனால் கோலம் மாறியிருந்த என்னை அவர் கண்டு கொள்ளவில்லை.

காசைக் கொடுத்துவிட்டு தெருவுக்கு வந்தேன். பேருந்து நிலையம் வந்து சேர்ந்தேன் என் சொந்த ஊர் மூன்று மைல் தொலைவில் இருந்தது. ஆனால் நான் அங்கே போக விரும்பவில்லை. யாழ் பஸ்நிலையத்தில் இறங்கி குறுக்குபாதையால் நாச்சிமார்கோவிலடிக்கு நடந்தேன். வழியில் என்னைப் பார்த்த சிலர் அதிசயமாய்ப் பார்த்து பேசி விபரம் அறிந்து கொண்டு போயினர். வீடு சென்றடைந்த என்னை உறவினர் கட்டித்தழுவி மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். மனைவி விரதம் முடித்து சோறு சாப்பிட்டாள்.

ஒருநாள் ஓய்வெடுத்த பின் என் உடல் நோவுக்கு மருந்த கட்ட வைத்தியர் வரவளைக்கப்பட்டார். ஐந்தாம் நாள் நானும் மனைவியும் அம்மன் கோவிலுக்குப் போனோம்.

* * *

அவர்களின் ஆட்சி நிர்வாகம் தொடர்ந்து அராஜகமும் தொடர்ந்து ஆபத்து நீங்கிவிடவில்லை. திரும்பவும் நான் கடத்தப்படமாட்டேன் என்பதற்கு உத்திரவாதம் இல்லை. என்னைக் "கொழும்புக்கு அனுப்புவது நல்லது " என்று சிலர் ஆலோசனை கூறினர்.

உடைகளைக் கடதாசியில் சுற்றிக் கொண்டு உடுத்திருந்த சாரத்துடன் வடக்கு நோக்கிய பேருந்தில் ஏறி மல்லாகம் சந்தியில் இறங்கி நடந்து ஏழாலைத் தரிப்பில் ரயில் ஏறினேன். வண்டி புறப்படுமுன், அதிகாரத்தில இருந்த 'தொண்டர்கள்' எல்லாப் பெட்டிகளையும் பார்வையிட்டதை அவதானித்தேன். கண்ணாடியைக் கழற்றி வைத்துக்கொண்டு தூக்கத்தில் இருப்பதுபோல் நடித்தேன். ரயில் நகர்ந்து. சாவச்சேரி கழியும்வரை ஒரே பயம். கொழும்பு வந்தடைந்து மகன் இருந்த 'லொட்ஜில்' தங்கினேன்.

1990 சனவரியில் யாழ்ப்பாணம் திரும்பிவந்தபோது நிர்வாகத்தில் இருந்தவர்களின் கடைசிக் குழுவும் ஐ.பி.கே.எவ் வுடன் காங்கேசன்துறையில் கப்பல் ஏற நிற்பதாக அறிந்து ஆறுதலடைந்தேன்.

நாட்கள் போயின. காயங்கள் ஆறின. நாளடைவில் புதிய வருத்தங்கள் தோன்றின. உடல் பெருத்தது, வயிறு ஊதிற்று, நரம்புகள் வலித்தன. சில மாதங்கள் மருந்தும் பத்தியமுமாக கழிந்தன.

யாழ்ப்பாணத்தில 'ஈழநாதம்' நாளிதழ் புதிதாய் தொடங்கப்பட்டது. அங்கே பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. வேலைக்குப் போய் வருகையில் வழியில் எனக்குப் பழக்கமானவர்கள் அந்தப் பதினைந்து நாள் அனுபவத்தைக் கேட்டுக் கவலை தெரிவிப்பார்கள். அவ்வாறு சந்தித்தவர்களில் என்னுடன் தடைமுகாமில் இருந்தவர்களும் இருவர்.

"ஐயா நீங்கள் உயிருடன் வந்ததே அதிசயம். அத்தனை அடிகளையும் எப்படித்தான் தாங்கினீர்களோ" என்று சொல்லி வருந்தினார். ஒரு இளைஞன் உங்களை விடுவான்கள் என்று நான் நம்பவில்லை. என்னவெல்லாம் கொடுமை செய்தான்கள்.... எனக்கும் இப்பவும்தான் காயமும் நோவும் இருக்கு.... என்று கண்கலங்கினார், மற்றவர்.

அவரைச் சுட்டுத் தெருவில் போட்டிருக்கு என்று தனது பணத்தை செலவிட்டு வெளிநாட்டில் இருக்கும் என் மகனின் போன் நம்பரை எப்படியோ எடுத்து, 'தகவல்' கொடுத்தான் என் ஊரவன் ஒருவன். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவன் ஒருநாள் மோட்டார் சைக்கிளில் வந்துபோது எதிர்ப்பட்டான். "டேய் நில்லடா" என்று தடுத்தன். அதிர்ச்சியடைந்த அவன் திடீரென சைக்கிளை நிறுத்தினான். அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அடி கொடுத்து "ஏன்ரா என் மகனுக்குப் பொய்ச்செய்தி கொடுத்தாய்" என்று கேட்டேன். அரவம் கேட்டு அயல்வீட்டவர் தெருக்கு வந்தனர். அமைதிப்படுத்தி இருவரையும் அகற்றி வைத்தனர்.

பதினைந்து ஆண்டுகள் கடந்த பின்பும் அந்தத் தடைமுகாமில் நான் பட்ட பாடுகளின் நினைவாக என் உடலிலும், மனதிலும் இன்றும் தழும்புகள் ■



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சந்ததக் காதல்

வாடி மூர்க்கமாய் காதல் கொள்வோம்
உன்னையும், என்னையும்
உரசி நெருப்பெடுத்து
குலக் காப்புக் கொள்கை எரிப்போம்
வாடி மூர்க்கமாய் காதல் கொள்வோம்.

கண்ணைச் சுற்றியிருக்கும்
கறுப்பு வட்டங்களை
காதலைக் கொண்டு அழிப்போம்,
கனவுகளை கலவி கொள்ளச் செய்து
கவிதைகள் புனைவோம்.

உன்னை நானும் ,
என்னை நீயும்
கண்ணீர் வார்த்து ஊற்றி - நம்
முன்னோரின் தீட்டுகளுக்கு
முழுக்குப் போடுவோம்.

பின்னேரங்களில்
சாயும் சூரியனுக்கு
விடியல் பற்றி விமர்சிப்போம்,
விதையாகிப் போன நம்
வீரரின் கல்லறை காட்டி
அமாவாசை இரவுகளை
அகற்றுவோம்.

சூரியப் பொழுதில்
பிறக்கும் நம் பிள்ளைக்கு
'விடுதலை' என்று பெயர் சூட்டுவோம்
வாடி மூர்க்கமாய் காதல் கொள்வோம்.

மெலிஞ்சிமுத்தன்

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

# அவன் மறக்கவில்லை

காலங் காலமாகக் கடற் காற்றையே சுவாசித்துக்கொண்டிருக்கும் அந்தக்கிராமமும், கடல் நீருடன் பின்னிப்பிணைந்து வாழும் அந்த மக்களும் கடலையே நம்பி வாழ்கிறார்கள். அந்தக் கிராமத்தை அழகுபடுத்தும் பனைமரங்கள் கடற்காற்றுடன் குசுகுசுத்துக் கொண்டிருக்கும். கடலலைகள் அந்த மண்ணை முத்தமிடப் போட்டி போட்டு ஓடிவரும். மாலையில் மைனாக்களின் கலகலப்பும் இனிமையாக இருக்கும். காலையில் கடல்மட்டத்திலிருந்து சிரிக்கும் சூரியனின் முதல் முத்தம் அந்தக் கிராமத்துக்குத்தான் அலையோடு அலையாக வந்து கரையேறும் வெள்ளை நண்டுகள் வந்து, அந்த மணலை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

இரவில் நட்சத்திரங்களின் வழிகாட்டலில் உறுமீனுக்காய் காத்துக்கொண்டிருக்கும் கொக்குப்போல் அல்ல சிறு மீன் பிடிக்கும் படகுகள் வெய்யிலில் காயும். கரையில் விடுபட்டுக் கிடக்கும் சூடைகளைப் பொறுக்க பஞ்சமிக் காகங்கள் வட்டமிட்டுத் திரியும். பாட்டியின் முற்றத்தில் பெரிய ஆலமரமொன்று, பாட்டியின் மனம் போல கிளைகளைப் பரப்பி நிழல் கொடுத்துக் கொண்டிருந்தது. வெய்யில் காலத்தில் அந்த மரத்தடியில் பெரிய கூட்டமே கூடியிருக்கும். பக்கத்து வீட்டுத் தாத்தா கூடக் கடற்காற்றை உள்வாங்கிக் கொண்டு பாயில்லாமல் படுத்துறங்குவார். அப்பாவின் வீச்சுவலை ஒரு கிளையில் தொங்க விடப்பட்டிருக்கும். நாளைய இந்தக் கடலின் சிட்டுக்கள் ஆலம்விழுதில் ஊஞ்சல் கட்டி, அலையின் தாலாட்டுப் பாட்டுடன் ஆடிக்கொண்ருப்பார்கள்.

பளிச்சிடும் மேனியுடன் சிறார்கள் அலையுடன் வந்து கரையேறும் நண்டுகளைப் பிடித்து விளையாடுவார்கள். எனக்கு அலையென்றால் சரியான பயம் ஆனால், சம்மாட்டி ஐயாவின் மகன், வாசன் நான் கத்தினாலும் விடான். என்னைப்பிடிச்சு அலைக்குள்ள தூக்கி எறிவான். அப்பாவும் பாத்துக் கொண்டுதான் நிற்பார். ஒன்றும் சொல்லவே மாட்டார். பிறகு, எல்லாம் பழகிப்போட்டுது. அப்பா, இரவில் தொழிலுக்குப் போவார். நல்ல மீன் பட்டால் விடிய, நேரம் சென்று தான்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வருவார். அப்பா பகலில போனால் ஒரு மாதிரி அம்மாவைப் பேய்க்காட்டிட்டு, நானும் போயிடுவன். கரையில நண்டு பிடிக்கிறதெண்டால் எனக்கு நல்ல விருப்பம். கன பெடியள் நண்டு பிடிக்க வருவாங்கள். அவங்கள் அலைக்குள்ளால எல்லாம் இறங்கி ஓடுவாங்கள். பெரிய அலை வரேக்குள்ள சுழியோடுவாங்கள். நான் கரையில என்னத் தேடிவாற நண்டுகளைப் பிடிப்பன். அவங்கள் என்ன நக்கலடிப்பாங்கள். ஒருநாள் நானும் அவங்களோட சேர்ந்து இறங்கிட்டன்.

நண்டுகள் கூட நக்கலடிப்பது போல அலையுடன் வந்து கால்களைத் தொட்டுச் செல்லும்.

நண்டுகளைப் பாத்துக் கொண்டு நிற்க, பெரிய அலை வந்து காற்சட்டையை நனைச்சுப் போடும். அந்த அலைகள் தான் நண்டுகளைக் கொண்டு வந்து கரையேற்றும். நான் பிடிக்க ஓடிப்போவன். நண்டுகள் அலைப்போர்வைக்குள்ள தங்கள மறைத்துக் கொள்ளும். அந்த அலைக்கும், நண்டுகளுக்கும் உள்ள உறவு என்னைப் பொறாமை கொள்ளச் செய்யும், நான் அலையை வெறுக்கவில்லை.

பாட்டியிடம் கதை கேட்கிறதெண்டா எனக்கு நல்ல விருப்பம். கடலைப் பற்றியெல்லாம் நல்லாச் சொல்லுவா. பொக்கை வாயால ரசிச்சு ரசிச்சுச் சொல்லுவா. கேட்டுக் கொண்டே இருப்பன். கடல் கொந்தளிக்குமாம். ஒரு தரம் கடல் கொந்தளிச்சு பாட்டியின்ர ஆலமரத்தடிக்கு அலை வந்திட்டிதாம் இந்த மண்ணெல்லாம் அலைதான் கொண்டு வந்து குவிச்சதாம், “ஏன் பாட்டி இந்த ஆலமரத்துக்கா? உங்களுக்கா? வயது கூட” பாட்டி தன் பொக்கை வாயால் பெரிதாகச் சிரிப்பா. பிறகு அமைதியாகக் கொஞ்ச நேரம் யோசிப்பா.

“இல்ல மோன, இது என்ர அம்மம்மாட காலத்தில இருந்தே இருக்குது”

பாட்டி அந்த ஆலமரத்தின் மீது வைத்திருந்த பற்றும் பாசமும் அவாவின் தளதளத்த குரலில் இருந்தே புரியும். மெல்லிய காற்றில் ஆலம் இலைகள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒலியெழுப்பும். எனக்குப் பயம் தான் வரும். இரவு வந்தா நான் அந்த ஆலமரத்திற்குக் கிட்டவும் போகமாட்டன்.

அம்மா முற்றத்தில படுத்துறங்குவா. பாட்டியின்ர விளக்கு மின்னிக்கொண்டிருக்கும். வாய் அசைந்து கொண்டேயிருக்கும். கண்கள் தென்னம் ஓலைகளை ஊடறுத்து நட்சத்திரங்களைத் தேடிக்கொண்டிருக்கும். அன்று இரவு எனக்கு நித்திரையே வராது. அந்த அலைகளும், பாட்டி சொன்ன கதைகளுமே மனதில் ஊசலாடும். எனக்கு எப்ப விடியுமென்றிருக்கும். சேவலின் விடியல் அறிவிப்பு எதிர்பார்த்துக் கொண்டிருப்பன். சூரியனின் பொன்னிறக் கதிர்கள் கிடுகு வீட்டை ஊடறுத்து நெற்றியில் முற்றுப்புள்ளி வைக்கும். வீட்டில் இருந்து பக்கத்தில தான் கடல். ஒரு மூச்சில் போய்ச் சேர்ந்திடுவன். பாட்டி கூப்பிடுறது காதில கேட்கும். அந்த குரல் என்னை நிறுத்தி விடாது. மணலும் என்ர விருப்பத்திற்குக் கால்களை எடுத்து வைக்க விடாது. விழுந்து விழுந்து நான் ஓடுவன். அந்த மணலில் விழுந்து எழும்புவதே தனிச்சுகம். நான் தான் முன்னுக்கு வந்திட்டன் என்று நினைக்கக் கவலையாக இருக்கும். தூரத்தில பாத்தா அவங்கள் எனக்கு முன்னுக்கு வந்து சிப்பி பொறுக்கிக் கொண்டிருப்பாங்கள். சிலர், இறால் கிண்டுவினம். அவர்களைக் கண்டபிறகுதான் என் மனதில் மகிழ்ச்சியுணர்வு மெலிதாய் இழையோடும்.

வாசன் தான் எங்களைவிடப் பெரிய பொடியன். அவன் தான் ஓடியும், அலைக்குள்ள இறங்கியும் நிறையச் சிப்பி பொறுக்குவான். நான் அவனிட்டக் கேட்டு வாங்கிப் போடுவன். பிறகென்ன? அவங்களோட சேர்ந்து ஏரால் கிண்டுவன், எல்லாருமாய்ச் சேர்ந்து





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"இந்தக் கடல், எங்கட மூதாதையர் கட்டுமரம் செலுத்திய கடல் மச்சான். நாங்கள் தான் பாதுகாக்க வேண்டும் இந்தக் கடலுக்குச் சொந்தக்காரர் நாங்கள் தான் மச்சான்" சிறியன் மனக் குமுறலைப் புரிந்து கொண்டவன், அவனைத் தழுவுகிறான். படகுகள் செல்வதற்குத் தயாராகின்றன. புலிக்கொடி தாங்கிய சிறியின் படகும் அலைகளைக் கிழித்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் செல்கிறது. அவனது கண்ணீர் அன்று உப்பு நீருடன் சங்கமித்ததை, அவன் இன்னும் மறக்கவில்லை.

கிண்டிச் சுட்டடிப்பம். கிண்டக் கிண்டக் ஏரால்கள் மண்ணுக்குள்ள ஓடி மறையுங்கள். நான் என்னை மறந்து கிண்டிக் கொண்டிருப்பன். பெரிய அலை வந்து என்ர காற்சட்டையைக் கழட்டிப்போடும். நான் எட்டிப் பிடிச்சுப் போடுவன். அப்ப தான் ஞாபகம் வரும். காற்சட்டைக்கு ஊசி குத்தேலையென்று. பாட்டி அதுக்குத்தான் கூப்பிட்டிருப்பா. பாட்டிதான் என்ர காற்சட்டைக்கு ஊசி குத்தி விடுறவா. பாட்டி நடுங்கி நடுங்கி குத்த நேரம் போடும். நான் பறிச்சுக்கொண்டு ஓடிடுவன்..

அப்பா தொழிலுக்குப் போனா, நானும் அம்மாவும் கரையில போய் நிப்பம். அப்பா கட்டுமரம் தள்ளுவார். அப்பாவின் கைப்புயங்கள் ஏறி இறங்கும். நான் என்ர கையையும் மடிச்சுப்பாப்பன். அம்மா பாத்திட்டு நக்கலாச் சிரிப்பா. அப்பாவின்ர உள்ளங்கையைப் பிடிச்சுப் பார்த்திருக்கிறன். மரம் போல இருக்கும்.

"துடுப்புப் பிடிச்சுத்தான்ரா அப்பாவின்கை மரம் மாதிரிக்கிடக்கு"

அம்மா சொல்லுவா, நான் நினைப்பன், அம்மா என்னை பயமுறுத்திறதுக்குதான் சொல்லுறா என்று. அப்பா கஸ்ரப்படுறதப் பாட்டிக்குச் சொன்னால், பாட்டி, அன்று தொட்டு இன்று வரை அப்பாவின்ர கதை சொல்லுவா.

"அவன் சின்ன வயதிலேயே தண்டு வலிச்சவன்ரா, அவனை வளர்த்துவிட்டதும் இந்தக் கடல் தான்ரா. ஆழ்கடலில் போய்ச் சுறா பிடிச்சவன் இப்ப எவனோ போட்ட மீன்பிடித் தடையால் கரையில திரிஞ்சு சூடை பிடிக்க வேண்டி வந்துட்டுது. ம்....." வானத்தை பார்த்துக் கை ரெண்டையும் காட்டித்தான் கதையை முடிப்பா. அது பாட்டியின் வழக்கம்.

அப்பா கடலில மரத்தை இறக்கும் போது, தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டுதான் இறங்குவார். அலையைத் தாண்டி மரத்தை கொண்டு போறதுக்கு அப்பா சரியாக் கஸ்ரப்படுவார். நானும் அம்மாவும் அப்பாவுக்கு உதவியாக மரத்தைத் தள்ளுவம். அலையுடன் போராடி இறுதியில் அப்பாதான் ஜெயிப்பார். கட்டு மரம் அலையுடன் தாவிச்செல்லும். நான் அப்பாவின் மரத்தைத் தூக்கித் தூக்கிப் போடும் அலைகளைப் பாத்துக் கொண்டிருப்பன். அம்மாவின் பெரிய கொண்டைக்குள் மாட்டிக் கொள்ளாத முடிகள் கண்களை மறைக்கும் போதெல்லாம், ஒதுக்கிவிட்டு அப்பாவையே பாத்துக்கொண்டு நிப்பா.

அலையடித்துப் படிந்து போய்கிடக்கும் மணலில் நடக்குறதெண்டால் எனக்கு நல்ல விருப்பம். மெல்லிய காற்று உடம்பில படும் போதெல்லாம் சில்லென்றிருக்கும். ஒவ்வொருநாளும் புலரும் பொழுதில் எனக்கு ரம்மியமான பொழுது போக்கு.

அன்றும் கடலை நோக்கி ஓடுறன். என் கால்கள் பின்னடைப்படுகின்றன. ஆனால், விழவில்லை. காற்சட்டைக்கு ஊசி குத்தியிருந்ததால் இரண்டு கைகளையும் வீசி ஓடுகிறேன். சூரியன் கடல் மட்டத்திலிருந்து கண் சிமிட்டிக் கொண்டிருக்கிறான். கடலை நெருங்கி விட்டேன். அங்கும் இங்கும் பார்த்த வண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறேன். படர்ந்து கிடந்த கடலைத் தவிர என் கண்களில எதுவுமே தெரியவில்லை. ஏமாற்றம் அடைந்து என் கால்கள் சோர்கின்றன. வழமையாக வேளைக்கு வந்து சிப்பி பொறுக்கும் வாசனைக் கூடக் காணவில்லை. தனிமை என்னை வாட்டியது. தொலைந்ததைத் தேடுவது போல் என் விழிகள் சுழன்று கொண்டிருந்தன. அலைகள் ஆறுதல் சொல்வது போல் மாறி மாறி கால்களை வருடிக் கொண்டிருந்தன. கடற்காற்றுத் தலையைத் தடவி ஏதோ சொல்ல முற்படுகிறது. சூரியனின் கதிர் வீச்செல்லை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மனத்திற்குள் இருந்த தனிமையுணர்வு மெலிதாய் அகல்கிறது. என் கண்கள் அலைகளையே வெறித்துக் கொண்டிருந்தன அலைகளின் தவிப்பு எனக்குப் புரியவில்லை. மகிழ்ச்சியா.......? சோகமா......?

அலைக்குள் சிக்குண்டு மீளமுடியாமல் ஏதோ தவித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. என் கால்களும், விழிகளும் அதையே குறிவைத்தபடி நகர்கின்றன. அருகில் போய்ப் பார்க்கிறேன். காணவில்லை, அதை மீண்டும் அலை மறைத்து விட்டது. என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை. தெரிவதும் மறைவதுமாகக் கரைக்கு வருவதற்கு அலையுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. வாசன் நின்றிருந்தால் இந்த நேரம் அலைக்குள்ள இறங்கி எடுத்திருப்பான். நான் முழங்கால் மட்ட நீருக்குள் நின்று அதைப் பார்ப்பதற்கு ஏங்கிக் கொண்டிருக்கிறன். அலைகள் என்னை திட்டம் போட்டு ஏமாற்றுவது போல் கரைக்கு விடாமல் சுருட்டிச் சுருட்டி மறைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக்கணம் பாட்டி சொன்ன கதைகளை மீட்டுப் பார்கிறேன். ஆம்பல் மிதந்து வருமென்று சொல்லுவா. அது சரியான விலையாம். ஆம்பல் மிதந்து வந்திருந்தால் சந்தோசப் பட்டிருப்பன். ஆனால் மிதந்து வந்தது சூட்டுக்காயங்களுடன்.........

கலங்கிய விழிகளால் திரண்டு வரும் அலையைப் பார்கின்றேன். அன்றும் இன்றும் அலைகள் மாறவில்லை. கரையைத் தொட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. நண்டுகளும் மணலை ஆட்சிசெய்து கொண்டுதானிருக்கின்றன. காலம் மாறிட்டுது. நானும் மாறிட்டன்.

"இந்தக் கடல், எங்கட மூதாதையர் கட்டுமரம் செலுத்திய கடல் மச்சான். நாங்கள் தான் பாதுகாக்க வேண்டும் இந்தக் கடலுக்குச் சொந்தக்காரர் நாங்கள் தான் மச்சான்" சிறியன் மனக் குமுறலைப் புரிந்து கொண்டவன், அவனைத் தழுவுகிறான். படகுகள் செல்வதற்குத் தயாராகின்றன. புலிக்கொடி தாங்கிய சிறியின் படகும் அலைகளைக் கிழித்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் செல்கிறது. அவனது கண்ணீர் அன்று உப்பு நீருடன் சங்கமித்ததை, அவன் இன்னும் மறக்கவில்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






வீரவேங்கை அருணந்தி

# தேவையில் தேர்ந்தவள்

25.12.1995 காலத்தின் கட்டளை அவளுக்கும் பாதை காட்டிற்று. கணேஸ் ராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியாய் யோக மலராய் பூமி வந்தவள் வாழும் தகுதி பறிக்கப் பட்டதனால் வாழ்வுரிமையைப் பெற பாசறை புகவேண்டியவளானாள்.

பயிற்சி பட்டை தீட்டிக்கொண்டது சத்ஜெயக் களம் படித்தவற்றை, பயிற்சியைப் பழகிப் பார்க்க வாய்ப்புக் கொடுத்தது.

பயிற்சி முடிந்த புதியவளாய் அவள் முதற் பணி, காவும் குழுவாய்க் கடமையாற்றுவது.

கூவி வரும் இரும்புத் துண்டங்களுக்கெல் லாம் ஏய்ப்புக் காட்டித் தன்னையும் காத்துத் தான் காவிவரும் விழப்புண் தாங்கிய வரையும் காத்துக் கொள்ள வேண்டிய கடின பணி. பழகிக் கொண்டாள். பற்றுதலோடு பணி செய்தாள்.

சத்ஜெய சங்காரம் செய்யப்பட்டு மீண்டு வருகையில் மருத்துவக் கற்கை நெறி அவளுக் காய் காத்திருந்தது.

கற்றுத் தேர்ந்து கொண்டபோது, 'ஜெயசிக் குறு' ஜெயம் என்று வரவு வேண்டி நின்றது.

படித்தவற்றைப் பயிற்சியாக்கிப் பார்க்கப் பகைகள் எப்போதும் தாராள மனதோடு சமரை விரித்துக் கொண்டேயிருந்தன.

குறிசுட்டான், குழவிசுட்டான், புளியங்குளம் என்று சிக்குறுச் சிக்கலை எடுத்துக் கொண்டி ருந்தவர்களுக்குச் சிகிச்சையளித்தபடி அவ ளது கள மருத்துவப் பணி நடமாடும் பணியாய் நகர்ந்து கொண்டேயிருந்தது.

20.08.1997 புளியங்குளம் ஊடாக எதிரி முன்னேற முயன்று கொண்டிருந்தான். 'வெற்றி உறுதி' என்று புறப்பட்ட பகைக்குப் பாடம் படிப்பிக்கும் 'செய் அல்லது செத்து மடி' என்ற உக்கிரச் சமர்.

விழ விழ எழவைக்கும் அவள் பணியும் நீண்டு கொண்டேயிருக்கையில் எழவைப்ப வரை குறிவைத்தலே முதன்மைப் பணி யாய்ப் பகை புரிந்து கொண்டதோ என்னவோ

சிகிச்சையளித்தபடி வருகையில் எதிரி யின் 'சினைப்' தாக்குதலில் அருணந்தி அமைதியாகிப் போனாள்.

'உரிமையைப் போராடித்தான் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஊமையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தால் உள்ளதையும் இழந்து போவோம். என்ற உண்மையை உரைத்தபடி கள மருத்துவிச்சி களத்தி லேயே காவியமாகிப் போனாள்.

யோகமலர் என்ற மலர் அருணந்தியாய் வீரவேங்கை அருணந்தியாய் முள்ளியவ ளைத் துயிலுமில்லத்தில் விதையானாள். வீர வரலாறானாள்.


அகநிலா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பதின்மூன்று படிகளும் கறுத்தப் பூனையும்



மல்லீஸ்வரி டென்மார்க்

வெளியில் பனி கொட்டிக்கொண்டிருக்கிறது. கண்களை மூடிக்கொண்டு நான் சோபாவில் கிடக்கின்றேன். அலாரம் அடிச்சோய்ந்து கனநேரமாகிவிட்டது. "இனிக்கிடக்கேலாது. வேலைக்குப் போக வேணும்". இந்த நினைப்பு வந்ததும் ஒரு முறை அசைகிறேன். நான் படுத்திருக்கும் சோபா வழக்கம் போல் பதிலுக்கும் தானும் குரல் கொடுக்கின்றது .

"கிறீச்...கிறீச்..."

மிகப் பழைய சோபா அது. நான் நினைக்கிறேன் அதுக்கு பதினைந்து வருடங்கள் இருக்கும் என்ர வாழ்க்கையைப் பற்றிச் சொல்லச்சொன்னா முழுக் கதையையும் சொல்லும். மற்ற பொருள்களையெல்லாம் வீடு மாறேக்கே எறிஞ்சிட்டன். ஏனோ தெரியேல்ல இந்த சோபா மட்டும் எறிய மனம் வரேல்ல. முந்தி நான் என்ர கணவரோட இருக்கேக்க இந்தச் சத்தத்தைக் கேட்டா எரிச்சல்தான் வரும்.

இப்ப அப்படியில்ல என் கூட நட்பாகக் கதைப்பது போல உணர்கிறன். வீட்டின் நிசப்தத்தை விரட்டும் அந்தச் சத்தம். ம்...ம் இனிப் படுக்கேலாது நாலு மணியாச்சு ஐந்து மணிக்கு கடையில நிக்கவேணும். இப்பவே வெளிக்கிட்டால்தான் உண்டு. நடந்து போக நேரம் சரியா இருக்கும். போர்வை அகற்றி நிமிர்ந்துபார்க்கிறேன்.

நேராக சுவரில் அவர் சிரித்தபடி .

சோபாவில் கிடக்கிற போர்வையையும் தலை அணையையும் அறைக்குள்ளக் கிடக்கிற கட்டிலில் போடுவதுதான் முதல் வேலை. ஏனோ தெரியாது தனியாக வாழத் தொடங்கிய நாளிலிருந்து இப்படி ஒரு பழக்கம். வழக்கம் போல் செய்யிற மிச்ச வேலைகளையும் முடிக்கிறன். முகம் மட்டும் தெரியக்கூடியதாக உடுப்பும் போட்டாகிவிட்டது.

கதவைத் திறக்கிறேன் பதின்மூன்று படிகளின் நினைவும் கூடவே வருகின்றது. ஒவ்வொருநாளும் வேலைக்குப் போகும் போதும் வரும் போதும் படிகளை எண்ணுவேன். இது எனக்கு பழக்கமாகிப் போய் விட்ட அல்லது விருப்பமான ஒரு வேலை எண்டுதான் சொல்ல வேணும். ஊரில பள்ளிக்கூடத்தில 'குளம்கரை' விளையாடுவது ஞாபகத்துக்கு வரும். பதின்மூன்றாம் இலக்கத்தைப் பற்றி இங்கே இருக்கிற ஆட்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. அதொரு கூடாத எண்ணாம். அதுவும் பதிமூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை என்றால் கேட்கவே வேண்டாம். இதில் என்ன முசுப்பாத்தி எண்டா விதி, கடவுள், சாஸ்த்திரம் ஒண்டிலையுமே நம்பிக்கை இல்லாத டெனிஸ்காரரே இந்த இலக்கம் எண்டா கொஞ்சம் யோசிப்பினம். ஆனா எல்லாத்திலும் முழு நம்பிக்கை வைச்சிருக்கிற ஒரு கலாச்சார பண்பாட்டுச் சூழலில் இருந்து வந்த எனக்கு இதில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்ல.

நான் இருக்கிற வீட்டிலக்கம் பதின்மூன்று. நான் இறங்கிப் போகிற படிகளின்ர எண்ணிக்கையும் பதின்மூன்று. இதை நினைக்கேக்க எனக்குச் சிரிப்பு வரும்.

ஒன்று, இரண்டு, மூன்று காலில் மெல்ல நோக் கண்டிருந்தது. நான்கு, ஐந்து, ஆறாவது படிக்கட்டில நிற்கும் கறுப்புப் பூனை இண்டைக்கும் நிக்கிறது. கீழ் வீட்டுக்காரரின் பூனை. என்னைக் கண்டதும் வழக்கம் போல பக்கத்தில் வந்து மெதுவாகக் கத்துகிறது. நானும் அதைத் தடவிக் கொடுத்து விட்டு மிகுதிப் படிகளை எண்ணிக்கொண்டு இறங்குகிறேன்.

வெளிக்கதவைத் திறந்ததும் பனிக்காற்று சில்லென்று முகத்தில் அடிக்கிறது. குளிரெண்டாலும் விடியக் காலையில நடப்பது ஒரு சந்தோசம் தான். நடக்கத்தொடங்குகிறேன். போட்டிருந்த பனிக்காலச்சப்பாத்து பனியில் புதைந்து தனது சுவடுகளைப் பதித்துத் தூக்கும் போது சப்பாத்தின் அளவு நாற்பது என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. "இதுவும் பதின்மூன்றாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்". என்று மனதுக்குள் நினைத்தபடி மேலே நடக்கலானேன். வழக்கமா பதினைஞ்சு நிமிசத்தில கடைக்குப் போய் விடுவேன். இண்டைக்கு பனியில் நடப்பது கஸ்டம்அதனால கொஞ்ச நேரம் எடுக்கும். இந்தக் கடையில ஒன்பது மணிக்குத்தான் வேலை ஆட்கள் வருவினம். இது ஒரு பல் பொருள் அங்காடி. ஒவ்வொரு நாளும் வந்து கூட்டி நிலத்தைக் கழுவவேணும். கஷ்டமான வேலைதான். எண்டாலும் வேறென்னதான் செய்வது. நாலு வருஷங்களா வேலை செய்யிறன் பழகிப் போச்சு.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டோட்டா என்னுடன் வேலை செய்கிறாள். மென்மையானவள் மிகவும் நல்லவள். நான் எனது கணவனை இழந்து மனம் உடைந்து போய் இருந்த காலங்களில் எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தாள். என்னுடைய எந்தப் பிரச்சினையையும் அவளுடன் கதைக்கலாம். டெனிஷ்காறியாக இருந்தாலும் கணவன், மனைவி குடும்ப வாழ்க்கை இப்படிப்பட்ட விஷயங்களில அவளுக்கும் எனக்கும் நிறைய உடன்பாடுகள். அவள் தனது காதலனுடன் இருபது வருஷங்கள் சேர்ந்து வாழ்கிறாள். அவர்களுக்கு பதினைந்து வயசில ஒரு மகன் நல்ல குடும்பம் அவர்களின்ர வீட்டுக் கொண்டாட்டங்கள் எதுவெண்டாலும் எனக்கும் அழைப்பு வரும். டோட்டாவின் காதலன் என்னைக் கண்டதும் கேட்கிற ஒரு கேள்வி "ஏன் நீ இன்னொரு கலியாணம் செய்து கொள்ளக் கூடாது?" நான் ஒரு சிரிப்புடன் பேசாமல் இருந்து விடுவேன்.

இன்னொரு கல்யாணம்? சுகமாகாது எண்டு இங்கத்தைய வைத்தியர்களால் கைவிடப்பட்ட காயங்கள் நிறைந்த கால்களுடன் அவர் பட்ட அவஸ்தைகள் ... இரத்தப் போக்குத் தடைப்படும் போதெல்லாம் காயங்கள் பெரிதாகி... அப்பப்பா வேதனையால எப்படி எல்லாம் குழறுவார். நினைக்கவே ஏதோ செய்கிறது.

'புலி' எண்ட சந்தேகத்தில நாலாம் மாடிக்குக் கொண்டு போய் தலைகீழாய்க் கட்டித் தொங்க விட்டு, அந்தப் பாவிகள் பாதத்தில் அடித்த அடிகள் .... தந்த ரணங்கள் தான் அவை. கால் நரம்புகள் உணர்விழந்த நிலையில சக்கர நாற்காலியிலேயே கடந்த பதினைந்து வருடங்களாக வாழ்ந்த அந்த நிலையிலும் நாடு, இனம், மொழியெண்டு எத்தனை விஷயங்களைக் கதைத்து தள்ளினார். அவருடைய கால்களை மட்டும் தான் அந்தப் பாவிகளால் ரணமாக்க முடிஞ்சது. உறுதியான தெளிவான சிந்தனைகளை அல்ல. சொந்த மண்ணை விட்டு இங்க வந்த குற்ற உணர்வு அவருக்கு எப்பொழுதும் இருந்தது.


இப்படி எத்தனை பேர் என்னைப் போல் எத்தனைப் பெண்கள் நமது இனத்தின் தலைவிதியை நினைக்கிறேன். கூடவே உறுதி நிறைந்த உணர்வுகளும் எழுகின்றன. இன்னும் கொஞ்ச நாட்கள் தான் எனது கடைசிக் காலம்... நான் நேசிக்கும் .... எனது கணவர் உயிராய் நேசித்த எனது மண்ணில்தான் அந்த சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடியே எனது சுவாசம் அடங்கவேண்டும்.

"காலை வணக்கம்" என்றாள் டோட்டா. என்ன பெரிய யோசனை என்றாள் நாட்டு நியுஸ் ஏதேனுமோ? சிரித்தபடி டோட்டா கேட்கின்றாள். நான் இப்படி அடிக்கடி நினைவுகளில் மூழ்குவதும் அவள் கேள்விகள் கேட்பதும் எனக்குப்பழகிப் போச்சு .

அவளுக்கும் பழகிப் போச்சு

சுயசிந்தனைக்கு வருகின்றேன் இருவரும் கதைத்தபடியே எங்களுக்கென்று தரப்பட்டிருக்கும் அறைக்குள் நுழைகிறோம். பனிகொட்டினாலே வேலை அதிகம். அடிக்கடி நிலத்தைத் துடைக்க வேண்டும்.

வழக்கம் போலவே வேலைகள் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு பதினொரு மணிக்குக் கிளம்புகின்றோம். பனிகொட்டுவது நின்று விட்டது. வீட்டை நோக்கி நடக்கின்றேன். சப்பாத்தின்ர அளவு இப்ப தெரியேல்ல வாகனங்கள் போனதால் றோட்டில கிடந்த பனியெல்லாம் பிரௌண் கலரா மாறி இருந்தது. அந்த பதின்மூன்று படிகள் மறக்காமல் எண்ணவேண்டும். ஆறாம் படியில் படுத்திருக்கும் அந்தக் கறுத்தப் பூனையை மறக்காமல் தடவவேண்டும்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ந. ஹேமராஜ் கவிதைகள், லண்டன்

# பட்டொளி வீசிப் பறக்கிறேன்

எனது ஐஸ்வர்ய வேட்கையில்
அகதிப் போர்வையைப் பற்றிப் பிடித்தேன்.
மிக அதிஸ்டமாயிற்று.
இன்று,
ஆடம்பரத்தின் கைப்பிடி இறுக்கத்துக்குள்
அவதிப்படுகிறேன்.
முற்றுமுழுதாய் மாறுபட்ட
சுவாத்தியம் வசிப்பிடம் ஜீவனம் சுகவாசங்கள்.

இந்த வாழ்க்கைமுறை
வருட பந்தங்கள் ஆகிப்போனதில்
எனது ஆரம்பப் புள்ளியை தேட முயன்று
பல தடவை தோற்றுக் கொண்டிருக்கிறேன்.
அகர முதல எழுத்தெல்லாம்... என்ற தொடரை
என் குழந்தைகளிடம் ஆரம்பிக்கிற போதெல்லாம்
நான் வலது குறைந்தவனாகிறேன்.
அந்தக் கணங்களில்
உலகமே என்மேல் பரிதாபப்படுவதாய்
கூனிக், குறுகி, சிறுபுழுவாகி விடுகிறேன்..

இறையனாரே!
என்னிடம் எல்லாம் உண்டு என்றுதான்
இறுமாந்திருந்தேன்.
நீ 2000 ஆண்டுகளுக்கு முன்னமே
தியானம் யோகம் நிஷ்டை என்று
பலநாள் தவம் இருந்து
தமிழ் அமுதத்தில்
கடைந்து எடுத்துச் சொன்ன
நன்மக்கள், நல்மனையாள், நல்லறம்
என்ற வரிசையிலே
ஒன்றேனும் என்னிடம் இல்லாத காரணத்தால்
நான் வெறும் பூச்சியமாகவல்ல
வெறும் சடப்பொருளாகவும் கூட அன்றி
வெற்றிடமெனவும் சொல்லமுடியாத
விசித்திரப் பிண்டமாக
என் குடும்பத்தவர்க்கு பணம் பெற்றுக்கொடுக்கும்-
உணர்ச்சிகள் வெளிப்படுத்த முடியாத-
இயந்திரமாக மட்டும் செயற்படுகிறேன்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இருந்தாலும்,
ஐரோப்பாவில் ஆசியாவில் ஸ்கன்டினேவிய நாடுகளில்
என் புகழ் பட்டொளிவீசிப் பறக்கிறது.
எதனால் என்கிறாயா?
நான் கண்டங்களுக்கும் நாடுகளுக்கும் ஏற்றபடி
நடிக்கத் தெரிந்திருக்கிறேன்.

# மாவீரன்

அம்மா!
உன் பூவிதழ்க் கிருகத்தில்
இரவுபகலாய்ச் சுமந்து
இந்தப் பூமிப்பந்தை உருட்டி நிமிர்த்தி
என்னை இறக்கி வைத்தாய்!
உன்னைப்போற் பெண்ணன்றி
யாரறிவார் அக்கணத்தை?
உச்சி வகிடிருந்து பாதத்து ரேகை வரை
பச்சைத் தசைப் பொதிக்குள்
உன் உயிர் பிடித்து வைத்திருந்தாய்!
இதுநாள்வரை நீயாக இருந்த
உன்னையும் என்னையும்
தொப்புள் கொடி அறுத்துப் பிரித்து
உன் மகவு என்று உன் அருகில் வைத்திருந்தார்.
அந்தப் பிரிவை எப்படி ஏற்றுக் கொண்டாய்?
பெருமிதம் அலையாய் எழுந்தது
நீராய் வழிந்தது
விழிகளில் சூரியன் ஒளிர்ந்தது
உன் மகனென என்னை உச்சிமோந்தாய்!

நேற்று,
உன்னைப்போல் ஒரு தாயவள் -
யாரோ அரக்கனின்
வேட்கையின் தகிப்பில்
உடலெங்கும் பிராண்டல்-
தசைகள் கிழிந்து தொங்கின-
ரத்தமும் நிணமுமாய் வடிந்தது-
உலகெங்கும் அதிர ஓலமிட்டாள்-
என்னைப்போல் மைந்தர்கள்
அவள் திசையினில் ஓடினோம்
உயிரற்ற உடலமாய் திரும்பினோம்
நிச்சயம் நீ கதறுவாய்
உலகை வெறுப்பாய்
உன் உயிர் போக்கவும் துணிவாய்
இன்றைய பிரிவு உன் இதயத்தைப் பிழியினும்
அம்மா என்மேல்.
கோபமா கொள்வாய்? மாட்டாய்!
உன்னைப் போலொரு தாயவள் என்பதால்,
உன்னோடு இந்தத் தேசம் அழுகையில்,
மீண்டும் ஒருமுறை மகனாய்ப் பெற்றதின்-
பெருமையை மனதில் ஏற்றுவாய்!
மாவீரன் தாயென மகுடம் சூடுவாய்!

# நாங்கள் மட்டுமா அகதிகள்?

■ திருமலைச் செல்வன்
ஜேர்மனி

நகர்ந்து அழகாகச் செல்கையிலே
மின்னுகின்ற பொன் அழகு

நள்ளிரவில் நட்சத்திரக் கூட்டம்

மண்ணிலுள்ள மக்கள் ரசிக்கவில்லையா
அவைகளும் அகதிகளா?

வானத்து வீதி எங்கும்
வண்ண நிறப் பறவைக்கூட்டம்
வடிவாக அணிவகுத்துப் பறக்கையிலே
வாய்விட்டு மக்கள் ரசிக்கவில்லையா
அவைகளும் அகதிகளா?

நீலக் கடல் அன்னை மடியில்
நீந்திவரும் மீன் கூட்டம்
பாடிச் செல்வதைப் பார்க்கையிலே
பாமர மக்களும் ரசிக்கவில்லையா
அவைகளும் அகதிகளா?

மலையோரப் பசும் வெளியில்
மந்திரமாய் மான் கூட்டம்
துள்ளலோடு பாய்ந்து செல்கையிலே
உவகையுடன் மக்கள் ரசிக்கவில்லையா
அவைகளும் அகதிகளா?

வேதனையோடு புறப்பட்ட நாங்கள்
வேர்வை சிந்திச் சேர்க்கும் பணத்தை
நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்கனுப்ப
எம்மக்கள் முகம் மலரவில்லையா
அப்போ நாங்கள் மட்டும் அகதிகளா?



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சித்திரா சுதாகரன்



# வைன் கேஸ்

"துரைசிங்கத்தாருக்குப் பூப்போட்டுக் கும்பிட வேணும். அந்தாள் சொன்ன மாதிரியே நடந்து போச்சுது. அந்தாளிட சொல்லக் கேட்டிருந்தால் எனக்கு இந்தக் கிலிசை கேடு ஏற்பட்டிருக்காது. அந்தாள் படிச்சுப் படிச்சுச் சொன்னது எங்கட சனம் முன்னுக்கொண்டு பின்னுக்கொண்டு கதைக்குங்கள் தேவையில்லாத வேலையள் பாக்காதை" எண்டு நான் கேட்டிருக்கலாம்.

மூன்று வருசத்துக்கு முதல் நான் பரிசுக்கு வந்தபோது என்னைப் போலவே இஞ்ச உதவிக்கு ஒருத்தருமில்லாமல் முழுசிக் கொண்டு நிண்டவர்தான் துரைசிங்கத்தார். அப்பதான் எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. நான் பெடியன் அவர் மனுசன். அவரின் உலக அறிவும், வாழ்க்கைப் பாடமும் கதைக்கிற ஸ்டைலும் எனக்குப் பிடிச்சுக் கொண்டது. வேலை விசா இல்லாத விசரிலயும் சமறிக் காரற்ற புடுங்குப் பாட்டிலேயுமிருந்து தப்பிக்க துரையரைத்தான் தேடி வருவன். அப்ப எங்கிட மீற்றிங் பொயின்ற் லாச்சப்பலுக்குக் கொஞ்சம் தள்ளியிருக்கிற சின்னப் பாக்தான்.

அவர் சொல்லுற ஊர்க்கதையள், பிரச்சனைகள், அறிவுரைகள், ஐடியாக்கள் எல்லாம் கேட்க கவர்ச்சியாயும் உண்மையாகவே நன்மையளிப்பவையாகவும் இருக்கும். இப்பிடிக் கொஞ்ச நாள்போகத் துரையருக்கு விசாக்கிடைச்சு வேலையும் கிடைச்சது. ஆளுக்கு நேரமில்லை. ஒண்டுக்கு மூண்டு வேலை செய்து கொண்டு அவர் திரிய, உண்மையில் நான் தனிச்சுத்தான் போனன்.

எப்படியாவது என்னக் காணேக்குள்ள என்ர பொக்கேற்றுக்குள் அஞ்சு பத்து ஈரோவ வைச்சு விடுவார். எனக்கு அந்தச் சின்னப் பாக்தான் தஞ்சம் காசிருந்தால் ரெண்டு பியர் அடிப்பன். இல்லாட்டி சும்மா இருப்பன்., புத்தகம் பேப்பர் படிப்பன். அப்பதான் ஒரு பெடியன் கேஸ் எழுதிற பிரச்சனையில் வலு கஸ்ரப்பட "இஞ்ச கொண்டுவா நான் எழுதித் தாறன்" எண்டு எழுதிக் குடுத்தன்.

நான் எழுதிக் கொண்டிருக்க அவன் போய் நாலு பியர் வாங்கிக் கொண்டு வந்தான். ரெண்டு எனக்கு ரெண்டு அவனுக்கு. என்பலப்பு வாங்கி முகவரி எழுதி போஸ்ற் பண்ணச் சொல்லிக் குடுத்து விட்டிட்டு இருக்க துரையர் என்னைத் தேடி வந்தார்.

அண்டைக்கு அவருக்கு லீவு. என்னையும் நாலு பியர் ரின்னையும் கண்டிட்டு "என்ன நல்ல கீறு போல, வேலையில்லை வேலையில்லை எண்டு அழுகிறாய் பின்னேரப் பாட்டுக்கு நாலு பியர் விட்டிருக்கிறாய்?" எண்டேர்.

"ஐயோ அண்ண அது ஒரு பெடியன் றீ அப்பீலுக்கு எழுத வசதியில்லாமல் ஓடுப்பட்டுத் திரிஞ்சான் நான்தான் எழுதிக் குடுத்தன். பெடியன்தான் பியர் வாங்கினவன் ஆளுக்கு இவ்விரெண்டாய்க் குடிச்சம்" துரையண்ணருக்கு மூஞ்சை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாறிப்போச்சுது.

"ஜெகன் நீ ஆருக்கும் கேசெழுது உதவிசெய் அது நல்லதுதான். மற்றவையள் மாதிரி ஐந்நூறு ஆயிரம் எண்டு வாங்காமல் அம்பது நூறெண்டு வாங்கு. இல்லாட்டிக் காசே வாங்காமல் விடு. அதவிட்டிட்டு அவங்களிட்ட வாங்கிக் குடியாத"

"ஏனண்ண இதுக்குக் கோவிக்கிறியள். அது சும்மா பிரன்ட்சிப்பிலதானே"

"எங்கடையளைப் பற்றி உனக்கு விளங்காது. உது தேவையில்லாத வேலை. பிறன்ட்சிப் பாட்டியெல்லாத்தையும் தனியா வைச்சுக்கொள். உதவி செய்திற்று வாங்கிக் குடியாதை" என்ர கீறுக்கும் அவர் சொன்ன கதைக்கும் டக்கெண்டெனக்குக் கோவம் வந்தது.

"நீங்கள் விசாக்கிடைச்சு செற்றில் ஆயிற்றியள் எங்களப் பார்த்தால் உங்களுக்கு பிச்சையெடுக்கிறது போலத்தான் தெரியும்" துரையர் கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்திற்று ஒண்டும் சொல்லாமல் எழும்பிப் போனார்.

அதுக்குப் பிறகு அவர் அவுட்டப் பரிசில் வீடு பாத்துப் போய்ற்றார். எங்கட தொடர்பு அறுந்து போச்சுது.

நான் எழுதிக் கொடுத்த கேஸ் வெண்டிச்சுது. ஆனால் எனக்கு கொமிஷனில் றிஜெக்ற் ஆச்சுது. வெண்ட பெடியன் நன்றி சொல்ல ரெண்டு பியர் போத்தலுடன் வந்தான். அதுக்குப் பிறகு பரிசில் பெரிய பெரிய கேஸ்காரரிட்டயெல்லாம் கேஸெழுதித் தோத்துக் கேஸெழுதக் காசில்லாமல் தவிக்கிற பெடியள் எல்லாம் என்னட்ட வருவாங்கள். எல்லாரும் சொல்லி வைச்ச மாதிர இவ்விரெண்டு பியர் ரின்னோடதான் வருவாங்கள். நான் எழுதிற பல கேசுகள் வெண்டாலும் அறப் படிச்ச பல்லி கூழ்ப்பானைக்குள் விழுந்த கதையாய் என்ர் கேஸ் மட்டும் தோத்துக்கொண்டே இருந்தது. எனக்கொரு வேலையும் கிடைச்சது. எண்டாலும் ஒவ்வொரு ஞாயிறும் பின்னேரத்தில் அந்தச் சின்னப் பாக்கிற்குப் போறதை நான் விடயில்ல. இடைக்கிடை சில பெடியள் கேஸ் எழுத வருவாங்கள். அவங்களும் கட்டாயமாய் ரெண்டு பியர் ரின்னோட வாறதை நான் கவனிக்கத் தவறியிருந்தன்.

மூண்டு வருசமாய் என்ர பிரச்சனைக்கு ஒரு வழியும் பிறக்கயில்லை. பரிசிலயும் உறவினர்களோ நெருங்கிய நண்பர்களோ இல்லாமல் நான் படுகிற கஸ்ரத்தைப் பாத்திற்று ஊரில இருந்து அப்பர் கொழும்புப் பேப்பரில விளம்பரம் குடுத்து எனக்காகப் பிரான்சில் வதிவிட உரிமை பெற்ற மணமகளைத் தேடினார். எங்கட குடும்பப் பெருமையாலும், அப்பருக்கு ஊரிலிருந்த நல்ல பெயராலும் சாதகப் பொருத்தங்கள் போட்டோ எல்லாம் பாத்து ஒரு கல்யாணம் ஒப்பேறிச்சுது. அவுட்டப்பரிசில வீடாம் நல்லாப் படிச்ச பிள்ளையாம். நல்ல வேலையில் இருக்குதாம். இன்னும் ரெண்டு கிழமையில பரிஸ் அம்மன் கோயிலில வைச்சுப் பொம்பிளை பாக்கலாமெண்டும், ரெண்டு பேருக்கும் பிடிச்சிருந்தால் உடனேயே கல்யாணம் செய்யலாமெண்டும் அப்பர் ரெலிபோனில் சொன்னார்.

நானும் வடிவா வெளிக்கிட்டு குறிப்பிட்ட நாளில் அம்மன் கோயிலுக்குப் போனன். வாற போற பெட்டையளையெல்லாம் இவாவா இருக்குமோ, இவாவா இருக்குமோவெண்டு பாத்துக்கொண்டு நிண்டன். மத்தியானப் பூசையும் முடிஞ்சிற்றுது. பொம்பிளை வரயில்ல. கூட்டிக்கொண்டு வாறதெண்டு சொன்ன பொம்பிளையின்ர தாய் தகப்பனும் வரயில்ல. கடைசியாய் பொம்பிளையின்ர அண்ணன்காரன்தான் வந்தான். அவனோட கூடவந்த பெடியன் நான் முதல் முதல் கேஸ் எழுதிக் குடுத்த பெடியன். அண்ணன்காரன்ர பிறன்டாம். அவரத்தான் பொம்பிளை வீட்டார் மாப்பிளையைப் பற்றி விசாரிக்க ஏற்பாடு பண்ணியிருக்க வேணும். வந்த தமையன்காரன் சொன்னான். "தம்பி உந்தக் கல்யாணம் சரிவராது போல கிடக்குது. இதோட பேச்சுக்கால நிப்பாட்டுவம்"

"ஏனண்ண என்ன பிரச்சனை?"

"பிரச்சனையொண்டுமில்ல விசயமெல்லாம் உங்கிட அப்பாவோட கதைக்கிறம்" எண்டு சொல்லிப் போட்டுப் போனான். எனக்கொண்டும் விளங்கயில்ல. உடனடியா ஊருக்குப் போன் அடிச்சு அப்பரோட கதைச்சன். அப்பர் அடியடாப் புடியடா எண்டு கத்தினார். "எங்கிட குலமென்ன கோத்திரமென்ன எங்கிட எல்லாற்ற மானத்தையும் சேத்து வேண்டிப் போட்டாய்" அது இதெண்டு துள்ளு துள்ளெண்டு துள்ளினார். என்ன பிரச்சனையெண்டு கேக்க, "மாப்பிள்ளையைப் பற்றி வடிவாய் விசாரிச்சவையாம். ஆள் கெட்டிக்காரன்தானாம். ஆனால் பாக்கிலதான் எப்பையும் படுத்துக்க கிடப்பாராம். ஆளுக்குப் பக்கத்தில் பியர் ரின்னாக் குவிஞ்சு கிடக்குமாம். ஐந்நூறு ஆயிரத்துக்கு எல்லாரும் கேஸ் எழுத இவருக்கு ரெண்டு பியர் வாங்கிக் குடுத்தால் போதுமாம் கேஸ் வெற்றிதானாம். தாங்கள் ஒழுங்கான மாப்பிள்ளையைத்தான் தேடுகினமாம் இப்பிடி வைன் கேஸ்ஸெல்லாம் வேண்டாமாம். விசயத்த அப்பா சொல்லி எக்கேடெண்டாலும் கெட்டுப் போ உன்ர தகப்பன் எண்டு என்ர பேரச் சொல்லிக் கொண்டு திரியாதை எண்டு ஏசிப் போட்டு ரெலிபோனைக் கட் பண்ணினார்.

இதெல்லாத்தையும் நான் முதன் முதலாய் கேஸ் எழுதிக் குடுத்த பெடியன்தான் சொல்லிக் குடுத்திருக்கிறார். "அடப் படுபாவிப்பயலே காசு வாங்காமல் கேஸ் எழுதிக் குடுத்ததுக்கு காட்டிற நன்றிக் கடன் இதுதானா? நானா உங்களிட்ட பியர் கேட்டன்? கடைசியாய் என்னை வைன் கேஸ் ஆக்கிப் போட்டியளே" மனசுக்குள்ள அந்தப் பெடியனத் திட்டத் தொடங்கினன். அப்பதான் துரைசிங்கத்தார் சொன்னது ஞாபகம் வந்தது. அந்தாளப் பூப் போட்டுத்தான் கும்பிட வேணும் ●

(பின் குறிப்பு:...1) ஜெகன் ஆரோ ஒரு பெடியன்ர சேட்டைப் பிடிச்சு லாச்சப்பலுக்க உருண்டானாம். "என்ர வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டாயே நன்றி கெட்ட நாயே" எண்டு ஜெகன் பேச மற்றவன் அதுதான் நீ கேஸ் எழுதினதுக்குத்தான் பியர் வாங்கித் தந்தாச்சே" எண்டு சொல்ல ஜெகன் பாஞ்சு பாஞ்சு அடிக்க சனம் விலக்குப் பிடிக்க வர பெடியன் "ஜெகன் வைன் கேஸ் எண்டும் ரெண்டு பியர் வாங்கிக் குடுத்தால் அடங்குவான் எண்டும் சொல்ல ஆரோ ஒரு பியர்ப் போத்தில் வாங்கிக் குடுக்க கோபம் தலைக்கேறின ஜெகன் பியர்ப்போத்தலை றோட்டில எறிஞ்சு உடைக்க பொலிஸ் வந்து ஜெகனைக் கொண்டு போச்சுது.

(பின் குறிப்பு:...2) இப்பயெல்லாம் அந்தச் சின்னப் பாக்கில தாடியோடையும் பிஞ்ச உடுப்புகளோடையும் ஒருத்தர் படுத்திக்கிறாராம். எல்லாரும் கைவிட்ட கேசுகளை மட்டும் எழுதிக் குடுப்பாராம். கேஸ் எழுதேக்க "எங்கயடா பியர் எண்டு அதட்டிக் கேப்பாராம்"அடிக்கடி மேலபாத்துச் சொல்லுவாராம் "துரைசிங்கத்தாருக்குப் பூப் போட்டுக் கும்பிட வேணும்".




www.tamileelamarchive.com




# பனிவெளி ஆடல் - 2005

உலக வரலாற்றில் பல புரட்சிகளும் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களும் இளையோர் மட்டத்தில் இருந்துதான் பிறப்பெடுத்தன. இவ் இளையோரின் அறிவியல் வளத்திற்கும், வேகத்திற்கும் ஏற்பவே உலகின் சுழற்சி அமைகிறது எனலாம்! இவ்வுலகச் சக்கரத்தின் அச்சாணியாகத் திகழும் இளையோர் பற்றி பல்வேறு சமூகங்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஆனால் எமது சமூகத்தை எடுத்துக் கொண்டால் தாயகத்தில், சமூகசிந்தனையுடனும், ஆளுமையுடனும் வளர்ந்து நிற்கும் இளையோரை ஆக்க சக்தியாக பார்க்கப்படுகிறார்கள். ஆனால், புலம்பெயர் தமிழ் இளையோர் பற்றி எம்மவர்கள் மத்தியில் இருக்கும் கருத்து வித்தியாசமானது. சமூக சிந்தனையற்ற, சமூக சீர்கேடுகளில் ஈடுபடும் ஒரு முரட்டு சக்தியாக ஒரு சிலரால் இளையோர்கள் பார்க்கப்படுகின்றார்கள்.

இது யார் குற்றம்? சுய ஒழுக்கத்துடன் தமிழரின் அறிவியற் பலமாக வளராமல், தற்பிடிப்பற்ற சமூகமாக வளரும் சில இளையோரின் குற்றமா? அல்லது




சூழ்நிலை ஒழுக்கமாகத் திகழும் பெற்றோர்கள், தமது பாசச்சுவற்றுக்குள் தமது பிள்ளைகளின் ஆளுமைகளை அடக்கி வைக்கும் சில பெற்றோரின் குற்றமா?

ஒருவன் ஒழுக்கத்துடன் ஆளுமையுள்ளவனாக வளர்வதற்கு இரண்டு விதமான ஒழுக்கங்கள் அவசியம். ஒன்று சுய ஒழுக்கம். மற்றையது சூழ்நிலை ஒழுக்கம். அதாவது தனக்கான எல்லைகளைத் தானே வரையறை செய்துகொள்வது. மற்றையது எம்மைச்சுற்றி இருக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எமக்கான எல்லைகளை வரையறை செய்துகொள்வது. இச்சூழ்நிலைகளே இவ்வரையறையாக அமையும். எனவே ஒருவன் ஒழுக்கமுடையவனாக வளர்வதற்கும் ஆளுமையுள்ளவனாகத் திகழ்வதற்கும் இவ்இரண்டு ஒழுக்கங்களும் அவசியமாகின்றன. ஒருவன் சுயஒழுக்கத்துடன் வளரவேண்டும் என்றால் அதற்கு சூழ்நிலைகளே வழிகோலவேண்டும். அதாவது ஒரு இளைஞனின் வளர்ச்சிக்கு பெற்றோர்களே பல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். இச்சூழ்நிலைகள் மூலமே ஒருவன் தனக்கான எல்லைகளை வரையறை செய்துகொள்ளமுடியும். எனவே ஒரு இளைஞனின் வளர்ச்சிப் பாதையில் பெற்றோரின் பங்களிப்பு அவசியமானது.

ஆனால் புலம் பெயர் தமிழ் இளையோர் பற்றி கடந்த 26-12-2004 க்கு முன்னர் இருந்த கருத்து எமக்கு வேதனையைத் தரக்கூடியதாக இருந்தது. நிகழ்காலப் பலமாகத் திகழும் புலம் பெயர் தமிழ் இளையோர் இன்று புது வேகத்துடன் 'தமிழ் இளையோர் அமைப்பு' என்ற புதிய பாதையில் நகர ஆரம்பித்திருக்கின்றார்கள்.

தமிழ் இளையோர் அமைப்பு என்றால் என்ன? இவ் அமைப்பு யாரால் யாருக்காக ஆரம்பிக்கப்பட்டது? இதன் நோக்கம் என்ன? ஒரு இனத்தின், அவர்கள் சார்ந்த மொழியின், அவர்களின் வரலாற்றின், கலை பண்பாட்டு விழுமியங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களாக இளையோர் இருக்கின்றனர். ஆனால் எமது இளம் தமிழ்ச்சமூகம் பல்வேறு நாடுகளில் பல்வேறுபட்ட கலாச்சாரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் எமது அடையாளங்களுடன் வாழ முடியுமா? எம் தேசத்தின் கட்டுமானப் பணிகளில் இவர்களின் பங்கு என்ன? சமூக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




சிந்தனையுள்ள, அறிவியல் ரீதியில் வளர்ச்சியடைந்த ஒரு ஆளுமையுள்ள புதிய இளஞ்சமூகத்தை உருவாக்க முடியுமா? இதுபோன்ற கேள்விகளுக்கு எமது தேசம் விடைதேட முற்பட்டதனாலேயே 'தமிழ் இளையோர் அமைப்பு' உருவாக்கம் பெற்றது. இன்று எமது தாயகத்தை அடிவேராகக் கொண்டு, அமெரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் இளையோர்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்த்து, அவர்களிடையே அறிவியல் மற்றும் தாயகத் தேடலை ஏற்படுத்தி, அவர்களை ஒழுக்கமும் கண்ணியமுமுடைய ஓர் இளைய சமூகமாகக் கட்டியெழுப்பும் நோக்குடன் இவ் அமைப்பு கிளைபரப்பி வளர்ந்து வருகின்றது. உலகளாவிய ரீதியில் கட்டமைக்கப்பட்டு வரும் இளையோர் அமைப்புக்களின் இந்த ஆரம்பம் எதிர்காலத்தில் உலகிலே தலைசிறந்த, ஆளுமையுள்ள, சமூகசிந்தனையும் தேசப்பற்றும், ஒழுக்கமும் ஒற்றுமையுமுள்ள ஒரு புதிய தலைமுறையைப் படைக்கும். இப்புதிய தலைமுறைக்காக கனவு கண்டு நிற்கும் எமது தேசியத்தலைமையின் சிந்தனைக்கேற்ற வகையில் புலம்பெயர் தமிழ் இளையோர் அனைவரும், காலத்தின் தேவையுணர்ந்து தேசத்தின் பணி சுமப்போம்.

பிரான்சில் கடந்த 2004ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து நிறுவப்பட்டு, பிரான்ஸ் வாழ் தமிழ் இளையோரை ஒருங்கிணைத்து செயற்பட்டு வரும் பிரான்ஸ் - தமிழ் இளையோர் அமைப்பு, 'பனிவெனி ஆடல்-2005' மேற்கத்தேய நடனப்போட்டி ஒன்றை கடந்த 10-07-2005 ஞாயிற்றுக்கிழமை பொண்டி நகர சபை மண்டபத்தில் சிறப்பாக நடாத்தியது. பிரான்ஸ் வாழ் தமிழ் மேற்கத்தேய நடனக் கலைஞர்களின் திறனை வெளிக்கொணர்வதற்கும், இக்கலை ஊடாக தேசம் நோக்கிய பாதை ஒன்றை உருவாக்கும் நோக்குடனும் நடாத்தப்பட்ட இக் கலை நிகழ்வு மாலை 4.30 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின், புலிகளின் குரல் பொறுப்பாளர் திரு.தமிழன்பன் அவர்களின் சிறப்புரையுடன் போட்டி ஆரம்பமாகியது. இப்போட்டியில் பங்குபற்றிய பிரான்சின் 5 முன்னணி நடனக்குழுக்கள், முதற்சுற்றில் 5 நிமிடங்களுக்கு தங்களின் தயார்ப்படுத்தப்பட்ட நடனங்களை ஆடினார். தொடர்ந்து அனைத்துக் குழுக்களும் தலா 15 நிமிடங்களுக்கு, தங்களது நடனம் மூலம், பார்வையாளர்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் சமூக சிந்தனைகொண்ட கருத்துக்களைச் சொல்லவேண்டும். இச்சுற்றில் அனைத்து நடனக்குழுக்களும் திறம்பட நடனமாடியிருந்ததுடன், நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சனைகள், எமது விடுதலைப்போராட்டம் தொடர்பான கருத்துக்கள், நிகழ்வுகளை மேற்கத்தேய நடனம் மூலம் பார்வையாளர் மத்தியில் விதைத்தனர். இந்நிகழ்வில் இளையோர் அமைப்பின் கலைப்பிரிவின் 'பாதை' நாடகம், நாங்கள் படைப்பகத்தின் 'கொத்துரொட்டியும் கொம்பூட்டர் கடையும்' நகைச்சுவை நாடகம், மற்றும் சிறப்பு நடனங்களுடன், புதிய வேகத்துடன் நிகழ்வு நடந்தேறியது. சர்வதேச தமிழ் இளையோர் அமைப்புக்களால், தாயகத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் 'அறிவியற் கழக' கட்டிட நிதிக்காக, நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் 600 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வு, அனைவரது பாராட்டுதல்களுடன் இரவு 10.20 மணியளவில் நிறைவு பெற்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புது-சன்னல்

■ ந.கிருஷ்ணசிங்கம்



பனிமூடியிருந்ததரை, வசந்தத்தின் வரவால் வெள்ளை ஆடை களைகிறது, பசும் புல் உடுத்த களிப்பால் பசுமைகொண்டு சிலிர்க்கிறது.

தளிர்பெருகிய மரஞ்செடிகள் இளம்தென்றலில் அசைந்ததாடுகிறது, அவற்றில் வர்ணங்களில் முகையவிழ்த்த மலர்களின் தோற்றமும், அந்த குளிர்நீங்கிய மிதமான சுகமும் மனதிற்கு மகிழ்ச்சியைத்தந்து கொண்டிருந்தன.

பரபரப்போடு ஓடி பேரூந்தில் ஏறிக்கொண்ட புனிதன், அந்த இளங்காலையில்..

தான் வேலைசெய்யும் இடங்களில் ஒன்றான, லூாசியாவின் வீட்டுக்கு அருகில் வந்து இறங்கினான்.

இருபது வருடங்களை இந்த நோர்வே மண்ணில் கழித்துவிட்ட புனிதனுக்கு இப்பொழுது வயது நாற்பதைத் தாண்டிவிட்டது.

ஒரு வேள்வி ஒன்றில் குதித்து விட்டவனுக்கு இருக்கும் வேகமுயற்சியோடு, அன்றாடம் எழுந்து இயங்குவதால் தன்வயது போவதுகூட அவனுக்குத் தெரிவதில்லை.

தன்குடும்பச் சிலுவையைச் சுமந்தபடி புனிதன், ஒவ்வொரு நிமிடங்களையும் எப்படிப் பணமாக்கி ஊருக்கு அனுப்பலாம் என்பதிலையே கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

இவனோடு வந்தவர்களில் பலர் ஏதேதோ படிப்பெல்லாம் படித்தவர்களாய், இன்று நல்ல உத்தியோகங்கள் பார்க்க, இவன் படிப்பைப் பொருட்படுத்த நேரமின்றி.. அன்றிலிருந்து இன்றுவரை உடலை வருத்திச் செய்யும் தொழில்களையே தொடர்கின்றான்.

விமானக் குண்டுத் தாக்குதலால் அவனின் தந்தையார் அவலமரணம் அடைந்ததும், அவர் நடத்தி வந்த கடை சிதறியழிந்ததும், அந்தக்குடும்பத்துள் வறுமைவந்து



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புகுந்துகொள்ள
வழிகோலியது.

கலியாணவயதில் மூன்று தங்கைகள்
இருந்ததும், கல்வியில் வல்லவனாய்
தம்பியார்
துலங்கியதும் புனிதனை மேலும்
பணம்தேடும்
இயந்திரமாக மாற்றியது.

தோள்களை சுமைதாங்கியாக்கி,
பெரும்பழுவாக அமுக்கிய குடும்பப்
பாரத்தை
தனியனாய் நின்று அவன் தாங்கியதால்,
பகல் இரவுபாராது உழைத்து தேய
வேண்டிய
தவிர்க்கமுடியாத கடைமைக்கு
உள்ளாகினான்.

நோர்வேக்கு வந்தகாலத்தில் இவனும்
மற்றவர்போல
சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்று
ஆசைப்பட்டது உண்டு.

நல்ல நவநாகரீக உடைகளை
வாங்கவேண்டும்,
சுவையான உணவுகளை
உண்டுகளிக்கவேண்டும்,
இருக்க தனிவீடும்,
தட்டுமுட்டுச்சாமான்களும்,
உலாவக் காரும், அழகான மனைவியும்,
இனிமையான பொழுதுபோக்கும்
வேண்டுமென்று
அவனுள் ஆசையானது உந்தியது.

இருந்தும் 'பிறகு பாப்பமெல்லாம்' என்று
தவணை
முறையில் அவற்றையெல்லாம்
தள்ளிவந்ததால்,
இன்றுவரை இவையொன்றும் அவனுக்கு
கைகூடவில்லை.

வாடகைவீடும், தளபாட வசதியற்ற
வறுமையும்,
தனிமையின் தவிப்பும், மலிந்தவற்றை
வாங்கி
சமையல்செய்து உண்டு வயிற்றை
நிரப்புவதும்,
சற்று அயர்ந்து எழுந்து மீண்டும்
வேலைக்கு ஓடுவதும்
புனிதன் பூண்ட இந்தத் துறவுவாழ்வின்
சுற்றுவட்டமாகச் சுழல்கின்றது.

அறைச்சுவரில் காட்சிதரும் தன் குடும்ப
உறுப்பினர்களின் நிழற்படங்களில்
தெரியும்
நிம்மதிச் சிரிப்பை நிமிர்ந்து பார்த்ததும்,
அவனின் மனதில் தோன்றும் குறைபாட்டு
நெருடல்
காணாது போய்விடும்.

லூசியா அம்மையாரின் வீட்டில் புனிதன்
கழுவித்துப்பரவு செய்யும்
வேலைபார்ப்பவன்.
இது சென்றவாரம் அவனுக்குக் கிடைத்த
மேலதிக உழைப்பாகும்.

இதைவிட பலதரப்பட்ட வேலைகளை
அவன் தினமும் செய்துவருபவன்.
வினாடிகள்
ஒவ்வொன்றும் உழைப்பதற்கே என்பது
அவனின் சித்தாந்தமாகும்.

லூசியா என்பது வயதைக்கடந்த மாது.
இனிமுகமும், சுவையானபேச்சும்
இவருக்குச் சொந்தம்.
இவரின் பெரும் காதற் கணவர் நோர்வே
தேசிய
இராணுவத்தில் பணிபுரிந்து மரித்தவர்.

அந்த மாவீரரின் கம்பீரமான
தோற்றங்கொண்ட
படங்கள் வீட்டின் சுவர்களை
அலங்கரித்தன.
கணவர் டானியல் குறித்து லூசியா பேசாத
நாளில்லை.

வேலைகள் முடிந்ததும், சிறிதுநேரம்
புனிதனை அழைத்து இருத்தி, லூசியா
அம்மையார் உரையாடினார். அவன்
உண்பதற்காக
கேக்முதலியனவும், கோப்பியும்வழங்கி,
அவர் அன்போடு
அவனை உபசரித்தார்.

புனிதனின் அப்பாவித் தோற்றமும்,
நெட்டையான
மெலிந்த உடல்வாகும், சிரித்தமுகமும்,
அதில் தெரியும் அடக்கமும்,
தன் சொட்டைபோன தலையை அவனின்
கை தடவும்
இயல்பான பாங்கும் யாவரையும்
அவனின்மேல்
இரக்கம் கொள்ளவைக்கும்.

அன்று புனிதனோடும், தன் கணவரான
டானியல் பற்றி அவள் கதைத்துக்
கொண்டிருந்தாள்.
கதைகேட்கும் அவகாசம் சற்றும்
இல்லாவிடத்தும்
கிழவியைத் திருப்திப்படுத்தும் நோக்கமாக
அவளின் கதையை அவன்
பொறுமையோடு
கேட்டுக்கொண்டு இருந்தான்.

இரண்டாம் உலகப்போரின்போது,
ஜேர்மனால் நோர்வே
ஆக்கிரமிக்கப் பட்டதையும், கிட்லரின்
நாசிப்படையால்
நாடு நாசமாக்கபட்டு, பெரும்தொகையான
மக்கள்

கொலையுண்டு குவிக்கப் பட்டதையும்,

தேசப்பற்று நிறைந்தவர்கள் சுவீடன்,
கனடா, பிரித்தானியா
முதலான தேசங்களுக்குச் சென்று,
இராணுவப்பயிற்சிகள் பெற்றதையும்,
அதில் டானியலும்
இணைந்து பணிபுரிந்ததையும்..

பயிற்சிபெற்றுத் திரும்பிவந்து
தேசமீட்புப்போரில்
அவர் ஈடுபட்டதையும்,.. தொடர்ந்த
யுத்தத்தில்
தனது கணவர் புரிந்த
வீரசாகசங்களையும் கூறியவள்,

சுதந்திரப்போரிலே இறந்த மாவீரர்களின்
வரிசையில்
தனது மணவாளனும் ஒருவராக
விளங்குவதில்
தான் பெருமை கொள்வதாகக்கூறி..
கிழவி மகிழ்வு பொங்கச் சிரித்தாள்!

தாய்நாடுதான் எல்லாவற்றையும்விட
உயர்சியானது.
நாட்டுக்குச் செய்யும்சேவையில்
இருக்கும் இன்பத்திற்கு
இணையானது எதுவுமில்லை.

எனவியந்தவள், சிரித்த கண்களை
கணவரின்
புகைப்படங்களின்மேல் செலுத்தி,
படரவிட்டு..
சிலவினாடிகள் மெய்மறந்து பேசாது
இருந்தாள்.

தங்கச்சியள் மூண்டுபேருக்கும் நல்ல
இடங்களிலை
கலியாணங்கள் செய்துவைச்சன்,
தம்பியையும் படிக்கவைச்சு டொக்டர்
ஆக்கினன்,
அம்மாவுக்கெண்டும் தனிவீடு கட்டி
அவவையும் சந்தோசமா வாழவைச்சன்!

அத்தோடை, நாட்டுக்கும்
என்னாலானதை
கொடுத்து வருகிறன்!

இதுகளெல்லாம் இந்தக் கிழவியின்ரை
பார்வையிலை
ஒருவகையான தேசத்தொண்டுதானே!

என்று திருப்திப்பட்டவன், லூசியாவிடம்
விடைபெற்று,
தனது வேறொரு வேலைத்தளத்தைச்
சென்றடையும்
வேகத்தில் பேருந்துத்
தரிப்பிடத்தைநோக்கி
ஓடினான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பாதணி

தாமரைச்செல்வி

ஒன்றன் பின் ஒன்றாக பல சைக்கிள்கள் தெருவில் போயின. சைக்கிள் மிதிக்கும் செருப்பு அணிந்த கால்கள்.......

ஒரே தாள லயத்துடன்..... விதம் விதமான செருப்புக்கள்...... அவன் பார்வையை கூர்மையாக்கினான் கனவில் கூட வருகின்ற செருப்புக்கள்......

மத்தியானம் ஒரு மணிக்கு வெய்யில் நெருப்பாக எரித்துக் கொண்டிருந்தது. புரட்டாதி வெய்யில்.

மழைக்கான எவ்வித அறிகுறியும் இல்லை. வெய்யிலைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாய் தெரியவில்லை. இந்த வெய்யில் நேரத்தில் கூட தெருவில் செருப்பு இல்லாமல் வெறும் கால்களுடன் எத்தனை பேர் நடந்து போகின்றார்கள். உள்ளங்கால்களில் சுடுவதில்லையா.... அவன் யோசித்துப்பார்ப்பான்.

விரிந்து கிளைபரப்பியிருந்த அந்த மரத்தின் கீழ் அவன் அமர்ந்திருந்தான். நாலைந்து பசளைப் பைகளை நிலத்தில் பரவி விரித்து அதன் மீது ஒரு புறம் பழைய செருப்புக்களை அடுக்கி வைத்திருந்தான்.

எத்தனை விதமான செருப்புக்கள்.......... அதன் நடுவே செருப்பு தைப்பதற்குரிய உபகரணங்கள், கத்தரிக்கோல், குறடு, உளி, சாவிகள் மஞ்சள் பிடிபோட்டஊசி, சிறு இரும்புக்கம்பிகள், பெட்டிக்குள் ஆணிகள், செருப்பு தைப்பவனின் சகல லட்சணங்களுடனும்....

நாலு தடி நட்டு மேலே கிடுகு போட்டிருக்கலாம். ஆனால் இந்த மரநிழலே போதும். அவன் குனிந்தபடி ஒரு கையில் செருப்பை வைத்துக்கொண்டு மறுகையால் ஊசி செருகி தைத்துக்கொண்டிருந்தான். தேன் மெழுகு தடவிய நைலோன் நூல் சிலும்பாமல் இறுக்கமாய் இழைந்து வந்தது.

கவனம் முழுவதையும் அந்தச் செருப்பில் பதித்திருந்தான். மெலிந்துபோன முகத்தில் நாலு நாள் தாடி. முகத்தில் வேர்வையின் பிசுபிசுப்பு. தைத்து முடிந்ததும் எதிரே நிற்பவரிடம் கொடுத்தான்.

"எவ்வளவு?"

"பத்து ரூபா தாங்கோ....."

"நாலு குத்து குத்தி தைச்சதுக்கு பத்து ரூபாயோ?"

"தோல் வெட்டிப் போட்டுத் தைச்சனான் ஐயா...."

"இந்தா ஐஞ்சு ரூபா...."

ஒரு ஐந்து ரூபாய்க் குத்தியை அவன் முன்னால் போட்டுவிட்டு அவர் தன்பாட்டில் நடந்து போனார்.

ஏழெட்டு ரூபாயாவது தந்திருக்கலாம் என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் காசை எடுத்து கீழே பசளைப்பையின் மறைவில் இருந்த சிறிய தகரப் பெட்டிக்குள் வைத்தான். இந்த ஐந்து ரூபாவுடன் இன்றைய வருமானம் பதினெட்டு ரூபா தான். இதை வைத்து என்ன செய்யலாம்..... நாடியை பரபரவென்று தேய்த்துக் கொண்டான். நாளைக்கென்றாலும் தாடியை எடுத்து விடவேண்டும். எதிரே தெருவை வெறித்துப் பார்த்தான்.

மல்லாவி வீதி அந்த மத்தியான நேரத்திலும் ஆட்கள் நடமாட்டத்துடன் நீண்டு கிடந்தது. இந்தத் தெரு எந்தப் பொழுதிலும் வெறுமையாய் காணப்படுவதில்லை. வாகனங்கள் தெருவில் போகும் போது கிளப்புகின்ற புளுதி காற்றில் பரவியது.

மத்தியானத்துடன் பாடசாலை விட்டு சின்ன வகுப்புப்பிள்ளைகள் சீருடை அணிந்து வந்து கொண்டிருந்தார்கள். சின்னச் சின்னச் சப்பாத்துக்கள்.... செருப்புக்கள்... அவனுடைய பிள்ளைகளின் நினைவு வந்தது. இடம் பெயர்ந்து வந்த பிறகு நான்கு பேரில் யாரும் பாடசாலை செல்வதில்லை.

தூரத்தே மூத்தமகன்..... பன்னிரண்டு வயது முருகு ஓடி ஓடி வருவது தெரிந்தது. உள்ளங்கால்கள் சுட்டிருக்க வேண்டும் மூச்சு வாங்க வந்தவன்.

"அம்மா காசு வாங்கி வரட்டாம். இனித்தான் சமைக்க வேணுமாம்" என்றான்.

அவன் பெட்டிக்குள் இருந்த பதினெட்டு ரூபாவையும் எடுத்துக்கொடுத்தான்.

"அரிசியும் மீனும் வேண்ட வேணும். காசு காணாது....." காசை கையில் வைத்து எண்ணிக் கொண்டு சொன்னான்.

"அரைக்கிலோ அரசி ஏழரை ரூபாக்கு வாங்கு. பத்து ரூபா மீனுக்கு காணாதே..."

"பத்து ரூபாய்க்கு என்ன மீன் வேண்டுறது"

"ஒரு கால்க்கிலோ சூடை வேண்டலாம்தானே...." முருகு நேராக சந்தைப் பக்கம் ஓடிப்போனான்.

அந்த வெய்யிலுக்குள் முருகு செருப்பில்லாத கால்களுடன் ஓடிப்போவதை கவலையோடு பார்த்தான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாவம் முருகு ஒரு பழைய பாட்டா செருப்பாவது தைத்து அவனுக்குக் கொடுக்க வேணும்.

ஒருநாள் முழுவதும் இடம் அசையாமல் இருந்து உழைத்தாலும் அரை வயிற்றுக்குத்தான் போதுமாய் வருகிறது. இடப்பெயர்வுக்கு பிறகு தான் இத்தனை கஷ்டங்கள்.

அந்தக் காலங்களில் அவன் கிளிநொச்சியில் நல்லதொரு உழைப்பாளி. வயல் வேலைகள் எல்லாம் அநாயாசமாகச் செய்வான். ஆவணி புரட்டாதி வரம்பு செதுக்குவதோடு வயல் வேலை தொடங்கும் . விதைப்பு வேலை இருக்கும். பச்சரிசிச் சோறும், பாரை மீன் குழம்பும் மணக்க மணக்க சாப்பிட்ட காலம் அது.

அந்த உழைப்பு விட்டு எட்டு வருடமாகிவிட்டது. இந்த செருப்பு தைக்கும் தொழிலை ஏற்றும் கொண்டாயிற்று. இப்படி செருப்புத் தைத்து சீவிக்கும் காலம் வரும் என்று முன்பு அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

ஆரம்பத்தில் செருப்புத் தைக்கப் பழகும் போது எத்தனை சிரமாய் இருந்தது. ஊசியும் தேன் மெழுகும் தடவிய நைலோன் நூலும் கையில் படிந்து வர ஒரு மாதம் பிடித்தது. சும்மா முடியாது. ஏதாவது உழைத்தாக வேண்டும். அவனை நம்பி மனைவியும் நான்கு பிள்ளைகளும்....



அவன் வேர்த்த முகத்தை கையால் வழித்து துடைத்துக் கொண்டான். தொண்டை காய்ந்து போக பக்கத்தில் வைத்திருந்த போத்தல் தண்ணீரை எடுத்து மடமடவென்று குடித்தான்.

காலையில் குடித்த கஞ்சி வயிற்றுக்குள் எப்போதோ கரைந்து விட்டிருந்தது. பகபகவென்று வயிறு புகைந்தது. இனி சமைத்து முருகு சாப்பாடு கொண்டு வர மூன்று மணிக்கு மேலாகிவிடும். அதுவரை பச்சைத் தண்ணீர்தான்.

இனி அடுத்து யாராவது செருப்புத் தைக்க வரமாட்டார்களா என்று தெரு நீளம் பார்த்தான். தெருவுக்கு எதிர்ப்பக்கம் மாருதி மருந்தகம் வாசலில் ஒரு பெண் நடந்து போனபோது அவள் செருப்பு அறுந்திருக்க வேண்டும். சட்டென்று அலுத்தபடியே குனிந்து பார்த்தாள். செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு சுற்றிலும் பார்த்துவிட்டு தெரு கடந்து அவனிடம் வந்தாள்.

ஒரு பக்க நாடா அறுந்து தொங்கிய செருப்பை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கினான். பள பளவென்று கறுப்பு நிற புதிய செருப்பு. "கொஞ்சம் நில்லுங்கோ, ரெண்டு நிமிசத்தில தைச்சுத் தந்திடுறன்......"

அவன் கவனமாய் பார்த்து தைக்கத் தொடங்கினான். தைத்து முடித்து நிலத்தில் வைத்து அழுத்திப் பார்த்து விட்டு "இந்தாங்கோம்மா" என்று கொடுத்தான்.

அவள் தன் காலில் போட்டுக் கொண்டு சரி பார்த்தாள். அவளது வெண்மையான பாதங்களுக்கு அந்த கறுப்பு நிற செருப்பு வசீகரமாகத் தெரிந்தது. கொஞ்சம் வியப்போடு பார்த்தான். அவள் தன் கைப்பையைத் திறந்தாள்.

"அஞ்சு ரூபா தாங்கோம்மா"


"ஒரு நிமிசம் கூட இல்லை. அஞ்சு ரூபா கேட்கிறாய் இந்தா" மூன்று ரூபாவை சில்லறையாக எடுத்துக் கொடுத்தாள்.

"இன்னும் ரெண்டு ரூபா போட்டுத்தாங்கோ"



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் எட்டி நடக்கத் தொடங்கிவிட்டாள்.

அவன் சில்லறைகளை எண்ணி பெட்டிக்குள் வைத்தான்.. இனி யார் வருவார்கள்.......

கிளிநொச்சி சந்தை வீதியில் தான் ஆரம்ப நாட்களில் செருப்பு தைத்துக்கொண்டிருந்தான். வரிசையாய் பல செருப்புத் தைக்கும் கடைகள்....... பலரோடு ஒருவனாக.........

ஆனாலும் அந்த நேரம் ஓரளவு வருமானம் 'சத்ஜெய' சண்டையின் போது 'ஷெல்' வந்து சந்தை வாசலில் விழத் தொடங்கியதில் ஒரு பொருளும் எடுக்காமலே ஓடிவர வேண்டியதாயிற்று. மல்லாவி வந்த பிறகு ஊசி, குறடு, உளி, கத்தரிக்கோல், பட்டை எல்லாம் மறுபடி வாங்க வேண்டியதாயிற்று. அவனால் செய்ய முடிந்த தொழில் இதுதான்.

மல்லாவி முன்பு அமைதியான பிரதேசமாக இருந்திருக்கக்கூடும். இப்போது எல்லாப் பக்கத்தில் இருந்தும் இடம்பெயர்ந்த சனம் வந்து குவிந்ததில் தெரு நெரிபட்டது.

எத்தனை மனிதர்கள், எத்தனை கடைகள் புதிது புதிதாய் திறக்கப்பட்டன. எல்லாத் தொழிலும் கூட புதிது புதிதாய்.......

அவன் இந்த மரத்தடியை தேர்ந்தெடுத்து அமர்ந்துவிட்டான். இடம் பெயர்ந்து வந்த பின் இரண்டு வருடமாய் இதே இடம்.

சிலநாள் நூறு ரூபாயும் வரும். பலநாட்கள் இருபது ரூபா கூட வருவதில்லை. இந்தத் தொழிலுக்கும் போட்டி இருக்கிறது.

கடைவீதிக்கு வருபவர்களில் இருபது பேருக்கென்றாலும் செருப்பு அறுந்து போகிறது. இன்னும் அதிகம் பேரினது செருப்புக்கள் அறுந்தால் நன்றாக இருக்கும்.

ஒரு நாளில் எத்தனை விதமான செருப்புக்களையும் சப்பாத்துக்களையும் அவன் பார்க்கின்றான். சின்னக் குழந்தைகளின் வித வித வண்ணங்களினால் ஆன கீச்சிடும் சப்பாத்துக்கள்......... பெண்களின் குதியுயர்ந்த நாகரீக செருப்புக்கள்........ ஆண்களின் முரட்டுத் தோலினால் ஆன செருப்புக்கள்...... பத்துத்தரம் வைத்து தைத்துக் கொடுத்த பின்னும் பதினோராவது தடவையாக தைக்கவரும் நைந்துபோன செருப்புக்கள்......

எப்படி அறுந்தாலும் அதை அழகாய் தைத்து விடும் லாவகம் அவன் கைகளுக்கு படிந்து போய் விட்டது.

எட்டு வருட அனுபவம், வேலையில் உள்ள நிதானம்.... அக்கறை நேரம் போகப் போக வெய்யிலின் உக்கிரம் அதிகமாகிறது..... வேர்வையின் வெம்மையில் சேட்டு உடம்போடு ஒட்டி ஈரமாகிறது. மனிதர்களின் சந்தடியும் அந்த இரைச்சலும் இறுக்கமான சூழலை உருவாக்குகிறது என்ன சத்தம்.....

பக்கத்து சாப்பாட்டுக் கடையிலிருந்து 'நந்திக்கடலோரம் முந்தைத் தமிழ் வீரம்......' பாடல் உச்ச சத்தத்தில் கேட்கிறது. தொம் தொம் என்று நெஞ்சுக்குள் தாளம் போட வைக்கிறது மரத்தின் இலைகளில் அசைவில்லை. இலைகளின் மீது படிந்து போயிருக்கும் செம்மண் தூசி.....

ஒரு மெலிந்த நாய்க்குட்டி அவனுக்கு அருகே வந்து சுருண்டு கிடக்கிறது. ஆட்கள் அருகாக நடந்து போகும் போது தலையை உயர்த்தி பார்த்து விட்டு மறுபடியும் மண்ணில் முகத்தைப் பதித்துக் கொள்கிறது.

வெகு நேரம் யாரும் செருப்புத் தைக்க வரவில்லை. சிறிது நேரம் சிறு கம்பியால் காது குடைந்து கொண்டிருந்தான். அதன் பிறகு என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஒரு பிச்சைக்கார கிழவன் அவனிடம் வந்து கை நீட்டினான். அவன் கூட ஒரு பழைய பாட்டா செருப்பு போட்டுக் கொண்டிருந்தான். அந்த செருப்பு அறுந்து போனால் இலவசமாக தைத்துக் கொடுக்கலாம். காசு இல்லை என்று சொல்லுவோமா என்று நினைத்துவிட்டு அதை தவிர்த்து ஐம்பது சதம் எடுத்துக் கொடுத்தான். இந்த ஐம்பது சதத்திற்கு இப்போது ஒரு பொருளும் வாங்க முடியாது. பிச்சைக்காரக் கிழவன் தெரு கடந்து எதிர்ப்பக்கம் நடந்து போனான். மாருதி மருந்தகம், ஒளியருவி என்று வரிசையாய் கை நீட்டிக் கொண்டு போனான்.

அவன் மறுபடியும் தெருவைப் பார்த்தான். வெய்யிலின் சூடு சிறிது தணிந்தது போலிருந்தது. மூன்று மணிக்கு மேலாகிறது. வயிற்றுக்குள் புகைந்தது. முருகு எப்போது வரப் போகிறான்.

அரை மணி நேரம் போன பின் முருகு ஓட்டமும் நடையுமாக பையுடன் வந்தான். சாப்பாடுப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான். பசி கொஞ்சம் கை கழுவி விட்டு சாப்பிடத் தொடங்கினான். சோறு ஆவி பறக்க இருந்தது. "என்னடா சூடையில இது சொதியோ............ குழம்போ............"

"குழம்புக்குப் போட தூள் இல்லை யாம்"

அவன் ஒன்றும் பேசாமல் சாப்பிட்டு முடித்தான் நாலு வாய் தண்ணீரை குடித்துவிட்டு போத்திலை மூடி பைக்குள் வைத்தான்.

முருகு சிறிது தள்ளி நின்று தெருவில் போகும் வரும் ஆட்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். வெய்யில் நன்றாக தணிகின்ற நேரம், இப்போது இன்னும் அதிகமாய் தெருவில் சனங்கள், தனியார் கல்வி நிறுவனம் முடிந்து கூட்டம் கூட்டமாய் மாணவர்கள்...... பல சைக்கிள்களில் மாணவிகள் இந்தப் பக்கமாய்ப் போனார்கள். சைக்கிள் மிதிக்கும் செருப்பு அணிந்த கால்கள்.......

கறுப்பாய்.... பொதுநிறமாய்.... வெள்ளையாய் ஒரே விதமாய் மிதிக்கும் கால்கள்........ வெய்யில் மறைந்து விட்ட நேரம் கண்ணாடி போட்ட மனிதர் வந்தார். காகிதத்தில் சுற்றிய செருப்பை நீட்டினார்.

"நீ போன கிழமை தைச்சுத் தந்ததும் சரிவரேலை. கீழே சுத்தி ஆணி அடிச்சு விடு. நான் உதில வெத்திலை வாங்கிக் கொண்டு வாறன்"

அவன் அந்தச் செருப்பை வாங்கிப் பார்த்தான். சிறிய இரும்பு பட்டடைய



www.tamileelamarchive.com

அருகில் இழுத்து அதில் செருப்பை வைத்து பெட்டிக்குள் சிறிய ஆணி தேடி எடுத்து சுத்தியலால் மெதுவாய் அடித்து இறுக்கினான்.

அவர் வந்ததும்
"இனி அசையாது, இந்தாங்கோ, பத்து ரூபா தாங்கோ" என்று கொடுத்தான்.

"சில்லறையாய் எட்டு ரூபா தான் இருக்கு. இப்ப இதை வைச்சிரு, பிறகு பார்த்து தாறன்."

அவர் சில்லறை தந்துவிட்டு செருப்பை எடுத்துக் கொண்டு போனார். இவர் முன்பொரு தடவை எட்டு ரூபா சொன்னபோது பத்து ரூபாயாகத் தந்தவர்.

அவன் சில்லறைகளைப் பெட்டிக்குள் போட்டு விட்டு நிமிர்ந்தான். இரண்டு இளம் பெண்கள் சைக்கிள்களை நிறுத்திவிட்டு அவனிடம் வந்தார்கள். சைக்கிளின் பின்னால் புத்தகப் பைகள்

எதிரே நின்று ஆளுக்கொரு செருப்பை நீட்டினார்கள். அவன் வாங்கித் தைக்கத் தொடங்கினான். புதிதாய் தோல் வெட்டி நன்றாய் அழுத்தி வைத்துத் தைத்தான்.

அழகான பொன் நிறப் பாதணிகள்.

அந்தப் பெண்கள் எதிரே வெறும் பாதம் நிலத்தில் பதிய நின்றார்கள் வெள்ளை வெளேரென்ற பாதங்கள். சீராக வெட்டப்பட்டு சிவப்பு சாயம் பூசப்பட்ட நகங்கள்............

அவன் தைத்துக் கொண்டிருந்த அந்த ஐந்து நிமிட நேரத்திலும் அவர்கள் தமக்குள் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"நேற்று அண்ணாக்கள் வீட்ட வந்தவையப்பா, பலகாரம் பார்சல் பண்ணி குடுத்து விட்டனாங்கள். மதியக்காவை விசாரிச்சனாங்கள். வன்னிவிளங்குளத்தில நிற்கிறாவாம்"

"ஓமப்பா கிபிர் வந்து சுத்தினாலே நெஞ்சிடிதான். வவுனிக்குளம் சேர்ச்சுக்கும் குண்டு போட்டவங்கள். எங்கதான் ஓடித்தப்பிறது..............."

"நேரம் போகுது கொஞ்சம் கெதியாய் தையுங்கோ......."

"ஓம் நானும் துணுக்காய்க்குப் போக வேணும்......" அவசரப்படுத்தினார்கள்.

தைத்து முடிந்து அவர்களிடம் நீட்டினான்.

"ரெண்டுக்கும் பதினைஞ்சு ரூபா தாறீங்களே......"

பத்து ரூபா தான் எதிர்பார்த்தான். பதினைந்து ரூபாவையும் கொடுத்து விட்டுப் போனார்கள்.

சிறிது நேரத்தில் பொழுது இருட்டத் தொடங்கியது. இன்றைக்குப் பரவாயில்லை. நாற்பத்திரண்டு ரூபா வந்திருக்கிறது. சில்லறைகளை எடுத்து மடியில் கட்டிக்கொண்டான். பழைய செருப்புக்களை அள்ளி பக்கத்தில் இருந்த மரப்பெட்டிக்குள் போட்டுக் கொண்டான்.

உபகரணங்களையும் எடுத்து பெட்டிக்குள் வைத்தான். சிறிது நகர்ந்து பசளைப் பைகளையும் உதறி எடுத்து மடித்து வைத்து விட்டு தூரத்தில் நின்ற முருகுவைப் கூப்பிட்டான்.

முருகு ஓடி வந்து பெட்டியை தூக்கி தன் தலையில் வைத்துக் கொண்டு முன்னால் போக அவன் கையூன்றி எழுந்து மரத்தில் சாத்தி வைத்திருந்த ஊன்றுகோலை கையில் எடுத்துக் கொண்டான். எட்டு வருடத்துக்கு முன் மிதிவெடியில் கால்களை இழந்த அவன்....... கைகளால் மட்டுமே செருப்புக்களை உணரும் அவன்....

# திடீர் புத்தர் சிலை விவகாரத்தை கண்டித்து யுனஸ்கோ முன்பாக அமைதிப் போராட்டம்







பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையத்தினரால் பாரிசில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான கல்வி, கலை, கலாச்சாரம், விஞ்ஞானம் ஆகியவற்றின் தலைமைக் காரியாலயமான யுனஸ்கோ நிறுவனத்தின் முன்பாக அமைதிப் போராட்டம் 01.07.2005 அன்று நடைபெற்றது.

திருகோணமலையில் சட்டவிரோதமாக - அரசியல் நோக்குடன் நிறுவப்பட்ட திடீர்ப்புத்தர் சிலையை கண்டித்தும், சர்வதேச சமுதாயத்திடம் இந்தப்புத்தர் சிலையை உடன் அகற்றுமாறு கோரியும் இந்த அமைதிப்போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த போராட்டத்தில் ஏராளமான தமிழீழ மக்களும், அத்துடன் சில தோழமை அமைப்புக்களின் அங்கத்தவர்களும் கலந்த கொண்டனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மௌனப் புதைகுழிகள்



## புல்லுமலைப் படுகொலை



பாலென்றால் பாலும், தேனென்றால் தேனும், நெல்லென்றால் நெல்லும் விரும்பியநேரம் விரும்பிய அளவினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வளம்மிகு கிராமம் புல்லுமலை. பலா, மா, வாழையென முக்கனியும் சொரிந்துகிடக்கும் தமிழ்ப்பூமி மலைநாட்டின் சாயலை ஒத்த இப்பிரதேசம் பார்ப்பவர் மனதை சுண்டியிழுத்துவிடும் அழகுடையது.

பல நூற்றாண்டுகளாய் தமிழர் வாழ்ந்த இப்பூமி இன்று புதர்மண்டிக்கிடக்கிறது. மண்ணைக்கிளறக்கிளற செல்வத்தை அள்ளிக்கொடுக்கும் இப்பிரதேசத்தை சிங்களக் குடியேற்றத்தினால் அபகரித்துவிட சிங்களதேசம் அவ்வப்போது முயன்றது. 1983ம் ஆண்டு தொடங்கி 1990ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு ஐந்துக்கு மேற்பட்ட தடவைகள் சிங்கள இராணுவத்தினரும் சிங்களக் காடையர் கும்பலும் இணைந்து இக்கிராமத்தை அழித்துவிடும் படுகொலைகளில் இறங்கினர். வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கொடூரக்கொலைகள் நடந்தன. வாய்திறந்து சொல்லமுடியாத பாலியல் கொடுமைகள் கொலையுடன் நிகழ்ந்தன. நாநூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாமல் புதையுண்டுபோனது.

ஒவ்வொரு தடவையும் ஓடி ஒழிந்து தப்பிக்கொண்ட ஒருசிலர் மட்டுமே இன்று உறுகாமம், கித்துள், மரப்பாலம், சின்னப்புல்லுமனை ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். வாழ்வின் முழுமையை தொட்டு நிற்கும் இவர்களும் இறந்துவிட்டால் புல்லுமலைப் படுகொலைகளின் உண்மைகளும் மறைந்து புதைந்துவிடும். அந்த முதுமைகளின் உள்ளத்தில் உறைந்துகிடந்த ஒரு பகுதியை கிளறியபோது உள்ளங்கொதிக்கும் உண்மைகள் வெளிவந்தன.

உறுகாமத்தில் இடம்பெயர்ந்து வாழும் சூசைமுத்து தம்பிமுத்து(அந்தோனி) என்பவரைச் சந்தித்தேன். அவரது தம்பியான செல்லத்தம்பி பேரின்பராசாவையும் அவரது மனைவியையும் இழந்துபோன நாளை வேதனையுடன் வெளிப்படுத்தினார்.



www.tamileelamarchive.com

1983ம் ஆண்டு சிங்கள ஆமியும், சிங்களக் காடையனுகளும் சேந்துவந்து நம்மட தமிழாக்களின்ற வீடுகள் எல்லாத்தையும் கொழுத்தினாங்கள். வீடுகளுக்க இருந்த நம்மட சொத்துக்கள் எல்லாத்தையும் வாகனங்களைக் கொண்டுவந்து ஏத்திக்கொண்டு போயித்தாங்கள். நாப்பது நாப்பத்தைந்து வீடுகளைக் கொழுத்தினாங்கள். எல்லோரும் பயத்தில் ஓடி சேனைப்பக்கம் போயிருந்திட்டாங்கள். நாங்களும் மூங்கில் மலையில இருக்கிற நம்மட சேனையில ஓடிப்போயிருந்தம் மறுகா மூங்கில் மலைக்கு வந்த சிங்கள ஆமி சேனையில இருந்த எல்லாரையும் சுத்திவளைச்சுப் பிடிச்சுட்டுப் போனான். அதில நம்மட தம்பியும் பெஞ்சாதியும் பட்டிட்டாங்கள். தம்பிட பொஞ்சாதி கர்ப்பிணியா இருந்தாங்கள் அவங்கள தம்பிக்கு முன்னால வச்சே மாறிமாறி கற்பழிச்சாங்கள். தம்பிய கையும் காலும் கட்டிப்போட்டு பொஞ்சாதியை வயித்த கத்தியால கிழிச்சு குழந்தையை வெளியில எடுத்துப்போட்டு சப்பாத்துக்காலால மிரிச்சுக்கொண்டிருந்தாங்க. கடைசியா தம்பிய காதுக்குள்ள வச்சு சுட்டுப் போட்டு நிர்வாணமாய்க்கிடந்த அவங்கட பொஞ்சாதியோட உடலுறவுவச்சுக் கொள்ளுற மாதிரி தம்பிடகால அவங்களின்ர உடம்பில தூக்கிப் போட்டு அவங்கையால தம்பிய கட்டிப்பிடிக்கிறமாதிரி முகத்தோட முகம்சேரவச்சிட்டுப் போயிருந்தானுவ. அவங்களுக்குப் பக்கத்தில கொஞ்சம்தள்ளி யோகநாதன், அவங்கட அப்பா ஆறுமுகத்தோட, ஜெகநாதன், ராமையா என ஆறுபேரை ஒண்டாக சுட்டுப் போட்டிருந்தாங்கள். ஒராளின்ர நெஞ்சை கத்தியால கிழிச்சு ஈரலெல்லாத்தையும் இழுத்து வெளீல போட்டிருந்தார்கள். பிடிச்சிட்டுப்போன மற்றாக்களுக்கு என்ன நடந்த தெண்டு இண்டைக்குவரையும் யாருக்கும் தெரியாது எனத் தன் தம்பி குடும்பத்துக்கு நடந்த துயரத்தை சொல்லும்போது அவரது கண்கள் கலங்கிக் குளமாகிறது.

பிள்ளைகளையும் தனது கணவனையும் சிங்கள இராணுவத்திடம் பறிகொடுத்த கதிர்வேலு இராசம்மா என்ற மூதாட்டி தன் மனச்சுமைகளை கொட்டினாள். 83, 84ம் ஆண்டுகளிலும் மறுகா 90ம் ஆண்டிலும் மாறி மாறி ஓவ் வொரு பிள்ளையளாய் கொண்டுபோய் சுட்டுட்டாங்கள். பாவியள் பிள்ளையப் பிடிச்சிட்டு போறானுகள் எண்டுசொன்னதும், பின்னால ஓடினன். ஓடிவராத சுட்டிடுவம் என்று மிரட்டினாங்கள். வீட்டுக்குப் போ விசாரிச்சிட்டு விட்டிடுவம் எனச் சொல்லிவிட்டு மறுபடியும் துவக்கநீட்டி சுடுவம் என மிரட்டினான். கொஞ்சநேரம் நிண்டப்புறம் காம்புக்குப்போனம். போனதும் சொன்னான் இண்டைக்கு போட்டு நாளைக்கு வாருங்க என்றான். மறுநாளைக்குப் போனம் விடல்ல அடுத்தநாள் போனம். போனப்போ சொன்னாங்க உங்கட பிள்ளையள காட்டில கொண்டுபோய் விட்டிட்டம் அங்கபோய்ப் பாருங்க எண்டு சொன்னதும் பயத்தில உடன நாங்கள் போகல்ல. ரெண்டொரு நாள் கழிச்சி தேடிப்போனா காட்டில நிறைய சவங்கள் கிடக்குது. அங்கால திரும்பினா தலையை வெட்டினால் போல கிடக்குது, இங்கால திரும்பினா காலைக் கையை வெட்டினால்போல கிடக்குது. பாக்கிற இடத்திலயெல்லாம் கிடக்குது. எண்ட பிள்ளையா உன்ர பிள்ளையா என்று ஒண்டையும் அடையாளம் தெரியல்ல. எல்லாம் ஊதி உருமாறிப்போச்சு. புதைக்கவும் முடியாம அங்க நிக்கப் பயந்திட்டு அப்படியே விட்டிட்டு வந்திட்டம். அதுக்கப்புறமாயும் ஆமி விடல்ல ஓடிட்டு திரும்பவும் ஊருக்கு வந்தபோது மற்ற மகனும் குளத்துக்கு மீன்பிடிக்கப்போன மகன் ஆறுமுகநாதனையும் அங்கே பிடிச்சு வெட்டிப்போட்டிட்டான். மீன் பிடிக்கப்போனவனக் காணேல்லயெண்டு தேடிப்போனபோது அங்கேயும் கழுத்து வெட்டினபடியும் கைவெட்டினபடியும் வெட்டிப் போட்டிட்டு போயிருந்தான். இனி இங்க இருந்த எல்லாச்சவத்தையும் அடக்கம் பண்ணீட்டு வந்தம். என தனது இரு பிள்ளைகளையும் இருவேறு காலங்களில் பறிகொடுத்த இராசம்மா என்ற மூதாட்டி அழுதழுதே வேதனையைக் கொட்டித்தீர்க்க முயன்றாள்.

மாரிமுத்து கணபதிபிள்ளை என்ற வயோதிபர் (வயது 72) தன்கண் முன்னால் நடந்தமுடிந்துபோன கொடுமைகளை ஆவேசம் பொங்க எடுத்துச்சொன்னார். "என்ர மகள், மருமகன், பிள்ளைகளெல்லாரையும் ஈவிரக்கம் இல்லாமல் வெட்டிப்போட்டுப் போனாங்கள். மருமகன் ராஜரட்ணம், மகள் கிருஸ்ணவேணியும், மூண்டு ஆம்பிளப் பிள்ளையளும், ஒரு மகளுமாய் எல்லாரையுமே கொண்டிட்டானுங்கள். சின்னப் பிள்ளைகளை காலைக்கிழித்துப் போட்டிருந்தான். நாம என்ன செய்யமுடியும் எல்லாத்தையும் அள்ளிப்போட்டுக் கொழுத்திப்போட்டு ஊரைவிட்டு வெளிக்கிட்டுப்போட்டம். ஒருக்கா இரண்டு தரமெண்டாப் பறவாயில்லை, ஒவ்வொருதடவையும் வந்து ஆம்பிளைங்களில ஓரளவான ஆக்களைப் பிடிச்சு சுடுவான். பொம்பிளையளப் பிடிச்சு கற்பழிச்சே கொல்லுவாங்க, மாறிமாறிக் கெடுகிறப்போ பெரியசத்தமா கதறுவாங்க. கொஞ்சநேரத்தில சூட்டுச்சத்தம் கேக்கும். அப்புறம் போய்ப்பாத்தா சவமாய்க்கிடப்பாங்க. 86ம் ஆண்டு ஊருக்குள்ள கொண்டுவந்து காம்பொண்டு போட்டாங்கள் போட்டாப்புறம் வீட்டில ஆம்பிள்ளையள் நிக்காம காட்டில ஓடி ஒழிச்சு வாழ்ந்து வந்தனாங்கள். அந்தநேரம் பகல்ல வராம விடியப்புறச்சாமத்தில வந்து கதவைதட்டி எழுப்புவான். ஆம்பிள ஆக்கள ஒதுக்கி ஒரு பக்கமாய் எடுப்பாங்கள், குமர்பிள்ளையள கதறக்கதற அநியாயம் பண்ணுவாங்கள். கொஞ்சப்பேர் துவக்க நீட்டிப் பிடிச்சிட்டு நிப்பாங்கள் நாங்கள் கடவுள மண்டாட வேண்டியதுதான். அவன் எல்லாம் முடிய சுட்டுப்போட்டிட்டுப்போவான். சில வேளையில விட்டிட்டுப்போவான்.

ஆம்பிள்ளையள காம்புக்கு கொண்டுபோய் அடிச்சு சித்திரவதை பண்ணுவான். பீப்பாவுக்க தண்ணி நிரப்பி அதுக்குள்ள அமுக்கிப் பிடிச்சுவச்சிருப்பான். போய் கெஞ்சி மண்டாடிக் கேட்டா நாளைக்கு வாருங்க விடுறம் எண்டு சொல்லுவாங்கள். மறுகாப் போய்க் கேட்டா நாங்கள் பிடிச்சிட்டு வரல்ல எண்டு சொல்லுவாங்கள். இனி என்ன செய்யிறது, என்ன நடந்ததெண்டு தெரியாமலே காணாமல் போயிடுவாங்க, இப்படியா புல்லுமலைக் கிராமத்தையே அழிச்சிட்டான். காட்டில ஓடி ஒழிச்சவங்கள் ஒண்டு ரெண்டு பேர் தப்பினது தான் இப்ப இருக்கிறாங்கள், என அந்த முதியவர் சொல்லி அழுதார்.

சூசைமுத்து யோசெப் (பாக்கியராசா) என்ற முதியவரைச் சந்தித்தேன். 90ம் ஆண்டு நடந்த மிகப்பெரும் படுகொலை அவரது உள்ளத்தை பெரிதும் பாதித்திருந்தது. நடுக்கத்தோடும் பதட்டத்தோடும் அந்த நாள் நினைவுகளை சொல்லத் தொடங்கினார்.

திடீரென ரக்வண்டியள், லொறியள், மெசினுகள் எல்லாத்திலேயும் வந்து ஊரை சுத்திவளைச்சாங்கள். நாங்க எல்லாரும் எல்லாப் பக்கத்தாலேயும் குழம்பி ஓடினாங்கள். படபடவெண்டு சூடு விழுந்து கொண்டிருக்கிறது. நம்மட வீட்டுக்கு மேல்பக்கத்தால முப்பத்தைஞ்சு நாப்பதுபேரை ஒண்டாய் கொண்டுபோறான். பொம்பிளையைப் பிடிச்சு கற்பழிச்சான். கண்ணால



www.tamileelamarchive.com

காணமுடியாவிட்டாலும் அவங்கள் கத்திக் குழறுற சத்தம் அவங்களால தாங்கமுடியாத அவலச் சத்தமாய்த்தான் இருந்தது. காப்பாற்றவோ நிண்டு பார்க்கவோ யாரும் நிக்கல்ல. எல்லாரும் சிதறி ஓடினாங்கள். நம்மட வீட்டுக்க வந்து கோழிக்கூட்டுக்க வந்து கோழியைப் பிடிச்சாங்கள். கோழியள் வெளிக்கிட்டு ஓட, அதைத் துரத்திப் பிடிக்கிறதில நிண்டாங்கள். அந்தநேரம் பாத்து நம்மட மனிசி பிள்ளைகளையும் கூட்டிட்டு ஓடினாள், நாம ஓடினபக்கமாய் நாப்பது ஐம்பதுபேர் நம்மளோட ஓடிவந்தாங்கள். குளவெட்டை ஒண்டைத்தாண்டி காட்டுக்குள்ள போயிருந்தம். இனி ஓடமுடியவில்ல செத்தா இதுக்குள்ளேயே சாகவேண்டியதுதான் எண்டு யோசித்துக்கொண்டிருந்தோம். நம்மட பிள்ளைக்கு நல்ல இருமல் இருமிறசத்தம் ஆமிக்கு கேட்டால் வந்து எல்லாரையும் சுட்டிடுவான். யோசிச்சுக் கொண்டிருக்க ஆமி வெட்டையால வாறன். நாம இருக்கிற பக்கமாய் நேராய் வாறான்.

முன்னுக்குவாற ஆமி துவக்கை நீட்டிக்கொண்டு வந்ததைப்பாத்தா நம்மளக் கண்டிட்டு வாறமாதிரியிருந்தது. அந்த நேரம் பாத்து பிள்ளையும் இருமத்தொடங்கீட்டுது. நம்மட ஒரு பிள்ளையால எல்லாரும் சாகவேண்டிவரப்போகுது. நம்மட பிள்ளையை கழுத்தை நசுக்கிக் கொண்டிட்டா நாப்பது ஐம்பதுபேரின்ர உயிரைக்காப்பாத்திடலாம். யோசிக்க நேரமிருக்கல்ல பிள்ளேட கழுத்தப்பிடிச்சன். நம்மட மனிசி பதறிப்போய் கையைப் பிடுங்கி எடுத்திட்டு வீவாப் போத்தலுக்க கிடந்த மாவில அள்ளிப் பிள்ளேட வாய்க்குள் போட்டாள். மா வாய்க்குள்ளபோய் உதடுகள் ஒட்டிக் கொண்டதால இரும முடியாம பிள்ள அத்துளிப்பட்டது. ஆமி நாம இருக்கிற இடத்திலயிருந்து இருபது முப்பது மீற்றர் தூரத்தால போய்க்கொண்டிருந்தானுகள். நல்லவேளை அவன் காணல்ல. பொழுதுபடும்வரை இருந்தோம். வெடிச்சத்தம் எல்லாம் நிண்டாப்பிறகு ஊருக்கபோனம். ஊருக்க போனால் என்னத்தப் பாக்கிறது. பீற்றர் குடும்பமும் அவங்களோட ஓடின நாப்பது ஐம்பது பேரையும் சுட்டுப் போட்டிருந்தானுகள். பொம்பிளையள கற்பழிச்சு நிர்வாணமாய் சுட்டுப்போட்டிருந்தாங்கள். பால்குடி குழந்தைகளையெல்லாம் சுட்டு தூக்கி வீசியிருந்தாங்கள். பாக்கியநாதன் குடும்பத்து குழந்தைகள் மூண்டுபேரை கால்ரெண்டையும் இழுத்துக் கிழிச்சுப் போட்டகொடுமையைப் பாத்தா ரத்தம் கொதிக்கும் என்று சொல்லும்போது வேதனையால் அவர் தொண்டை அடைத்துக்கொண்டது.

புல்லுமலைக் கிராமத்தை முற்றாக அழித்துவிடவேண்டுமென சிங்கள இராணுவத்தினர் முடிவெடுத்திருந்தனர். இதனால் வழிபாட்டு தலங்களில் வைத்தே பலர் கைதுசெய்யப்பட்டு சுடப்பட்டனர். 1984ம் ஆண்டு புல்லுமலைப் பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாப்பூசை நடந்துகொண்டிருந்தபோது திடீரென அங்கு நுழைந்த இராணுவத்தினர் அங்கு வழிபட்டுக்கொண்டிருந்த ஆண்கள் ஒன்பது பேரை பிடித்துச்சென்று சுட்டனர். அதே ஆண்டில் மீண்டும் கோயிற் பூசகர், சுற்றியிருந்த வியாபாரிகள் எல்லோரையும் பிடித்துச்சென்றனர். இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்ததெண்டு யாருக்கும் தெரியாது. 1986ல் புல்லுமலைக் கிராமத்தில் கைதுசெய்த ஆண்கள் ஏழுபேரை சுட்டபின்னர் ஆலயத்துக்கு முன்னால ரயர் போட்டுக் கொழுத்தினார்கள். ஆண்டவன் சந்நிதியில் அநாதைகளாய் சுடப்பட்ட, எரிக்கப்பட்ட தமிழரின் மரண ஓலம் யாருடைய மனச்சாட்சிகளையும் உறுத்தாமலே மறைந்து போனது. நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு என்ன நடந்ததென்பதை சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட தட்டிக்கேட்கவோ வெளியுலகத்துக்கு கொண்டு வரவோ முற்படவில்லை. சிங்கள இனத்தில் ஒரு உயிர் கொல்லப்பட்டால் உரக்கக் கத்தும் மனித உரிமையமைப்புக்கள் தமிழர் உயிர்கள் வகைதொகையின்றி பறிக்கப்பட்டபோது ஊமையாகிப்போனது ஏன்? புல்லுமலைக் கிராமத்தை கிளறிப்பார்த்தால் மனிதப்புதைகுழிகள் நிச்சயம் மலிந்துகிடக்கும். மனித உரிமையமைப்புக்கள் இதற்குத் தயாராகுமா? தயாராகினால் தமிழர் படுகொலைப்பட்டியல் பலநூற்றாண்டுகள் மறைந்து போனாலும் மட்டக்களப்பு மக்கள் மனங்களில் மாறாத வடு வாய் பதிந்திருக்கும். புல்லுமலைப் படுகொலையின் கொடிய பக்கங்களாய் இவை விரியும். 1983ம் ஆண்டு ஆடித்திங்கள் புல்லுமலைக் கிராமங்களின் பசு நிரைகள் கவர்ந்துகொல்லப்பட்டன. வியர்த்துழைத்த சொத்துக்கள் கொள்ளயிடப்பட்டன. பல நாள் உடலுழைப்பில கட்டிய வீடுகள் அனைத்தும் தீயிடப்பட்டன. சொத்துக்களை இழந்தாலும் மண்ணை இழக்கக்கூடாதென்ற உறுதியோடு எரிந்து போன சாம்பல்மேட்டில் எழுப்பிய வீடுகளை மீண்டும் 1984ம் ஆண்டு தீயிட்டுக் கொழுத்தினார்கள். 300 வீடுகள் எரிந்தபோது மக்கள் மனங்களில் எழுந்த துயரத்தீயை யாரும் அணைக்க முற்படவில்லை.

1985ம் ஆண்டு, தைத்திங்கள், 4ம் நாள் மூன்றாவதுமுறை கிராமத்துள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த நில அளவையாளர் உட்பட ஏழுபேரைச் சுட்டுக்கொன்றதோடு மீண்டும் வீடுகள் கொழுத்தப்பட்டு சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. சொத்துக்களை அள்ளியெடுத்து வீடுகளைக் கொழுத்தியும், எழும்பி ஓடாத எமது மக்களை கொலைசெய்து மிரட்டும் படலம் தொடங்கியது. ஒரு வாரம் கழித்து தைத்திங்கள், 10ம் நாள் கோயிற் பூசகர் உட்பட ஒன்பதுபேரை சுட்டுக்கொன்றனர்.

1986ம் ஆண்டு, கார்த்திகைத் திங்கள், 10ம் நாள் கொலை கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு என அகோர இனவெறியாட்டம் அரங்கேறியது. 103 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார்கள். 1987ல் குளத்தில மீன்பிடித்துக்கொண்டிருந்த 14பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். பெற்றுவளர்த்த பிள்ளைகளை இழந்து கட்டிக்காத்து வளர்த்த இளம்பெண் பிள்ளைகளை கண்ணுக்கு முன்னாலேயே பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொன்ற கொடுமை சுமந்து நொந்திருந்த எமது மக்கள் 1990ம் ஆண்டு, ஆடித்திங்கள் 9ம்நாள் மீண்டும் நடந்த கொடுமையை தாங்கமுடியாது கிராமத்தைவிட்டு வெளியேறினார்கள். பால்மணம் மாறாத குழந்தைகள் கிழித்தெறியப்பட்டு குடும்பம் குடும்பமாக நாப்பதுக்கு மேற்பட்டோர் சுடப்பட்டு பாலியல் வல்லுறவின் கொடூரம் தாங்கமுடியாது இறுதிமூச்சுவரை வாய்விட்டு அழுதுமடிந்துபோன பெண்களின் உடல்கள் கீறிக்கிழிக்கப்பட்டுக் கிடந்த காட்சியைக் கண்டு திசைமாறி ஓடிய எமது மக்கள். அந்த அழகிய பூமிக்கு இன்றுவரை திரும்பவில்லை,

வெளிக்காகண்டிக்குளம், புல்லுமலைக்குளம், பனிச்சையடிக்குளம் கல்பொத்தானைக்குளம், தும்பாலஞ்சேனைக்குளம், 40 ஏக்கர்குளம் என்றெல்லாம் நீர்வளம் குன்றாத குளங்கள் நிறைந்த இப்பிரதேசத்தில் சிங்கள இராணுவத்தினரும் சிங்களக் காடையர்களும் விரட்டியடிக்கப்பட்டாலும் எமது மக்கள் வாழ்வை இழந்து புதர்மண்டிக்கிடக்கின்றது. அழிவின் சின்னங்களாய் இந்து ஆலயமும், கிறீஸ்தவ தேவாலயமும், பாடசாலையும் புதர் மூடிக்கிடக்கின்றன. 139 விதவைப் பெண்கள் வாழும் வகையின்றி ஏதிலிகளாய் வாழ்கின்றனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சாந்தன்

# குயில் வீடு



இருந்தாற் போலக்கேட்ட குண்டுச் சத்தத்தில் திடுக்கிட்டான். அந்தப் புள்ளிக் குயிலும் திடுக்குற்றுச் சிலிர்த்துக் கொண்டது. தலையை உயர்த்தி. செம்மணிக் கண்களை உருட்டிப் பார்த்து. குழை அடர்த்திக்குள் ஊர்ந்து மறைந்து....

இந்த மரம் பலமாடிக் கட்டிடம் போல அவனுக்குப் படுகிறது. பறவைகளின் பலமாடி வீடு. அடிமரம் ஒரே நேரயாய் நெடுத்திருக்க. ஆளுயரத்திலிருந்து கொப்புகள். ஒவ்வொரு கணுவிலும் எல்லாப் பாட்டிலும் கிளைகள். கிடையாக வளர்ந்து பரவி.... இதற்கு ஆளுக்கொரு பெயர் சொல்கிறார்கள். பக்கத்து வளவில் மதிலோடு நிற்கிறது. பயன் என்னவோ இந்தப் பக்கம். சித்தப்பா வீட்டுக்குத்தான் அதிகம் என்று படுகிறது. காலை வெயில் ஒரு பொட்டைக் கூட இந்தப் போர்ட்டிகோவில் விடுவதில்லை.

சத்தம் மீண்டும் கேட்டது. குண்டு, ஷெல். அடுத்தடுத்து இரண்டு. இன்று வேளைக்கே தொடங்கிற்று. வீட்டைப் பார்க்க வெளிக்கிடவே முடியாது போலப் பட்டது. படியில் உட்கார்ந்தான் இன்னும் கேட்கிறதா?

...இல்லை பிறகு காணவில்லை. நின்று விட்டதாகத்தான் படுகிறது. பெரிய பிரச்சனை இல்லைப் போலும். கொஞ்சம் பார்த்துவிட்டுப் புறப்படலாம்......

இந்த மரத்தில் குயில்களைத்தான் அவன் கண்டிருக்கிறான். இரண்டு கருங்குயில்களும். இரண்டு புள்ளிக் குயில்களும் என்றொரு கணிப்பு. அது எவ்வளவு சரியென்று தெரியாது. எங்கோ அவை போகும். வரும். ஆனால் வாசம் இங்குதான். பாம்புகள் போல வளைந்து - ஊர்ந்து பழந்தேடி உண்டுவிட்டு. ஒதுங்கிச் சிறகடிக்கும் வீடு இதுதான் அவற்றிற்கு குயில்களின் இந்த வீடு எவ்வளவு அழகு! எவ்வளவு நிம்மதி! இரவிலுங்கூட சில சமயம் சிறகடியும் குரலொலியும் கேட்கும்..... இந்த மூன்று வாரப் பழக்கமாகி விட்டது.

சத்தங்கள் கேட்ட திக்கில்தான் அவன் வீடு. இப்படிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கிய இந்த ஒரு மாதத்தில். அவன் அயலில் ஐந்தாறு வீடுகள். அநியாயமாய்ப் போயின. கிடைத்ததை எடுத்துகொண்டு அவனும் குடும்பமும் இங்கே வந்தார்கள். விமானங்கள் ஒரு தடவை வட்டமிட்டுப் போய் அடுத்தாட்டம் திரும்பி வருவதற்குள் அவசர அவசரமாக ஓடி வந்தார்கள்.

வீடு என்ன கதியோ. இப்போது? இடையில் ஒரு தரம் மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வரமுடிந்தது. ஒவ்வொரு நாளும் காலையில். "ஒருக்கால் பாத்திட்டு வாறன்....." என்று புறப்படுவான். மனைவி மக்கள் மறிக்க ஏதோ சொல்லிச் சமாதானம் செய்துவிட்டுப் புறப்பட முடியும். ஆனால் வீட்டிக்குப் போய்.

"சந்திக்குஅங்காலை போறது புத்தியில்லை. போகாதையுங்கோ..." என்பதைக் கேட்கிற போது. நெஞ்சில் கனக்கிற வேதனையும் சைக்கிள் உழக்கிய களைப்புமாகத் திரும்ப நேரிடும்......

செய்யக் கூடியதைச் செய்துவிட்டு. ஓய்ந்து - அல்லது ஓடிந்து - உட்கார்கிற நேரங்களிலெல்லாம் இந்த மரம்தான் ஒரு உலகாய் அவன் முன் விரிகிறது.....

இருந்தாற் போல அந்தச் சத்தம். மீண்டும். இது வலுகிட்ட. இல்லை. இது குண்டுமல்ல. ஷெல்லுமல்ல. மதிலுக்கு அந்தப் பக்கத்தில்.

ஒவ்வொரு ஒலியுடனும் மரம் ஒரு தடவை நடுங்கிக் குலுங்கியது. பழுத்த இலைகள் சொரிந்தன. இந்த மரத்தின் அடியில் விழுகிற கோடாரியின் சத்தம்! அவன் திகைத்தான். என்ன இது? தறிக்கிறார்கள்?......ஏன்? பதுங்குழி மூடக்கூட இது உதவாதே?

குயில்கள் எங்கே போயிருக்கும்? இனி எங்கே போகும்?...... தாங்க முடியாதிருந்தது.

மதிலால் எட்டி.! "தறியாதையுங்கோ" என்று கூவ வேண்டும் போல அவதி.... எழுந்தான்.

திடீரென மீண்டும் படியில் குந்தி விம்மலானான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## குடியுரிமை பறிப்பு

தமிழர்கள் என்னும் காரணத்துக்காக குடியுரிமைச் சட்டம் என்னும் போர்வையின் கீழ் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை 1948.08.20 அன்று சிங்களப் பேரினவாத ஆட்சிபீடத்தினால் பறிக்கப்பட்டது.

## சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 1987.08.04 அன்று முதன் முதலில் தமிழீழ மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனமாகும்.

"இந்திய—இலங்கை ஒப்பந்தமானது எமது தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது" என் பதைமிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந் தார் தலைவர் அவர்கள்.



## வீரமுனைப் படுகொலை

அம்பாறை மாவட்டத்தில் 1990.08.10 அன்று கோவில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லீம் காடையர் களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். 100 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்ட இத்தாக்குதல், ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர் களது ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்டது.

## அராலிக் கண்ணிவெடித் தாக்குதல்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிங்களப் படைத்துறையின் வடபிராந்திய தலைமையை ஒரே தாக்குதலின் மூலம் இல்லா தொழித்தது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல். சிங்கள ஆட்சியாளர்களையும், படைத்தலைமையை யும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்தாக்குதல் 1992.08.08 அன்று நிகழ்த்தப்பட்டது.

## மயிலந்தனைப் படுகொலை

மட்டக்களப்பு மயிலந்தனைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத் தினரின் சுற்றிவளைப்பிற்குப் பயந்து பதுங்கச் சென்றவேளை, அங்கு பதுங்கியிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப் பொதுமக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர். 1992.08.09 ஆம் திகதி நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 50 தமிழ் மக் கள் கொல்லப்பட்டனர்.

## சண்டிலிப்பாய் படுகொலை

1995.08.21 அன்று 'ரெகன் பயர்' என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சில் 12 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

அம்பாறை மத்திய முகாம் (சென்றல் காம்ப்) பொலிஸ் நிலையம் மீது 2001.08.20 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றி கரத் தாக்குதலில் 25 ற்கும் மேற்பட்ட சிறீலங்காப் பொலிசார் கொல்லப்பட்டதுடன், பெருமளவு ஆயுதங்களையும், விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

## வல்வெட்டித்துறைப் படுகொலை

1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2,3,4 ஆகிய திகதிகளில் யாழ். குடாவின் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீடுகளிலும், வீதிகளிலும் நின்ற மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப் பட்டனர். இதேவேளை, இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைச் சம்பவத்தில் சிறுவர், மாணவர், வயோதிபர், பெண்கள் உட்பட 64 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, சொத் துக்கள், உடமைகள் என்பனவும் பெருமளவில் நாசமாக்கப் பட்டன.


www.tamileelamarchive.com

**02.06.2005**

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி 02.06.05 அன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் கூட்டமும் ஊர்வலமும் மாணவர்களினால் நடத்தப்பட்டுள்ளது.

**03.06.2005**

திருமலையில் புத்தர்சிலை அமைக்கப்பட்ட விவகாரத்தினைத் தொடர்ந்து இங்கு குவிக்கப்பட்ட படையினரை உடனடியாக விலகக் கோரி நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போது பருத்தித்துறையிலும், மீசாலையிலும், இராணுவக் காவலரண்கள் 03.06.05 அன்று பொது மக்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளன. பருத்தித்துறை முனைப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினரது காவலரண் ஒன்று 03.06.05 அன்று அப்பகுதி பொது மக்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டது.

**06.06.2005**

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் அரசுத் தலைவர் சந்திரிகா குமாரணதுங்கவின் திட்டத்தினை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு எம்.பிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் 06.06.05 அன்று முதல் கண்டி தலதா மாளிகையில் சாகும்வரையிலான உண்ணா விரதத்தினை ஆரம்பித்தனர்.

**08.06.2005**

அம்பாறை மாவட்டம் கோமாரிப் பகுதியில் 08.06.2005 அன்று நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினரும், தேச விரோதிகளும் இணைந்து மேற்கொண்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். சுகுண ரஞ்சன் மற்றும் நிவேகரன் ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள் ஆவார்.

**11.06.2005**

விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை அரசாங்கம் செய்துகொள்ளக் கூடாதெனக் கோரி கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னால் சாகும் வரை உண்ணாவிரத்தினை மேற்கொண்டு வந்த ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல் பே சோபித தேரர் 11.06.2005 அன்று காலை 9-18 மணியளவில் தனது உண்ணாவிரத்தினை நிறைவுக்கு கொண்டு வந்தார்.

**13.06.2005**

சிறீலங்கா அரச பௌத்த பேரினவாதத்தின் தமிழர் விரோதப் போக்கைக் கண்டித்து ஆயிரக்கணக்கான யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 13.06.2005 அன்று ஒன்று திரண்டு மாபெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

**13.06.2005**

சிறீலங்கா அரச பௌத்த பேரினவாதத்தின் தமிழர் விரோதப் போக்கை கண்டித்து ஆயிரக்கணக்கான யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று திரண்டு 13.06.2005 அன்று மாபெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

**15.06.2005**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இருந்து 15.06.2005 அன்று நள்ளிரவு 12 மணியுடன் விலகிக் கொண்டதாக ஜேவிபியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

**18.06.2005**

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன் வெனமன் அம்மையார் தலைமையிலான குழுவினர் 18.06.2005 அன்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

**19.06.2005**

யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் 19.06.2005 அன்று இடம்பெற்ற 'தமிழ்த் தேசியத்தின் குரல்' நிகழ்வில் தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமையுடன் வாழ முடிவு செய்துள்ளார்கள் என்ற பிரகடனம் தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக வெளியிடப்பட்டுள்ளது.

**24.06.2005**

24.06.05 அன்று ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் புனரமைப்புக்காக உருவாக்கப்படும் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் ஸ்ரீலங்கா அரச தரப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். அரச தரப்பில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலர் சுமணவீர ஜயசிங்கவும் விடுதலைப் புலிகள் தரப்பில் திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் திரு. ரஞ்சன் சண்முகலிங்கம் ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர்.

**28.06.2005**

ஸ்ரீலங்கா அரசுடன் இந்திய அரசு செய்து கொள்ளவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையைக் கைவிட வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் ஏற்பாட்டில் 28.06.2005 அன்று சென்னையில் உண்ணா நோன்புப் போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

**29.06.2005**

மட்டக்களப்பு ஈழநாதம் பத்திரிகையின் பணியாளர் திரு. கன்னமுத்து அரசகுமார்(பபி) 29.06.2005 அன்று பத்திரிகை விநியோகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா படைகளுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

**29.06.2005**

29.06.2005 அன்று அம்பாறை மாவட்டம் அட்டைப்பள்ளம் பகுதியில் தேசத்துரோகிகளின் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஈழநாதம் பத்திரிகையின் விநியோகப் பணியாளர் கன்னமுத்து அரசகுமார்(வவி) விடுதலைப் புலிகளால் நாட்டுப்பற்றாளராக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**30.06.2005**

மட்டக்களப்பு மாவட்டம் ஊறணிப் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் உட்பட மூன்று இராணுவத்தினர் இனந்தெரியத நபர்களினால் 30.06.2005 அன்று காலை 10.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

**03.07.2005**

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய படையணிகளில் ஒன்றான இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக உந்துருளிப் படை அணியின் இரண்டாவது அணி 03.07.2005 அன்று தனது பயிற்சிப் பாசறையை நிறைவு செய்துள்ளது. வன்னியில் பிரத்தியேகமான இடமொன்றில் நடைபெற்ற இந்த நிறைவு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு படையணியினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

**05.07.2005**

முதற் கரும்புலி கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன் - துன்னாலை) வெடி மருந்து தாங்கிச் சென்று பகையழித்து வீரகாவியம் படைத்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 05.07.2005 அன்று காலை 9.30 மணிக்கு கரும்புலி நாள் நிகழ்வுகள் இடம் பெற்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாவீரர் நினைவு மெய்வல்லுனர் போட்டிகள்






பிரான்ஸ்

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள்





நெதர்லாந்து

கரும்புலிகள் நாள், கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வுகள்






சுவிற்சலாந்து



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பிரான்ஸ்

தமிழர் விளையாட்டு விழா





சுவிற்சலாந்து

சுவிஸ் தமிழர் இல்லம் - பிறிபோக்
சுவட்டு, மைதான, மெய்வன்மையாளர் போட்டி - 2005





சுவிற்சலாந்து

தேசிய மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகள்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### கரும்புலிகள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தலைவரின் பாதுகாப்பையுமே முன்வைத்துவிட்டு செல்கிறார்கள் - பொட்டம்மான்

06 ஜூலை 2005

கரும்புலி வீரர்கள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தேசியத்தலைவரின் பாதுகாப்பையுமே முன்வைத்துவிட்டு சென்றதைக் கண்டிருக்கின்றோம். அவர்களது விருப்பமான தேச விடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்த கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையுமென தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் திரு. பொட்டம்மான் அவர்கள் தெரிவித்துள்ளார். அனைத்துலக தமிழ் ஊடகம் ஒன்றில் கரும்புலிகள் நாள் தொடர்பாக கருத்துரைத்த போதே திரு.பொட்டம்மான் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### கல்முனையில் துப்பாக்கிச்சூடு: புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் பலி

06 ஜூலை 2005

06.07.2005 அன்று முற்பகல் 11.30 மணியளவில் கல்முனைப் பகுதியில் வைத்து காவல்துறையின் நாசகார தடுப்பு பிரிவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். உந்துருளி ஒன்றில் கல்முனை காவல்துறை நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த இவர் மீது அப்பிரதேசத்திற்கு சமீபமாக பதுங்கிக்காத்திருந்த இனந்தெரியாதோரினாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

### விடுதலைப் புலிகளிடம் கட்டுப்பாட்டுப்பிரதேசம் இருப்பது உண்மையே - சரத் என்.சில்வா

07ஜூலை 2005

நடைமுறையில் பார்க்கும் போது விடுதலைப் புலிகளிடம் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்று இருப்பது உண்மைதான் அப்பிரதேசங்களில் சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு கட்டமைப்பு ஒன்று அவசியம் இருக்கவேண்டும் இதனால் இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்க முடியாது என பிரதம நீதியரசர் சரத். என்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

### லண்டனில் அடுத்தடுத்து 4 குண்டு வெடிப்புக்கள்! 40பேர் பலி

07 ஜூலை 2005

பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் நிலத்தடி தொடரூந்துகள், மற்றும் இரட்டை அடுக்கு பேரூந்து ஆகியவற்றை இலக்கு வைத்து அல்-கைதா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் மேற்கொள்ளப்பட்ட நான்கு குண்டுத் தாக்குதல்களில் 40 பேர் வரை கொல்லப்பட்டும் 700 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 07.07.2005 அன்று காலை 8.30 மணிக்கும் 9.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மூன்று நிலத்தடி தொடரூந்துகள் மற்றும் ஓர் இரட்டை அடுக்கு பேரூந்து என்பன வற்றில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளன.

### உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தினர் வன்னி வருகை

09 ஜூலை 2005

உலகப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு இ. செல்லையா தலைமையில் தென்னாபிரிக்க தமிழர்களை உள்ளடக்கிய குழுவினர் வன்னிக்கு வருகை தந்துள்ளனர். சுனாமியால் பாதிப்படைந்துள்ள முல்லைத்தீவு வடமராட்சி கிழக்குப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட அவர்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகக்கட்டமைப்பினையும் பார்வையிட்டுள்ளனர்.

### கொழும்பில் நால்வர் சுட்டுக்கொலை

09 ஜூலை 2005

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு முன்னால் இன்ரகூலர் ரக வாகனமொன்றிற்குள் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் நான்கு பேரின் சடலங்களைத் தாம் கண்டெடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா காவல்துறையினர் தெரிவித்திருந்தனர்.



### நவாலி தேவாலயத்தில் பலியானோருக்கு அஞ்சலி

09 ஜூலை 2005

1995 யூலை 09ம் திகதி நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சில் பலியான 247 பொது மக்களின் 10ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 09.07.2005 அன்று சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு வணக்க நிகழ்வு நடைபெற்றது.

### புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா அரசு ஏற்றுள்ளது - விதார் ஹெல்கிசன்

10 ஜூலை 2005

விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார். நெருக்கடிகளுக்கான தீர்வைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக கடந்த 5ம் திகதி ஒஸ்லோ பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### திருமலைத் தாக்குதலில் திருமலை மாவட்ட கடற்புலிகளின் தளபதி டிக்கான் உட்பட நால்வர் வீரச்சாவு

10 ஜூலை 2005

திருமலை மாவட்டம் செல்வநாயகபுரம் பகுதியில் உள்ள அரசாங்க பண்ணை விடுதியில் தங்கியிருந்த போராளிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் திருகோணமலை மாவட்ட கடற்புலிகளின் தளபதி லெப். கேணல் டிக்கான் உட்பட இரண்டு போராளிகளும் தேசிய துணைப்படை வீரர் மற்றுமோர் ஆதரவாளர் என நான்கு பேர் வீரச்சாவடைந்தனர்.

### திருமலைத் தாக்குதலில் வீரச்சாவடைந்தோரின் விபரங்கள் அறிவிப்பு

11 ஜூலை 2005

10.07.2005 அன்று திருமலையில் ஸ்ரீலங்கா படையினரின் சதியால் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளினதும், தேசிய துணைப் படை வீரர் மற்றும் நாட்டுப்பற்றாளரினதும் விபரங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன. வீரச்சாவடைந்தோரின் விபரம் பின்வருமாறு:

- லெப்டினன்ட் கேணல் டிக்கான் அல்லது வேங்கை
(செபஸ்ரியான் பிள்ளை ஜெயச்சந்திரன்)
6ம் வட்டாரம் பெரியகுளம்,
சாம்பல்தீவு.

- 2ம் லெப்டினன்ட் இளம்புலி
(தங்கராசா விஜேந்திரராசா)
சூனித்தீவு மூதூர்.

- அனுசன்- தேசியத் துணைப்படை
(குலசிங்கம் அனுசன்)
6ம் வட்டாரம், சாம்பல்தீவு.

- பாபு - நாட்டுப்பற்றாளர்
(முத்தையா கோணேஸ்வரன்)
அன்புவெளிபுரம், திருகோணமலை

ஆகியோரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### போராளிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்காவிட்டால் யாழில் உள்ள படையினரின் உணவு, குடிநீர் விநியோகம் தடுக்கப்படும்

11 ஜூலை 2005

அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளிற்கு உரிய பாது காப்பு வழங்கப்படாவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள படையினரின் உணவு மற்றும் குடிநீர் விநியோகங்களை தடைசெய்யப்போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடமாராட்சி கடற்றொழிலாளர் சமா சத்தின் பொது முகாமையாளர் சூரியகுமார் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

### சிவராம் கொலை வழக்குத் தொடர்பான ஆவணங்கள் எரித்து அழிப்பு

12 ஜூலை 2005

கொழும்பு-கடுவெல நீதிமன்ற ஆவணக் காப்பகத்தில் இருந்த மாம னிதர் சிவராம் அவர்களின் கொலை தொடர்பான கோவையும் மற்றும் பல ஆவணங்களும் எரித்து அழிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன. ஆவணக்காப்பகத்தின் ஜன்னலிலும் கதவிலும் தீ மூட்டப் பட்டுள்ளது. இது தொடர்பாக நீதிமன்ற வளாகத்தில் கடமையாற்றிய இரு காவற்துறை அதிகாரிகளும் காவலாளி ஒருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



### கைக்குண்டு வீச்சில் இளைஞர் பலி

12 ஜூலை 2005

ஏறாவூரில் 11.07.2005 அன்றிரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத நபர் களால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றில் இளை ஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர் சவுக்கடி ஏறாவூரைச் சேர்ந்த 19 அகவையுடைய சங்கரப்பிள்ளை பேரின்பம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### திருமலைப் படுகொலைகளைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

12 ஜூலை 2005

திருகோணமலையில் போராளிகள் படுகொலை செய்யப்பட்டமை, கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கொலைகளைக் கண்டித்தும், பொதுக்கட்டமைப்பினை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக மாவணவர்கள் 12.07.2005 அன்று காலை மாபெரும் மறியல் போராட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியும் கலந்துகொண்டார்.

### விபத்தில் போராளி சாவு

12 ஜூலை 2005

12.07.2005 அன்று ஏற்பட்ட விபத்து ஒன்றில் போராளி ஒருவர் சாவடைந் துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். மேஜர் தவக்குமாரி என்று அழைக்கப்படும் மருதங்கேணி வடக்கு தாளையடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேலு பவானிதேவி(பவா) என்ற போராளியே சாவடைந்தவர் ஆவார்.

### புத்தளத்தில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

13 ஜூலை 2005

13.07.2005 அன்று காலை புத்தளம் மதுரங்குளிப் பகுதியால் சென்று கொண்டிருந்த கிருஷ்ணன் ரவிச்சந்திரன் என்ற இளைஞர் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத குழுவொன்றினால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அம்பாறையில் மூவர் சுட்டுக்கொலை

15 ஜூலை 2005

அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் ஆறாம் கட்டை என்னும் இடத்தில் இனந்தெரியாத நபர்களினால் மூவர் சூட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். முச்சக்கர வண்டி ஒன்றில் சென்று கொண்டிருந்த போதே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த முச்சக்கர வண்டியும் எரியூட்டப்பட்டுள்ளது.

### எமது விடுதலை, நல்வாழ்வு சிங்களவரின் கருணையினாலோ அரசின் பெருந்தன்மையினாலோ விளையப்போவதில்லை - திரு.பொட்டம்மான்.

16 ஜூலை 2005

எமது விடுதலையென்பது அல்லது மக்களின் நல்வாழ்வு என்பது சிங்களவர்களின் கருணையினாலோ சிறீலங்கா அரசின் பெருந் தன்மையினாலோ விளையப்போவதில்லை. இவ்வாறு தமிழீழ புல னாய்வுத்துறைப் பொறுப்பாளர் திரு. பொட்டம்மான் அவர்கள் தெரிவித் துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் தாக்குதற் தளபதியான லெப்டினன்ட் சீலன் அவர்களின் இருபத்திரெண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு போராளிகள் மத்தியில் சிறப்புரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

### கருணா குழுவைச் சேர்ந்தவர் சிலாபத்தில் சுட்டுக்கொலை

16 ஜூலை 2005

கருணா குழுவைச் சேர்ந்தவர் என நம்பப்படும் ஆறுமுகம் குகேந்திரன் என்ற நபர் புத்தளம் மாவட்டம் சிலாபத்தில் 16.07.2005 அன்று நண்பகல் 12.30 மணியளவில் உள்ள விடுதி ஒன்றிற்கு சென்ற போது இனந் தெரியாத இளைஞர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ ரைச் சுட்டுக்கொன்ற இளைஞர் சம்பவ இடத்திலிருந்து முச்சக்கர வண்டி ஒன்றில் தப்பிச் சென்று இடைவழியில் பேரூந்து ஒன்றில் ஏறிச் சென்று கொண்டிருந்த போது காவல்துறையினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

### மட்டக்களப்பில் இராணுவச் சிப்பாய் சுட்டுக்கொலை

16 ஜூலை 2005

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமுலைப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகாமையில் வைத்து 16.07.2005 அன்று மாலை 5.30 மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவச்சிப்பாய் ஒருவர் இனந்தெரி யாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன. 12வது ஆட்டிலறிப் படையணியைச் சேர்ந்த எம்.எஸ்.கே கந்தபொல என்ற இராணுவச்சிப்பாயே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதி கட்டத்திற்கு வந்துவிட்டது - தமிழ்ச்செல்வன்

17 ஜூலை 2005

போர் நிறுத்த ஒப்பந்தம் ஓர் இறுதிக்கட்டத்திற்கு வந்து விட்டதாகவே நாம் உணர்கிறோம். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி விடுதலைப் புலிகளின் பயணங்களிற்கான பாதுகாப்பினை வழங்க சிறிலங்கா அரசு உறுதியான பதில்களை தரவில்லை. அவர்களின் உறுதியான பதில் கிடைக்காவிட்டால் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னதான எமது பயண வழிமுறைகளையே நாம் கையாள்வோம். இராணுவம் அதனைத் தடுக்க முற்பட்டால், எம்மீது தாக்குதல் நடாத்த முற்பட்டால் நாம் எம்மைத் தற்காக்கும் நடவடிக்கைகளில் இறங்கவேண்டி வரும் அப்போது போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்து விடும் என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார். 17.07.2005 அன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### ஆசிய - பசுபிக் ஜனநாயக தலைவராக ரணில்

19 ஜூலை 2005

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆசிய - பசுபிக் ஜனநாயக சங்கத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச ஜனநாயக சங்கத்தின் பிரிவான ஆசிய - பசுபிக் ஜனநாயக சங்கம், ஜனநாயகம் சாகடிக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு உதவுவதுடன் ஜனநாயகத்தின் பெறுமதியையும் எடுத்துரைத்து வருகின்றது.

### சேதுக் கால்வாய் திட்டத்தை கைவிடக் கோரி மன்னாரில் பேரணி

20 ஜூலை 2005

இந்திய அரசினால் நிறைவேற்றப்படவுள்ள சேதுக் கால்வாய்த் திட்டத்தை கைவிடக்கோரியும் மன்னார் பாலத்துக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அகற்றக் கோரியும் மன்னார் மாவட்ட மீனவர்கள் 19.07.2005அன்று செவ்வாய்க் கிழமை மன்னார் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தியுள்ளனர்.

### காவற்துறையினர் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர்பலி - காவற்துறையினரின் பதில் தாக்குதலில் பொதுமகன் பலி

22 ஜூலை 2005

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியில் வைத்து 21.07.2005 அன்றிரவு 11:00 மணியளவில் உந்துருளியில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஸ்ரீலங்கா காவற்துறையச் சேர்ந்த ஒருவர் பலியாகியுள்ளார். இதனையடுத்து ஸ்ரீலங்கா காவற்துறையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

### தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் அறிமுகம்




23 ஜூலை 2005

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் 23.07.2005 அன்று கிளிநொச்சில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகத்தில் இவ் அறிமுகவிழா நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் அவர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு.கரிகாலன் அவர்களும் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

### படைமுகாமிற்குள் வந்து துப்பாக்கியை எடுத்துச் சென்ற மாணவனை பின்தொடர்ந்த சிப்பாய் சுட்டுக்கொலை

26 ஜூலை 2005

திருமலை மிகிந்தபுர பாடசாலையில் ஆண்டு 10ல் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் 25.07.2005 அன்று நள்ளிரவு அருகில் உள்ள இராணுவ முகாமினுள் சென்று அங்குள்ள சிப்பாய் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சென்ற வேளையில் அவனைப் பின் தொடர்ந்து துரத்திய சிப்பாய் ஒருவரை அந்த துப்பாக்கியினால் சுட்டுக் கொன்றுள்ளான். சிப்பாயை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிய மாணவனை ஏனைய இராணுவ வீரர்கள் சுற்றிவளைத்து பிடித்துள்ளனர்.

### தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இரு இளைஞர்களின் சடலங்கள் வவுனியாவில் மீட்பு

26 ஜூலை 2005

வவுனியா மாவட்டம் மணிப்புரம் பகுதியில் தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இரு இளைஞர்களின் சடலங்களை வவுனியா காவற்துறையினர் மீட்டுள்ளனர். கொல்லப்பட்ட இரு இளைஞர்களும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



### வவுனியா பேராளர் மாநாட்டில் பெருந்திரளானோர் பங்கேற்பு

27 ஜூலை 2005

தமிழீழ தேசிய எழுச்சி மநாடு வவுனியா வைரவர் புளியங்குளம் சிறுவர் பூங்கா ம்மைதானத்தில் 27.07.2005 அன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி எழுச்சி பூர்வமாக நடைபெற்று வருகிறது. இதில் பெரும் திரளாக தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சென்ற பேராளர்கள் கலந்து கொண்டுள்ளனர். நிகழ்வின் ஆரம்பத்தில் கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் தாயார் பொதுச் சுடரினை ஏற்ற கப்டன் மில்லரின் தந்தையார் தேசியக் கொடியினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

### ஈபிடிபி தேசவிரோதி யாழில் சுட்டுக்கொலை

28 ஜூலை 2005

ஈபிடிபி தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த சூரியம்பிள்ளை நிக்சன் என்பவர் 28.07.2005அன்று நண்பகல் 12.30 மணியளவில் யாழ். நகரில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு

Tel: 01 - 43 58 11 42 Fax: (33) 1 43 58 11 91 e.mail: info@erimalai.info

ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

www.erimalai.info

www.tamileelamarchive.com



தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com